
சுவடி : 40
ஏடு : 3
செப்டம்பர் 2016
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**இரா. பச்சமலை**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**வாலாசா வல்லவன்**
முனைவர்
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

ஆசிரியவுரை

# தந்தை பெரியாரின் 138ஆம் பிறந்த நாள் சிந்தனை



தந்தை பெரியாரின் தலைசிறந்த பண்பு எது? எந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டாலும் - எந்த வேலைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டாலும் அதற்குத் தம்மை முழுவதுமாக ஒப்படைத்துவிடு வதுதான்.

காங்கிரசிலிருந்த 6.5 ஆண்டுக்காலமும் அவர் அப்படியே இருந்தார்.

பார்ப்பனரல்லாத இந்துக்கள், இந்திய அளவில், 94 விழுக்காட்டுப் பேர்; தென்னகத்தில் 97 விழுக்காட்டுப் பேர்.

இவர்களுள் இரண்டொரு உள்சாதியினரைத் தவிர, மற்றெல்லாப் பார்ப்பனர் அல்லாத உள்சாதியினரும் பார்ப்பனப் புரோகிதத்தைப் பின்பற்றினர்; கோவில் வழிபாடு - இறுதிக்கடன் முதலான எல்லா இன்ப-துன்ப நிகழ்ச்சிகளுக்கும் பார்ப்பனரை அழைத்தனர். பார்ப்பனரைக் குருவாக ஏற்றனர்.

நீதிக்கட்சித் தலைவர்களுள் டாக்டர் நாயர் ஒருவரைத் தவிர, மற்றெல்லோ ரும் பார்ப்பனியத்தை நம்பினவர்கள். ஆனால் படிப்பை - அரசு வேலைகளை - உள்ளாட்சி நிறுவனங்களை - சட்டப் பேரவைகளை பார்ப்பனர்கள் ஆக்கிர மித்து ஆதிக்கம் செலுத்தினர் என்பதால், 1921 முதல் 1928க்குள் அந்த ஆதிக் கங்களை, ஆட்சித் திட்டங்கள் மூலம் ஆட்டங்காணச் செய்தனர். அதுதான் அவர் கள் போட்ட கெட்டியான அடித்தளம்.

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய சென்னை மாகாண சட்டப்பேரவை இடங்கள் 98.

1920 நவம்பர் தேர்தலில் 81 இடங்களில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது; 1923 தேர்தலில் 61 இடங்களை மட்டும் பெற்றது; 1926 நவம்பர் தேர்தலில் 22 இடங்களை மட்டும் பெற்றுப் படுதோல்வி அடைந்தது.

சமீன்தாரர் தொகுதியில் ஆந்திராவில் போட்டியிட்டார் பனகல் அரசர். அவரைத் தோற்கடிக்கத் தவம் கிடந்தார், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர். அதற் காக ஆந்திராவில் ஒரு சிறிய சமீனை விலைக்கு வாங்கி, பனகல் அரசரை எதிர்த்து அவர் போட்டியிட்டுத் தோற்றார். பனகல் அரசர் வென்றார்.

1925 நவம்பரில் காங்கிரசை விட்டு வெளியேறிய ஈ.வெ.ரா. 1926இல் தோற்றுப்போன நீதிக்கட்சிக்கு ஆறுதல் சொல்லவில்லை.

“தேர்தல் தோல்வியால் ஒன்றும் குடி முழுகிவிடவில்லை. பார்ப்பனர் அல்லா தாருக்குப் படிப்பையும் பதவியையும் பிடிக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் இருக்கிறது. அது போதாது. பார்ப்பனரல்லாதாருக்குச் சுயமரியாதை உணர்வு இல்லை. பார்ப்பனியத்தை ஒழிக்க - “பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை இயக்கம்” ஒன்றைக் காணவேண்டும்; தலைவர்கள் உடனே கூடுங்கள்; உனே சுய மரியாதை இயக்கம் காணுங்கள்” என, அறைகூவல் விடுத்தார். பனகல் அரச ரையும், ஏ. இராமசாமி முதலியாரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு தென்மாவட்டங்களில் மட்டும் ஈ.வெ.ரா. தொடர் பயணம் வந்தார்.

நீதிக்கட்சியின் பத்தாவது மாகாண மாநாட்டை மதுரையில், 26.12.1926இல், ஏ. பரசுராம் பாட்ரோ (A.P. Patro) தலைமையில் நீதிக்கட்சித் தலைவர்கள் கூட்டினர். 12.12.1926, 19.12.1926இல் "குடிஅரசு" இதழில், தம் நோக்கம் பற்றி ஈ.வெ.ரா. தெளிவுபட எழுதினார். அவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டது அந்த மாநாடு. இவ்வாறுதான் "பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை இயக்கம்" 26.12.1926இல் தோற்றுவிக் கப்பட்டது.

1929க்குள் சுயமரியாதை இயக்கத்துக்குப் பெரும் படை உருவாகிவிட்டது.

17, 18.2.1929இல் செங்கற்பட்டில் நடந்த "முதலாவது மாகாண சுயமரியாதை மாநாட்டில்" பார்ப்பனரல்லாத இந்துக்களான 97 விழுக்காட்டுப் பேரின் சமூக விடு தலைக்கும், பெண் விடுதலைக்கும், தன் தன்மானத் துக்கும் அறிவுக்கும் விடுதலைதரும் எல்லாத் திட்டங் களையும் அறிவித்தார், ஈ.வெ.ரா. "சுயமரியாதை இயக்கத்தின் தோற்றுநர் ஈ.வெ.ரா." என அம்மாநாடு உலகுக்கு அறிவித்தது. அதற்கு முன்னரே, 1928இல் பனகல் அரசர் மறைந்துவிட்டார். நிற்க.

1934இல் திருப்பூரில் நடைபெற்ற "செங்குந்தர் வாலிபர் மாநாட்டு"க்குத் தலைமையேற்ற காஞ்சி சி.என். அண் ணாதுரையை, அங்கேதான் முதன்முதலாகச் சந்தித் தார், ஈ.வெ.ரா. அவருடைய தலைமையில் நடந்த மாநாட்டில் "சமதர்மம்" பற்றி ஈ.வெ.ரா. பேசினார். 1927இல் திருநெல்வேலி மாநாட்டிலேயே ஈ.வெ.ரா. "சமதர்மம்" பற்றிப் பேசினார்.

**1926இல் "சுயமரியாதை", 1927இல் "சமதர்மம்"- இந்த இரண்டும்தான் ஈ.வெ.ரா.வின் தலையான கொள்கைகள்.**

1936 முதல் சி.என்.ஏ. பெரியாரின் இயக்கத்தில் செயல்பட்டார். நம்மவரில் அன்று எம்.ஏ. படித்தவர் அரிதினும் அரிது. கொஞ்ச காலம் நீதிக்கட்சி முதலமைச் சர் பொப்பிலி அரசரிடம் நேர்முக உதவியாளராக அவர் பணிபுரிந்தார்.

1938 - இந்தி எதிர்ப்புப் பெரும் போராட்டத்தின் பின்னர், மக்கள் இயக்கமாக - தமிழரை - தமிழைக் காக்கும் இயக்கமாக சுயமரியாதை இயக்கம் வளர்ந்தது. படித்த ஆடவரும் மகளிரும் படை படையாக இயக்கத் தில் சேர்ந்தனர்.

1936இல் ஈ.வெ.ரா.வுடன் சேர்ந்த சி.என்.ஏ., 13 ஆண்டுகள் அவரோடு இருந்து பணியாற்றினார்.

1949 செப்டம்பரில் சி.என். அண்ணாதுரை தனி இயக்கம் கண்டார். திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி, வீறுடன் செயல்பட்டது.

"திராவிட நாடு பிரிவினை"யைக் குறிக்கோளாகக் கொண்ட அக்கட்சி, 1957இல் தேர்தலில் முதன்முதலாக ஈடுபட்டது.

1956 நவம்பரில் தனித்தமிழ் மாநிலம் அமைந்தது. 1957க்குள் தி.மு.க. விசையாக வளர்ந்தது.

காங்கிரசின் மய்ய அரசு ஆதிக்கம், பண வலிமை, பார்ப்பன - பனியா ஆதரவு இவற்றையும்; பெரியாரின் கடும் எதிர்ப்பு, பெருந்தலைவர் காமராசரின் 9 ஆண்டு கால நல்லாட்சிச் செல்வாக்கு - இவ்வளவையும் மீறி 1967 தேர்தலில் தி.மு.க. போதிய எண்ணிக்கை வலி மையுடன் வெற்றி பெற்றது.

பணக்காரர் ஆதரவு-பார்ப்பனரின் பெரும் பேராதரவு இவ்வளவையும் புறங்கண்டு வெற்றி பெற்ற தி.மு.க. தலைவர் சி.என்.ஏ. 2.3.1967 இரவில் - தாம் ஒரே தலைவராக ஏற்றிருந்த பெரியாரை திருச்சியில் நேரில் கண்டு, "அய்யா நீங்க..." என்று மட்டுமே பேசிய உடன், "என்னைத்தான் உங்களுக்கு நல்லாத் தெரியுமே, பார்த்து நடந்துக்கோங்க" என்று மட்டுமே மனமாரச் சொன்னார், பெரியார்.

அடுத்த நாள் "விடுதலை" இதழின் முதல் பக்கத்தில் - இடப்புறப் பேனலில் வந்த செய்தி - "க.து. தலைவர் பெரியாரைக் கண்டு பேசினார்" என்பது மட்டுமே.

திருச்சியில், 6.3.1967இல் கூடிய தி.க. பொதுக்குழு வில், "தி.மு.க. ஆட்சி ஆதரவு"த் தீர்மானம் - சில தோழர்களின் அழுகைகள், ஒப்பாரிகளுடன் நிறை வேற்றப்பட்டது.

தி.மு.க.வின் முதலாவது சாதனை, "1928 முதல் 40 ஆண்டுகளாக நடைபெற்ற சுயமரியாதை முறைத் திருமணங்களும், இனிமேல் நடக்கப் போகும் சுய மரியாதை முறைத் திருமணங்களும் இந்துச் சட்டத் திருமண வடிவங்களுள் ஒன்றாக இருந்து செல்லு படியாகும்" என்பதுதான்.

இந்தியாவில் வேறு எங்கிலும், எந்தக் கட்சி ஆட்சி யாலும் நிறைவேற்றப்படாத, "பார்ப்பனியம் ஒழிந்த - புரோகிதம் ஒழிந்த - சமற்கிருதம் ஒழிந்த - தீ வளர்ப் பும் ஏழு தப்படியும் ஒழிந்த தமிழர்-திராவிடர் தன்மான முறைத் திருமணம் ஆகும், இது." இது தி.மு.க. ஆட்சியின் மாபெரும் செயல் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. பார்ப்பனர் அல்லாதாரை இழிமக்களாகக் கருதுகிற பார்ப்பன மத - பார்ப்பனியக் கொடுமையை யும் இழிவையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டவர் களுக்கு மட்டுமே இது புரியும்.

ஆனால்...

**1. இந்தச் சட்டம் 1968இல் நடப்புக்கு வந்த பிறகு, தமிழகத்தில் ஆண்டுதோறும் நடக்கிற பல இலக்கக் கணக்கான பார்ப்பனரல்லாதார் வீட்டுத் திருமணங் களுள்-விசுவகருமர், கொங்கு வேளாளர் சமூகங் கள், சில நாடார் வீடுகள் தவிர - எத்தனை விழுக்காடு திருமணங்கள் சுயமரியாதை முறைத் திருமணங்கள் என்பதைக் கணக்கெடுத்ததா, தி.மு.க. ஆட்சி? ஏன் எடுக்கவில்லை? ஊராட்சிகள், ஊராள்வோர்கள் (V.A.Os.) வழியாக 2010க்குள் ஓராண்டிலாவது இவர்கள் கணக்கெடுத்திருக்க வேண்டாமா?**

**'நல்ல பார்ப்பன' அம்மையார் அவர்கள் தலை மையில் நடக்கும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, இதுபற்றிய கணக்கை எப்போதாவது எடுக்குமா? எடுக்காது.**

**நாம் அறிந்தவரையில், ஆண்டுதோறும் நடைபெறும் திருமணங்களுள் 2 (அ) 3 விழுக்காடு திருமணங் கள் மட்டுமே சுயமரியாதை முறைத் திருமணங்களா கும். இது போதுமா?**

2. 1967-1971, 1971-1976 சனவரி, 1989-1991 என, 2010 வரையில் 5 தடவைகள் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராகச் செயல்பட்டார்.

**அவர், ''தொடக்கப் பள்ளியில் பனகல் அரசரின் குறு வரலாற்று நூலை மனப்பாடம் பண்ணி, திராவிட இயக்கக் கொள்கைகளைச் செரித்துக் கொண்ட தாக'', அவரே ஒரு நேர்காணலில் சொன்னார்.**

பள்ளிப்பாடம் என்பது கட்டாயப் பாடம்; தேர்வுக்கு உரிய பாடம்.

வள்ளலார், அயோத்திதாசர் தொடங்கி - டாக்டர் சி. நடேசன், டாக்டர் நாயர், சர். பிட்டி தியாகராயர், பெரி யார் ஈ.வெ.ரா. டாக்டர் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் முதலான வர்களின் குறு, சிறு, பெரிய வரலாற்று நூல்களையும்; சுயமரியாதைத் திருமணம் பற்றிய கொள்கை விளக்க நூல்களையும் 6ஆம் வகுப்பில் தொடங்கி - பட்டப் படிப்பு வரையில் துணைப்பாட நூல்களாக வைத்து, மாணவ-மாணவிகள் இளம்பருவத்திலேயே இவற்றை மனப்பாடம் செய்திட-மாந்திட தி.மு.க. ஆட்சி வழிகண்டி ருக்க வேண்டாமா?

2011 மக்கள் தொகைக் கணக்குப்படி, 2016இல், தமிழ்நாட்டில் 7 கோடிப் பேர் உள்ளனர்.

இவர்களுள் இன்று 2.5 கோடி குழந்தைகள் பாலர் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரையில் படிக்கிறார்கள்.

1968 முதல் இன்று வரையில் இப்படிப் படிப்புப் பெற்றவர்கள் 3 கோடி ஆண்களும், பெண்களும் ஆவர். இவர்கள் பள்ளிக்கல்வியில் கட்டாயப் பாடமாக - தேர்வுக் குரிய பாடமாக இவற்றைப் படித்திருந்தால், அப்படிப் படித்தவர்களில் கால்வாசிப் பேராவது, சுயமரியாதை முறைத் திருமணத்தை அவரவர்களே விரும்புவார் களே! சாதி மறுப்புத் திருமணங்களை அவரவர்களே விரும்புவார்களே!

அன்புகூர்ந்து பெரியார் தொண்டர்கள் திறந்த மனத்துடன் இவை பற்றிச் சிந்தியுங்கள்.

தமிழ்நாடு மாநிலம் தனியாக அமைந்த பிறகும் - ''தமிழ்நாடு'' என்ற பெயரை, 1967 வரையில் காங்கிரசு அரசு-கமராசர் ஆட்சி உட்பட, வைக்கவில்லை. அறிஞர் சி.என்.ஏ. முதலமைச்சராக இருந்தபோது, இரண்டாவ தாகச் செய்த பெரும் சாதனை இது.

1956க்குப் பிறகும், தமிழ்நாடும், மற்ற மொழி மாநி லங்களும் ''முழுத் தன்னுரிமை'' (Complete Autonomy)-அதிகாரப் பிரிவினையோடு கூடிய தன்னுரிமைத் தமிழ் நாடு (Divided Sovereignty) - பெற எந்த முயற்சி யையும் - திராவிடக் கட்சி எதுவும் செய்யவில்லை.

ஒரே ஆட்சி - இந்தி ஒன்றே ஆட்சிமொழி - 126 கோடி இந்திய மக்களுக்கும் என்பது - பச்சையான அடிமை நிலை.

1976 வரையில் மாநிலங்களிடம் இருந்த கல்வித் துறை அதிகாரம், 3.1.1977 முதல் மய்ய அரசு மேலா திக்கம் கொண்ட ''பொது அதிகாரப் பட்டியலுக்கு''ப் போய் விட்டது.

இருந்த அதிகாரத்தையும் இழந்துவிட்டு, அதைக்கூட மீட்கமுடியாத இவர்கள் ''இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழி'' என்பதை ஒழிக்கப் போவது எப்படி? எப்போது?

1957இல் 2 பேர்களில் தொடங்கி - 2016இல் 55 பேர்களுக்குமேல்-790 பேர் கொண்ட நாடாளுமன்றத் தில் உறுப்பினர்களாக உள்ள இரண்டு திராவிடக் கட்சிகளும் - ''இந்தி ஆட்சி மொழி என்பதை மாற்றுங் கள்-பட்டியலிடப்பட்ட 22 மொழிகளையும் ஆட்சிமொழி களாக ஆக்குங்கள்'' என்று கோரி, ஒரு தனியார் மசோதாவை-ஒரு சட்ட முன்வடிவை, 59 ஆண்டு களில், எப்போதுமே மக்கள் அவையில் முன்மொழிய வில்லையே, ஏன்?

**இனி, எப்போது, எப்படி. இவர்கள் இந்தி ஆட்சி மொழி என்பதை ஒழிப்பார்கள்?**

திராவிட இயக்கத்தவர் - பெரியார் தொண்டர்கள் ஒரே ஒரு செய்தி பற்றிச் சிந்தியுங்கள்.

1. சுயமரியாதைத் திருமணச் செல்லுபடிச் சட்டம் - இந்துச் சட்டத்தின் கீழ் உள்ள, சட்ட ஏற்புடைய திருமண

வடிவங்களுள் ஒன்று. அதாவது, "பிராந்திய வழக்கச் சட்டம் - (Territorial Customary Law)" என்கிற சட்டத் தகுதியை மட்டுமே கொண்டது.

இது வேறு பிராந்தியங்களில் செல்லாது.

தமிழராகிய நம்மிடையேயும் இம்முறை விரைந்து பரவவில்லை. சில ஆயிரம் திருமணங்கள் தொடர்ந்து நடக்கும். அவ்வளவே.

2. எந்த ஒரு புதிய கொள்கையையும் கல்வித் திட்டத்தில் இடம்பெறச் செய்யாமல், எவ்வளவு பெரிய அளவில் பரப்புரை செய்யப்படுவதாலும் அக்கொள்கை வெற்றி பெறாது.

**இதில் நம் கொள்கை எதிரியின் புரிதல் மிகவும் சரியானது. எப்படி?**

வாஜ்பேயி ஆட்சிக் காலத்தில், கல்வி அமைச்சராக இருந்த மனோகர் ஜோஷி என்கிற பார்ப்பனர் - சோதிடம் கற்றல், கருமாதி மந்திரம், கலியாண மந்திரம் கற்றல் இவற்றைப் பல்கலைக்கழகப் பாடத் திட்டத்திலேயே புகுத்தினார். தமிழ்நாட்டில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இவை பட்டப்படிப்பாக உள்ளன. இது எல்லா அதிகாரங்களையும் கொண்ட இந்திய அரசின் கல்வித் திட்டம்.

3.இன்று இந்திய ஆட்சியில் உள்ள பாரதிய சனதாக் கட்சி, மிகவும் சரியாக, பாலர் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரையில்-சமற்கிருதம் கற்பித்தல், மூச்சுப் பயிற்சி என்கிற "யோகா" கற்பித்தல், சோதிடம் - வேதக் கணக்கு, வேத வேதியியல், வேதப் பொறியியல் கற்பித்தல் என்கிற பாடத் திட்டங்களை, 2017-2018 கல்வி ஆண்டிலேயே புகுத்திவிடப் போகிறது.

இன்றைய தமிழக ஆட்சி, கோவில்களில் இலவசச் சோறு போடுதல் என்பதை அரசுத் திட்டமாகவே செய் கிறது.

4.இவ்வேறு மக்கள் நலத்திட்டங்களுள் - இந்துத்து வக் கொள்கைப் பரப்பலுக்காக, அரசுச் செலவில் மோடி அரசு மேற்கொள்ளப் போகிறது.

**"இளமையில் கல்வி - கல்லில் எழுத்து" என்பது முதுமொழி.**

இளமையில் எதைக் கற்றுக்கொடுக்கத் தவறினாலும் - ஆங்கிலத்தில் அல்லது தாய்மொழியில் அறிவியல் பட்டப்படிப்பு, பொறியியல் - மருத்துவப் பட்டப்படிப்பு இவைகளைப் படிப்பவர்கள் - வீட்டிலும், தெருவிலும், நாட்டிலும், சமூகங்களிடையேயும் நிலைத்திருக்கிற நம்பிக்கைகள்-பழக்கங்கள்-வழக்கங்கள் - இவற்றை உதறிவிட்டு, நம் பரப்புரையை மட்டும் கேட்டு - ஏற் றுப் பகுத்தறிவு - சுயமரியாதை - சாதியொழிப்பு - மூட நம்பிக்கை - ஆண் ஆதிக்க ஒழிப்பு இவற்றை மேற் கொள்ளமாட்டார்கள்; தயங்குவார்கள்.

**"தனித்தமிழ்நாடு" அடைவது என்பது, இந்திய அரசோடு - அரசுப் படையோடு போரிட்டு, கோடிக் கணக்கான பேரைச் சாகக் கொடுத்து, அதன் பின் நடப்பது.**

**"முழுத் தன்னுரிமை" என்பது இந்திய அரசுக்குச் சில அதிகாரங்களை மட்டும் விட்டுக் கொடுத்துவிட்டு - மற்றெல்லா அதிகாரங்களையும், மற்றும் எஞ்சிய அதிகாரங்களையும் கொண்ட "தன்னுரிமைத் தமிழ் நாடு" அடைவது.**

**2017இல் இந்த ஒரு நோக்கத்தை அடைவதை, ஒரே வேலைத்திட்டமாகக் கொள்ளவும், அதற்காக இந்தியா முழுவதும் செல்லவும் துணிவோம் - பெரி யார் கொள்கையை வென்றெடுப்போம், வாருங்கள்!**

**01-09-2016** **- வே. ஆனைமுத்து**

## சூலூர் பாவேந்தர் பேரவை
## பெரியாரியல் - சிறப்புக் கருத்தரங்கம்

சூலூர் தோழர் வே.ஆனைமுத்து அவைக் கூடத் தில் நிகழ்ந்த பெரியாரியல் சிறப்புக் கருத்தரங்கில், தோழர் வே. ஆனைமுத்து பங்கேற்றார்; 'தமிழ்த் தேசியமும் தந்தை பெரியாரும்' எனும் பொருளில் இரண்டரை மணிநேரம் பேருரையாற்றினார்.

திருவள்ளுவர் ஆண்டு 2047 மடங்கல் 3 (19.8.2016) ஆம் நாள் வெள்ளி மாலை 5.00 மணிக் குத் தோழர் க. தேவராசு வரவேற்புரையுடன் தொடங்கிய நிகழ்ச்சிக்குத் தோழர் கி.மா. கனகராசன் தலைமையேற்றார்.

தமிழ் மறவர் புலவர் வை.பொன்னம்பலனாரின் மகன் மருத்துவர் பொன். தனித்தமிழ்க்கொற்றன் (சாதியொழிப்பு) கருத்துரை வழங்கினார். தோழர் சூ.ம. சரவணகுமார் முன்னிலை வகித்தார்.

வழக்கறிஞர் சூ.சு.தமிழரசன் நன்றி உரைத்தார். இரண்டரை மணிநேரப் பேருரை காணொலியாக்கப் பட்டுள்ளது; குறுந்தகடாக விற்பனைக்கு உள்ளது.

சூலூர் பாவேந்தர் பேரவை சார்பில் (தோழர்கள் வெ.க. சண்முகவேல், நா. வரதராசு, ச. அங்கமுத்து வழி) பெரியார்-நாகம்மை அறக்கட்டளைக்கு அய்ந் தாயிரம் உருவா வழங்கப் பெற்றது.

செய்தி : **சூ.ந. பன்னீர்செல்வம்**

# புரட்சி என்றால் என்ன? ஏன் பயப்பட வேண்டும்?



சுயமரியாதை உணர்ச்சி கொண்ட வாலிபத் தோழர்களே! இன்று நீங்கள் எனக்கு வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்திற்கு நான் உண்மையாகவே மகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில் இந்த உபசாரப் பத்திரம் உங்களுக்குள் தோன்றித் ததும்பும் சுயமரியாதை உணர்ச்சியை முன்னிட்டே (நீங்கள் இதை) வாசித்துக் கொடுத்திருக்கிறீர்கள் என்று உங்கள் உபசாரப் பத்திர வாக்கியங்களில் இருந்தே உணருகிறேன்.

தோழர்களே! உங்கள் உபசாரப் பத்திரத்தின் தலைப்பில் ''புரட்சி வாழ்க! பொதுவுடைமை ஓங்குக!'' என்று குறிப்பிட்டிருக்கும் வார்த்தையைக் கண்ட அநேகர் எருதுக்கு முன்னால் சிகப்புத் துணியை விசிறினால் மிரண்டு மிரண்டு துள்ளுவது போல் பயப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் இவ்வளவு பயப்படத் தகுந்த காரணக் காரியங்கள் எதுவும் அவ்வார்த்தையில் அடங்கியிருப்பதாய் நான் கருதவில்லை.

ஆனால், அவ்வார்த்தையானது, பயப்படத்தக்க முறையில் கற்பிக்கப்பட்டுவிட்டது. எது போலென்றால் பூச்சாண்டி என்றால் அதற்கு அர்த்தம் இன்னதுதான் என்று தெரியாமலேயே குழந்தைகளைப் பயப்படுத்தி வைத்திருப்பதைப் போல், உங்களில் அநேகரைப் புரட்சி என்றால் அதன் அர்த்தம் என்ன? பயன் என்ன? என்கின்ற விஷயம் உணராமல் பயப்படும்படிச் செய்யப்பட்டாய்விட்டது.

**புரட்சி**

புரட்சி என்றால் என்ன? அது பயப்பட வேண்டிய விஷயமா? என்பதைப் பற்றிச் சற்று யோசித்துப் பார்ப்போம்.

சாதாரணமாக ஒரு மனிதன் ஒரு இடம் விட்டு மற்றொரு இடத்திற்குப் போவதற்குத் தரையில் ஒரு மணிக்கு 3 மைல் வீதம் நடந்து கொண்டிருந்த நிலைமை மாறி, ஒரு மணிக்கு 400 மைல்கள் ஆகாயத்தில் பறக்கும்படியான நிலையை அடைய யோசிப்பானேயானால், நடக்கும் விஷயத்தில் அது ஒரு பெரிய பிரம்மாண்டமான புரட்சியேயாகும். இந்தப்படியான புரட்சியில் வெற்றி பெற்ற ஒருவன் ஆகாயத்தில் ஒரு மணிக்கு 400 மைல் பறக்கும் போது 3 மைல் வீதம் நடையிலேயே இருக்கிற ஒருவன் அதிசயப்பட வேண்டியதுதான். ஆனால் பயப்படுவதற்கு இதில் ஒன்றும் இல்லை. இதனால்யாருக்கும் எவ்விதக் கெடுதியும் இல்லை. எந்த ஒரு காரியத்தையும் மனிதன் அவனுடைய வெகுநாளைய பழக்கம், வழக்கம், நம்பிக்கை ஆகியவைகளுக்கு விரோதமாக ஆக்க முயற்சித்தால் அதைப் புரட்சி என்று தான் சொல்லுவார்கள். ஆனால், அதனால் அனுகூலம் அடைக்கின்றவர்கள் நல்ல காரியம் என்று சொல்லிப் புகழவும், அதனால் தீமையடைகின்றவர்கள் அதைக் கெட்ட காரியம் என்று சொல்லி இகழவும், சரியான முறையில் எதிர்க்கச் சக்தி இல்லாதவர்கள் தப்பர்த்தம் கற்பித்து மக்களுக்குள் புகுத்தி அதன்மூலம் எதிர்ப்பு ஏற்படச் செய்வார்கள். ஆனால், மனித சமூகத்தில் புரட்சி என்பதுமிகச் சாதாரணமாய் இருந்து காரியத்தில் நடைபெற்றுத்தான் வருகின்றது. மனிதனுக்கு முற்போக்கு அறிவும் அக்கறையும் ஏற்பட, ஏற்பட புதிய, புதிய உணர்ச்சிகள் தோன்றத் தோன்ற மாறுதல்கள் என்கின்ற புரட்சிகள் உண்டாகிக் கொண்டேதான் இருக்கும்.

புரட்சிகள் என்றால் என்ன? ஒரு விஷயம் அதன் பழக்கவழக்க நிலையில் இருந்து மாற்றம் அடைவதும், அதிலும் அது அடியோடு தலைகீழ் நிலை அடையும்படி மாற்றமடைவதுமேதான் புரட்சி என்று சொல்லப்படுவதாகும். அந்தப்படி இப்போது நம் கண்முன்னாலேயே எவ்வளவோ புரட்சிகளைக் காதால் கேட்டுவிட்டோம்; கண்ணால் பார்த்துவிட்டோம். ஒவ்வொரு புரட்சியிலும் எந்தெந்த தேசம் பூமிக்குள் போய்விட்டது? எந்தச் சமூகம் பூண்டற்றுப் போய்விட்டது? மாறுதலேற்படும் போது சற்றுத் தடபுடலாய் மக்கள் மிரளுவதும் சிறிது நாளானவுடன் அது இயற்கையாய் ஆகிவிடுவதும், பிறகு அதிலிருந்து மற்றொரு புரட்சி ஆரம்பிப்பதும் சகஜம்தானே.

சாதாரணமாக அரசியல் துறையில் ஏற்பட்ட புரட்சியை எடுத்துக்கொள்ளுங்கள். நமது நாட்டில் அரசர்களெல்லாம் கடவுள் அவதாரங்களல்லவா? கடவுள் அம்சங்களல்லவா? கடவுள் அருள் பெற்றவர்களல்லவா? கடவுள் கடாட்சம் பெற்றவர்களல்லவா? இதுதானே அரசனைப் பற்றிய நமது சாஸ்திரங்கள் என்பவைகளி

லும், புராணங்கள் என்பவைகளிலும் சொல்லப்பட்ட சத்தியவாக்கு? சமீபகாலம் வரை நாம் அரசரை விஷ்ணு அம்சம் என்று சொல்லிக் கொண்டிருக்கவில்லையா? அரசன் கடவுள் அவதார அம்சம் என்பதாகக் கூறிக் கொண்டும் புராணங்கள் படித்துக் கொண்டும் இருக்க வில்லையா? இன்றும் பலர் அம்மாதிரி படித்துக் கொண்டி ருக்கிறார்களா? இல்லையா?

ஆனால் நாம் இப்போது என்ன சொல்லுகிறோம்? மனித சமூகத்திற்கு அரசன் எதற்கு? என்று கேட்கும் நிலைமைக்கு வந்துவிடவில்லையா? எங்களுக்கு ஒரு சக்கரவர்த்தியோ, அரசனோ இருப்பது எங்கள் சுயமரி யாதைக்குக் குறைவு என்று சொல்ல வந்துவிட்டோமா? இல்லையா? ராஜபக்தி, ராஜ வாழ்த்து அடிமைத் தனம் என்று சொல்ல வந்துவிட்டோமா? இல்லையா? அந்தப் படியே பல தேசங்களில் அரசர்கள் ஒழிந்தும் விட்டார் களா? இல்லையா? ஆகவே, அரசியல் துறையில் இது ஒரு பெரிய புரட்சியா? இல்லையா? என்று உங்களைக் கேட்கின்றேன். இந்தப் புரட்சியில் என்ன ஆபத்து வந்து விட்டது? எந்தத் தேசம் மண்ணில் புதைந்துவிட்டது? யார் வாய்வெந்து போய்விட்டது? யார் தலைபோய் விட்டது? அரசர்கள் ஒழிக்கப்பட்ட தேசம் நெருப்புப் பற்றி எரிந்துவிட்டதா? அல்லது பாலைவனமாகி விட்டதா? சுமார் 40, 50 வருஷங்களுக்குமுன், அரசாங்கத்தைக் குறைகூறவோ மாற்றவோ நம் நாட்டில் யாராவது கருதியிருப்பார்களா என்று யோசித்துப் பாருங்கள். எந்தப் புராணத்திலாவது, சாஸ்த்திரத்திலாவது அரசன் வேண்டாம் என்று சொன்னதாகப் பார்த்திருக்கிறோமா? இன்று எப்படி தைரியமாய்ச் சொல்ல வந்துவிட்டோம்? இது ஒரு பெரிய புரட்சியா அல்லவா என்று யோசித்துப் பாருங்கள்.

இதுபோலவே, மக்களில் ஒரு சாராரை பூதேவர்கள் (இந்த உலகக் கடவுள்கள்) என்றும், மற்றொரு சாரா ரைக் கண்ணினாலும் பார்க்க முடியாதவர்கள் என்றும், சண்டாளர்கள் என்றும் கருதியிருந்தோமா - இல்லையா? இதற்கு வேத சாஸ்த்திர புராண ஆதாரங்கள் கடவுள் வாக்குகள் இருக்கின்றது என்று சொல்லி, பூதேவர்கள் காலில் விழுந்து கும்பிட்டும், சண்டாளர்களைத் தெரு வில் நடக்கவிடாமல் துரத்தி அடித்தும் வந்தோமா இல்லையா? ஆனால் இன்று அவர்களைத் தெருவில் மாத்திரம் அல்லாமல் கோவிலுக்குள் கூட்டிக் கொண்டு போக வேண்டும் என்று சொல்லுகின்றோமா? இல் லையா? இப்படிச் சொல்லுகின்றவர்கள் மகாத்மா என்று அழைக்கப்படுகிறார்களா இல்லையா?

மற்றும் இம்மாதிரி சண்டாளர்கள் கண்ணுக்கே தென்படக்கூடாது, கிட்டவே வரக்கூடாது என்று இருந்த தெல்லாம் போய், இப்போது அவர்கள் பக்கத்தில் உட்கார ஆள் மேல் ஆள்கள் போட்டிப் போட்டு அய்யங் கார், சாஸ்திரிகள், ராவ்ஜீக்கள், பண்டார சன்னதிகள், பட்டக்காரர்கள் ஆளுக்கு 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் கள் (தேர்தல்களில்) செலவு செய்து அந்த ஸ்தானங் களை அடைய முயற்சிக்கிறார்களா இல்லையா? சமூக வழக்கங்களில் 10 வயதுப் பெண்ணைக் கட்டிக் கொடுக் காவிட்டால் பெற்றோர்கள் நரகத்துக்குப் போய்விடுவார் கள். பெண்ணும் விபச்சார தோஷத்திற்கு ஆளாய்விடும் என்று கூறிய வேத சாஸ்திரங்களையும் ரிஷிகள் வாக்கி யங்களையும் பழக்கவழக்கங்களையும் குப்பையில் தள்ளிவிட்டு, 14 வயதான பிறகு-பெண் ருதுவான பிறகுதான் கல்யாணம் செய்ய வேண்டும்; இல்லா விட்டால் தண்டனை அடையவேண்டும் என்று சொல்லிச் சட்டம் செய்துவிட்டோமா இல்லையா?

எனவே, இவைகள் எல்லாம் சமூகப் புரட்சியே யாகும். இதனால் யாருக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது? யார் என்ன கஷ்டப்படுகிறார்கள்?

ஆகவே, அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் எவ்வளவு புரட்சிகள் செய்ய முன்வந்துவிட்டோம்; செய்துவிட்டோம். இவைகள் எவ்வளவு சர்வ சாதாரண மான விஷயமாகவும் மிகவும் ஞாயமானதாகவும் அறிவுடைமையாகவும் மக்கள் சமூகத்திற்கு நன்மை பயக்கக் கூடியதாகவும் கருதப்படுகின்றது என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

மற்றும் உலகத்தையே படைத்துக் காக்கும் கடவுள் விஷயம் இன்று உலகில், நம் நாட்டில் என்ன பாடுபடு கின்றது? அக்கடவுளை அடையும் மார்க்கமாகிய மத விஷயம் இன்று என்ன பாடுபடுகின்றது? இவைகள் கடவுள் புரட்சி, மதப் புரட்சியல்லவா? இதனால் மக் களுக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது? ஆகவே இவ் விஷயங்களில் ஆபத்து, ஆபத்து என்று சொல்லப்படு வதெல்லாம் நன்றாய் யோசித்துப் பார்த்தால் யார், யார் நன்மை அடைந்து வந்தார்களோ, அவர்களுக்குத் தான் சிறிது ஆபத்தாய்க் காணப்படுகின்றதே அல்லாமல், வேறு என்ன? இவர்கள் யார்? இவர்கள் மக்கள் சமூ கத்தில் 100-க்கு எத்தனை பேர்கள்? என்று பார்த்தால் இலட்சியம் செய்யக்கூடிய அளவா என்பது விளங்கும்.

ஆகவே அரசியல், சமூகஇயல், அறிவியல் ஆகிய வற்றில் பெருத்த புரட்சிகள் ஏற்பட்டு, அவை சாதாரண மாய் நடந்து வருகின்றதை நீங்கள் பார்க்கிறீர்கள். எனவே, மேற்கண்ட புரட்சிகள் போல் அதாவது அரசன் ஏன்? உயர்ந்த சாதி ஏன்? தாழ்ந்த சாதி ஏன்? கடவுள் ஏன்? மதம் ஏன்? என்று சொல்லுவது போலவே, இப்போது பணக்காரன் ஏன்? பிரபு ஏன்? முதலாளி ஏன்? ஏழை ஏன்? அடிமை ஏன்? என்று கேட்கிறோம். இந்தப்படி ஏன் கேட்கின்றோம்? முதன்முதலில் ஏதோ ஒரு விஷயத்தில் மாறுதலையடையத் துணிந்துவிட் டோம். அதற்கு ஏற்பட்டிருந்த கட்டுப்பாடு காவல் ஆகிய வைகளை அலட்சியம் செய்துவிட்டோம். அதே தைரிய மும், அதே அறிவும், அதே அவசியமும், அதே முற்போக்கு உணர்ச்சியும் அதற்கு அடுத்த நிலைமைக்கு மக்களைத் தானாகவே கொண்டு போகின்றது.

பட்டாளம், பீரங்கி, ஆகாயக் கப்பல், வெடிகுண்டு, 20 மைல் பீரங்கி விஷப்புகை, வெடி முதலிய பலமும்

கடவுள் அவதாரமும் உள்ள அரசனே, நீ வேண்டாம் மூட்டை கட்டிக்கொள், என்று சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டு, அது நியாயமும் அவசியமும் என்று தோன்றிப் பல அரசர்கள் ஒழிக்கப்பட்டும் போன பிறகு, அதை விடக் கஷ்டமானதும் நினைக்க முடியாததுமான காரியமா இந்தப் பணக்காரன் ஏன்? ஏழை ஏன்? என்று கேட்கும் விஷயம் என்றுதான் கேட்கிறேன். முன்னதைவிட இதற்கு என்ன அதிக தைரியம் வேண்டும்? என்ன அதிக பலம் வேண்டும்? அல்லது இது என்ன ஒரு பெரிய பாவமான காரியமாகும்? அரசன், சாதி, கடவுள், மதம், பழக்கவழக்கம் ஆகியவையெல்லாம் பணக்கார னையும், பார்ப்பானையும் காப்பாற்ற ஏற்பாடு செய்து கற்பித்து வைத்த சாதனங்களேயொழிய இவர்கள் இயற் கையா? காற்றைப் போன்று இன்றியமையாததா? எப்பொழுது அவைகளுக்கே ஆபத்து வந்துவிட்டதோ, அப்பொழுதே பணக்காரர்கள் நிலை-காவலில்லாச் சொத்து காணாமல் போவது போல், மறைவுபட வேண்டி யதுதானே? இதனால் யாருக்கு என்ன நஷ்டம்? உண் மையான நடுநிலைமையும் அறிவும் இருக்கிறவன் இதை எப்படிக் குற்றம் என்று சொல்ல முடியும்? இது சாதாரணமாய் அறிவும் முற்போக்கு உணர்ச்சியும் உள்ள எவனுக்கும் தோன்றக் கூடிய காரியம்தானே? இதை வெளியில் சொல்லுவது தப்பு, சட்டவிரோதம் என்று மிரட்டினால் சிலர் வேண்டுமானால் வாயில் சொல்ல பயப்படுவார்கள். ஆனால் இது அவர்கள் மனதில் உதிக்கக் கூடாது என்று சொல்ல முடியுமா? ஒரு சமயம், சிலர், இது சாத்தியப்படுமா? என்று கேட்கலாம். இப்படிக் கேட்பது வேறு விஷயம். ஒரு விஷயம் சரியா, தப்பா என்று கவனித்த பிறகு தான் அது சாத்தியப்படுமா என்கின்றதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

**சாத்தியப்படுமா?**

**அரசன் வேண்டாம் என்கின்ற விஷயத்தை நாம் அசாத்திய விஷயம் என்றா கருதுகின்றோம்? அரசனுக்கு உள்ள படை, பட்டாளம், வெடிகுண்டு பீரங்கிகளையெல்லாம்விட, இந்தப் பணக்காரனுக் கும், முதலாளிக்கும் என்ன அவ்வளவு பலமான காவல் இருக்கின்றது? அரசனைவிடப் பணக்கார னுக்கு என்ன அவ்வளவு அதிகமான வேத, சாஸ்திர, புராணப் பாதுகாப்புகள் இருக்கிறது? அவர்கள் நிலைமையே இப்போது காற்றாய்ப் பறக்கின்றது. பணக்காரர்கள் நிலைமைக்கு பவுசு இருக்கிறது? வரிசைக்கிரமத்தில் இவர்கள் நிலைமையும் மாற்ற மடைய வேண்டியதுதானே? சும்மா சமய சந்தர்ப் பம் இல்லாமல் அரசனையும், பார்ப்பானையும் திட்டி, ஊரார் மெச்சும்படிப் பேசி, கடவுளையும் மதத் தையும் பரிகாசம் பண்ணிக் கொண்டு இருப்பது தான் சுயமரியாதைக் கடசியின் இலட்சியமா? என்று யோசித்துப் பாருங்கள்.**

**ஒரு மனிதனின் சுயமரியாதை உணர்ச்சிக்கு எது எது பாதகமாய்க் காணப்படுகின்றதோ, அவை களையெல்லாம் மாற்றுவதுதான் உண்மையான சுயமரியாதை இயக்கத்தின் நோக்கமாகுமே தவிர, அரசனுக்கு பதிலாகப் பார்ப்பானை ஏற்றி வைப் பதும், பார்ப்பானுக்குப் பதிலாக பணக்காரனைப் பட்டத்தில் வைப்பதும் ஒருநாளும் சுயமரியாதை யாகாது. இவையெல்லாம் சுயநல மரியாதையே யாகும்.**

**அன்றியும் அரசன் வேண்டாம் என்றாலும், பார்ப்பான் வேண்டாம் என்றாலும், பணக்காரன் வேண்டாம் என்றாலும், இதனால் கஷ்டப்படும் மக்கள் 100க்கு 10 பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். இவை ஒழிந்தால் சுகப்படும் மக்கள் 100க்கு 90 பேருக்கு மேல் இருப்பார்கள். ஆகவே யாருடைய நன்மைக்கு ஏற்ற காரியம் செய்யப்பட வேண்டியது அறிவாளியின் கடமை என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். உண்மையான ஜீவகாருண்யம் உள்ள வர்கள் வெறும் கோழியைத் தலைகீழாகக் கொண்டு போகப்படுவதையும், மாட்டின் கழுத்தில் ஒரு சிறுபுண் இருப்பதையும், ஜீவகாருண்யம் என்று எண்ணமாட்டார்கள். பெரும்பான்மையான மக்கள் வெகு சிறுபான்மையோரின் சுயநலத்தால் எவ் வளவு கஷ்டப்படுகின்றார்கள் என்பதைத் தான் கவனிப்பார்கள்.**

அய்யோ இந்தப் புரட்சியால் பணக்காரர்களின் மனம் பதறுமே என்று ஒரு அறிவாளியும் கருதமாட்டான். எப்படியெனில் ஒரு திருடனுக்காகப் பயந்து 100 பேர்கள் தங்கள் வீட்டுக் கதவைத் தாளிட்டுப் படுத்துக் கொண்டால், திருடன் பாடு பட்டினிதான். அதனால் திருடன் மனம் பதறுமே - ஏமாற்றமடைய நேரிடுமே - அவன் பிள்ளைக் குட்டிகள் பதறுவார்களே என்று சொல்லி எல்லோரும் கதவைத் திறந்து போட்டே படுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் இதை ஜீவகாருண்யமென்று நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா? பெரிய மாறுதல்கள் உண்டாக்கப்பட வேண்டிய அவசியங்கள் ஏற்பட்டால் குறுகிய நோக்கக்காரர்களும் சுயநல நோக்கக்காரர்களும் சில சமயங்களில் மனம் கஷ்டப்படத்தான் நேரும். அதற்கு யார் என்ன செய்ய முடியும்? எலியும், பூனையும், பாம்பும், தேளும் போகின்ற கோவிலுக்குள் மனிதர்கள் போவதனால் எத்தனை சங்கராச்சாரிகள் மனம் பதறுகிறது? இதில் ஏதாவது நாணயமோ, உண்மையோ இருக்க முடியுமா? இதற் காக எவ்வித பலாத்காரமும் செய்துதான் ஆகவேண்டும் என்பது நமது கருத்தல்ல. ஆனால், பலாத்காரத்துக்குப் பலவந்தமாய் வருபவர்களிடமிருந்து எப்படி மீள வேண்டுமோ அதற்குத் தயாராய்த்தான் இருக்க வேண் டும். இதற்காக எந்தப் பணக்காரரும் கஷ்டப்பட வேண்டி யிருக்காது; யாரும் பட்டினி கிடக்க நேராது. நல்லுணர்வு ஏற்பட்டு விட்டால் இது ஒரு நொடியில் முடியக் கூடிய காரியமேயாகும்.

உலகில் பொருளாதார நெருக்கடியினால் ஏழைகள், தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் - பணக்காரர்களும் முதலாளிகளும் மாத்திரம் சுகப்படுகிறார்கள்; சந்தோஷப்படுகிறார்கள் என்று சொல்லிவிட முடியுமா? ஒவ்வொரு கருத்துள்ள பணக்காரனுக்கும் இருக்கின்ற கவலை உங்களுக்குத் தெரியாததா? அவன் அதைச் சம்பாதிக்கும் வழியில் கஷ்டப்படுவதைவிட, கவலைப்படுவதைவிட அதிகமாகவே, அதைக் காப்பாற்றுவதிலும் கவலைப்படுகிறான். இலாப - நஷ்டம் வரும் காலையிலும், அதிகமாக இலாபம் வரவில்லையே என்றும், நஷ்டம் வந்துவிட்டதே என்றும் தான் கவலைப்படுகிறான். எவ்வளவு இருந்தபோதிலும் இன்னும் பொருள்சேர வேண்டுமென்றே ஆசைப்படுகிறான். கவலையும் பொறாமையும் அவனுக்குச் சமமாகத்தான் இருந்து வருகின்றது. எவ்வளவோ கஷ்டங்களையும் தொல்லைகளையும் சகித்துக் கொண்டும் பெருங்கவலைக்கு ஆளாய்க் கொண்டும் தான் தன்னைப் பணக்காரன் என்று பிறர் மதிக்க வேண்டுமென்று கருதுகிறான். இதனால், உண்மையில் இலாபம் ஒன்றுமில்லை. ஆனால் உலகத்தில் உள்ள பழக்கவழக்கம், பெருமையின் முறை ஆகியவைகளுக்கு அடிமைப்பட்டே பணக்காரனாக ஆசைப்படுகிறான். ஆகவே பணக்காரத் தன்மை என்பது போய்விடுவதால் மனித சமூகத்துக்கு ஒரு கஷ்டமும் வந்துவிடாது. பணக்காரத் தன்மை போய்விட்டால் எல்லா மக்களின் நன்மையைப் பொறுத்த காரியங்களையெல்லாம் கவனிக்க வேண்டிய சம தர்மக் கொள்கை கொண்ட ஆட்சிதான் நடைபெறும்.

**மனித சமூகத்தின் கஷ்ட நிலைமைக்கும், இழிதன்மைக்கும், ஒப்பற்ற தன்மைக்கும், சதா கவலைக்கும் காரணமாயிருப்பதே இந்த பணக்காரத் தன்மையும் ஏழ்மைத் தன்மையுமேயாகும்.**

**மனிதப் பிறவி உயர்ந்ததென்றும், அருமையானதென்றும், மற்ற ஜீவராசிகளைவிட மேம்பட்ட அறிவின் பயனை அனுபவிப்பதென்றும் சொல்லுகிறார்கள். நான் அதை ஒப்புக்கொள்ள முடியாது. இன்றைய மனித சமூகத் திட்டம் சரியென்று ஒப்புக்கொள்வதனால், அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது என்பது சோம்பேறிகள், பகுத்தறிவற்றவர்கள் ஆகியவர்களின் ஞானம் என்று சொல்ல வேண்டியிருப்பதோடு, நான் இழிவு, இழிவு மனிதராய் பிறத்தல் இழிவு என்றுதான் சொல்லுவேன். மனிதப் பிறப்பின் இழிவுக்கும், கஷ்டத்திற்கும் அவனது இன்றைய வாழ்க்கைத் திட்டமே காரணமாய் இருக்கிறது. மனிதனைவிட மற்ற ஜீவப் பிராணிகளில் தன் இனத்தை அடிமை கொண்டு வருத்தி வதைத்து வாழ்கின்ற ஜீவன் மிக அபூர்வமேயாகும்.**

மனிதனைவிட மற்ற ஜீவப் பிராணிகளில் நாளைக்கு என் கதி என்ன? என் பிள்ளைக் குட்டி பேத்தி பிதிர் ஆகியவர்களுக்கு என்ன கதி? உலகம் உள்ள நாள் வரை நானும் என் சந்ததியும் உலகிலுள்ளவர்களுக்கெல்லாம் மேலாய் வாழ்வதற்கு என்ன மார்க்கம் என்று கருதி, தன் சமூகத்தையே சகலவித அயோக்கியத் தனங்களாலும் வதைத்து நலம் பெரும் ஜீவன்கள் மிக மிக அருமையாகவே இருக்கும். மனித சமூகத்தாலேயே எதை எதை இழிவான கொடுமையான குணம் என்று கருதுகின்றோமோ அவையெல்லாம் உலகிலுள்ள எந்த இழிவான ஜீவன் என்று சொல்லப்படுவதைவிட மனிதனிடத்திலேயே அதிகமாய் இருக்கின்றது. கழுதை மேல் கழுதை சவாரி செய்கின்றதா? புலிமேல் புலி சவாரி செய்கின்றதா? பாம்பு, தேள் ஆகியவை மேல் பாம்பு, தேள் சவாரி செய்கின்றதா? ஆனால் மனிதன் மேல் மனிதன் செய்கின்றானா? இல்லையா? ஆகவே, மனிதனிடம் என்ன உயர்வான குணங்கள் இருக்கக் காண்கின்றோம்?

அரசன், சாதி, மதம், கடவுள், பணக்காரன் ஆகிய தன்மைகள் எல்லாம் மேலே கண்ட இழிதன்மைக்கும் அக்கிரமத் தன்மைக்கும் மனித ஜீவகாருண்யமற்ற தன்மைக்கும் அனுகூலமாய் இருக்கிறதா? இல்லையா?

மனிதன் தனது சமூகத்தை வஞ்சித்துப் பொருள் சேர்த்துப் பகுத்தறிவுள்ள தனது பெண்டு பிள்ளைக்குப் பணம் சேர்த்து வைக்க வேண்டுமென்று சொல்லுகிறான். ஆனால் மிருகம், பட்சி ஆகியவைகள் பகுத்தறிவு இல்லாத தனது பெண்டு பிள்ளைகளுக்குச் சொத்து சேர்த்து வைக்கக் கருதுவதில்லை. தனது குட்டிகளையும் குஞ்சுகளையும் அவை தானாக ஓடியாடும் பருவம் வந்தவுடன், தனித்து வாழ்ந்து கொள்ளும்படி கடித்தும் கொத்தியும் துரத்திவிடுகின்றது. அவற்றைப் பற்றிய கவலையோ ஞாபகமோ கூட அவைகளுக்குக் கிடையாது.

மனிதனின் பிறப்பு கடவுளால் என்கிறோம். இறப்பு கடவுளால் என்கின்றோம். இவ்விரண்டுக்கும் காரணமாய்க் காணப்படுவது மனிதன் நடப்பாய் இருப்பதால் அந்த நடப்பும் கடவுளால்தான் என்று சொல்ல வேண்டியதாகின்றது.

ஆகவே, மனிதனின் நடப்பையும் கடவுளால்தான் நடைபெறுகின்றது என்று சொல்லுகிறார்கள். மனிதனுடைய நடப்போ பெரிதும் நான் மேலே சொல்லியது போலவே தான் கவலையும் கொடுமையும் நிறைந்ததாய் இருந்து வருகின்றது. இப்படிப்பட்ட நடப்புக்குக் கடவுளைக் காரணமாக்குகின்றவர்கள், இதன் பயனாகிய பிறப்பு இறப்புக்குக் கடவுளைக் காரணமாக்குகின்றவர்கள், கடவுளை மேன்மைப்படுத்தினவர்களா? அல்லது கீழ்மைப்படுத்தினவர்களா? என்ற யோசித்துப் பாருங்கள்.

**செல்வவான் (சோம்பேறியாயிருந்து வாழ உரிமையுடையவன்) என்கின்ற ஒரு நிலைமை உலகில் இல்லையானால், கடவுளுக்கும் மதத்திற்கும் சாதிக்கும் அரசனுக்கும் உலகில் இடம் இருக்குமா? என்று யோசித்துப் பாருங்கள்.**

**- ஈ.வெ.ரா. சொற்பொழிவு,**
“குடிஅரசு” 18.12.1932

## ஆசிரியருக்கு மடல்

அன்புள்ள அறிஞர் வே.ஆ. அவர்கட்கு, தொண்ணூற்றி இரண்டாம் அகவையில் நுழையும் தங்கட்கு, எங்கள் குடும்பத்தின் சார்பாக அன்பு வணக்கங்கள் கூறி, தங்களின் பொது வாழ்க்கையை ஊக்கப்படுத்தும் வகையில் இத்துடன் அனுப்பியுள்ள காசோலை (எண். '941759' 621020308) உருவா 1000/- ஓராயிரத்தை ஏற்றுக் கொள்ள அன்புடன் விழைகிறோம்.

என் வேண்டுகோளுக்கிணங்க அனுப்பப்படும் 11 சிந்தனையாளன் சந்தாக்களையும் தொடர்பு கொண்டுள்ளேன். தாங்கள் 10ஆம் தேதி தோழர் வனவர் கோவிந்தசாமி குடும்பத்தின் மணவிழா நிகழ்வுக்கு வருகை தரும்போது, சிந்தனையாளன் சந்தா தொடர்பான என் பணியை முடித்துக் கொடுக்க உறுதி அளிக்கிறேன்.

2.7.2016ஆம் தேதி நடைபெறும் செயற்குழு கூட்டத்திற்கு வர என் உடல்நிலை இடந்தரவில்லை என்பதை வருத்தத்துடன் எழுதுகிறேன். நன்றி, வணக்கம்.

- **ச. இராதாகிருஷ்ணன்,** மேலச்சிந்தாமணி

---

பெருமதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு, வணக்கம்.

தங்கள் கடிதமும் காசோலையும் கிடைக்கப் பெற்றேன். மிகவும் நன்றி.

அம்பேத்கரைக் குறித்த புத்தகத்தைப் பற்றி 'சிந்தனையாளன்' இதழில் கருத்துரை வெளியாகும் என்று மட்டுமே எதிர்பார்த்தேன். ஆனால் புத்தகங் கள் வேண்டுமென்ற தங்கள் கோரிக்கையும், மெய்ப் புத் திருத்தமும் என்னைப் பெருவியப்பிலாழ்த்தின.

தாங்கள் புத்தகம் வேண்டும் என்று கேட்ட தைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

தங்களுக்காக 50 படிகளைத் தனியே எடுத்து வைத்து விட்டேன். 17.8.16 அன்று புத்தகங்களைத் தங்களிடம் நேரில் அளிக்கும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி மிக்க மகிழ்ச்சி. நன்றி.

- **சி.ந. சந்திரசேகரன்,**
சிங்காநல்லூர், கோவை

## அரியலூர் க. அண்ணாமலை அவர்களின் 24ஆம் ஆண்டு நினைவு நாள்

தோழர் அ. பெரியசாமி (முகப்பேர் மேற்கு, சென்னை-37) அவரது தந்தை அரியலூர் க. அண்ணாமலை அவர்களின் 24ஆம் ஆண்டு (12.8.2016) நினைவு நாளை ஒட்டி, சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக உருவா 1500/- அன்பளிப்பாக அளித்துள்ளார்.

## சென்னை அய்.அய்.டி.யில் அம்பேத்கர் - பெரியார் படிப்பு வட்டத்தின் சார்பில் சிறப்புக் கூட்டம் வே.ஆனைமுத்து சிறப்புச் சொற்பொழிவு

*சென்னை அய்.அய்.டி (I.I.T.) இந்தியாவிலுள்ள 22 I.I.T. உயர் தொழிற்கல்வி நிறுவனங்களுள் ஒன்று. இக்கல்வி நிறுவன மாணவர்களால் இயக்கப்படும், "அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டம்" (AMBEDKAR - PERIYAR STUDY CIRCLE) சார்பில், அவ்வப்போது, இந்திய வெகுமக்களின் நலனுக்கு ஊறு செய்கிற - கேடு செய்கிற அரசின் செயல்திட்டங்கள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன. இன்று, ஒடுக்கப்பட்ட வகுப்பு வெகுமக்களுக்குக் கேடு செய் கிற வகையில் தொடக்கக் கல்வி முதல் அய்.அய்.டி படிப்பு வரையில், கட்டாய சமற்கிருதப் படிப்பு, யோகா பயிற்சி, வேதக் கணக்கு, வேத அறிவியல் முதலான இந்துத்துவக் கொள்கையைத் திணிக்கும் பாடத் திட்டத்தை இந்திய அரசு தானடித்த மூப்பாகத் திணிக்கிறது.*

*இந்திய அரசு வெளியிட்டுள்ள 2001 மக்கள் தொகைக் கணக்குப்படி-இந்தியாவில் உள்ள 102.86 கோடி மக்களுள் வெறும் 14,135 பேர்களே சமஸ்கிருதம் பேசுகிறவர்கள் என்று பதிவு செய்துள்ளது; மக்களிடையே பேச்சு மொழியாக இல்லாத-வெறும் இந்து மதச் சடங்கு மொழியாக மட்டுமே இருக்கிற சமற்கிருதம் ஏன் கல்வித் திட்டத்தில் கூடாது என்பதையும்; சூரிய வணக்கத்தை எல்லா மத மக்களின் பேரிலும் சுமத்துகிற யோகா, எந்தத் துறைக்கான கலைச் சொற்களையும் கொண்டிராத வேதக்கல்வி - இவை ஏன் கூடாது என்பவற்றை விளக்கும் வகையில், சென்னை I.I.T.-யில், 23.8.2016 செவ்வாய் மாலை 5.30 மணிமுதல் 7.30 மணிவரையில் நடந்த சிறப்புக் கூட்டத்தில், "பெரியார்-நாகம்மை கல்வி அறக்கட்டளை"யின் நிறுவனத் தலைவரும், "சிந்தனையாளன்" திங்கள் இதழின் நிறுவன ஆசிரியருமான தோழர் வே.ஆனைமுத்து சிறப்புரையாற்றினார். பங்கேற்றோரின் அய்ய வினாக் களுக்குத் தெளிவான விடைகளைத் தந்தார்.*

*படிப்பு வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் சாமிநாதன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். இரவு 8 மணிக்கு நிகழ்ச்சி முடிவுற்றது.*

# சீர்திருத்தக்காரர்களுக்கு



**சகோ**தரர்களே!
சகோதரிகளே!

நமது மகாநாட்டின் நடவடிக்கைகள் எல்லாம் அநேகமாய் முடிவு பெற்றுவிட்டன. மகாநாடுகளின் வழக்கப்படிப் பார்த்தால் மகாநாட்டுத் தலைவர் என்கின்ற முறையில் எனது முடிவுரை என்பதாகச் சில வார்த்தைகளையாவது நான் சொல்லியாக வேண்டும். நீங்களும் அதைக் குறிப்பாய் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை உணருகிறேன். மகாநாட்டு நடவடிக்கைகளில் ஆதி முதல் இதுவரை ஊக்கத்தோடும் உணர்ச்சியோடும் இடையறாக் கவனத்தோடும் கலந்திருந்த உங்களுக்கு இனி நான் அதிகமாய் ஒன்றையும் சொல்ல வேண்டியதில்லையென்றே நினைக்கின்றேன். ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே சீர்திருத்தம் என்பதைப் பற்றிப் பேசப்பட்டு வருகிறதாய் அறியக்கிடக்கின்றது. எவ்விதச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசப்பட்டு வந்ததோ அது ஒரு சிறிதும் காரியத்தில் வெற்றிபெறவில்லை.

**சீர்திருத்தக்காரர்களும் தங்கள் சீர்திருத்தங்களைப் பற்றி வாயளவில் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்களேயொழிய, காரியத்தில் கொண்டு வருவதில் வெற்றியடையவே இல்லை. ஆனாலும் இப்போது அம்மாதியாகவேதான் வாய்ப்பேச்சிலும் வெறும் தீர்மானத்திலும் நடைபெறுகின்றதேயொழிய காரியத்தில் நடைபெறச் செய்யும் மார்க்கத்திற்குக் கொண்டுபோய்விடும்படியான சீர்திருத்தம் செய்வதற்கு ஆள்களைக் காணோம்.**

இந்த மாதிரியான வாய்ப்பேச்சு சீர்திருத்தத்திற்கும், எதிர்ப்புச் சீர்திருத்தங்கள் வெளிப்படையாயும் மறைமுகமாயும் சூழ்ச்சியாயும் நடந்துகொண்டே வந்திருக்கின்றன. அவைகளில் ஒன்றுதான் அரசியல் இயக்கம் என்பதும், திரு. காந்தியின் வருணாசிரமப் பிரச்சாரம் என்பதும், மற்றும் வருணாசிரம தர்ம பரிபாலன மகாநாடு, பிராமண மகாநாடு, இந்து மகாநாடு, ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு, சைவசித்தாந்த மகாநாடு, வைணவச் சித்தாந்த மகாநாடு, ஆத்திகர்கள் மகாநாடு என்று சொல்லப்படுபவைகள் போன்றவைகளும், இராமாயணம், பாரதம், பாகவதம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய புராண இதிகாசக் காலட்சேபங்களும், வேத, சாத்திரப் புராணப் பாடசாலைகள் முதலியவைகளும், இவைகளுக்கு அடிக்கடி பாஷியங்கள் கிளப்புவது முதலியவைகளுமாகும்.

ஆதலால் வெறும் சீர்திருத்தங்கள் எப்பேர்ப்பட்ட வீரர்களால் செய்யப்படினும் அவைகளை மேற்கண்ட கரையான்கள் அடியோடு அழித்துக் கொண்டே வந்து விடுமேயொழிய ஒரு சிறு பாகத்தையும் மீதியிருக்க விடாது என்பதைத் தயவுசெய்து உணருங்கள்.

(அதிகப்படுத்தவுமே வேண்டும்)... ஆகையால் நீங்களெல்லோரும் இம்மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களைத் தைரியமாக நடத்தையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். உண்மையான சீர்திருத்தத்தை நமது நாட்டிற்கு விரும்புபவர்கள், முதலில் சீர்திருத்தக் கொள்கைக்கு இடையூறாக இருக்கும் புல்லுருவிகளையும், கரையான்களையும் அழிக்கத் தைரியமாய் முற்பட வேண்டும். பழக்க வழக்கம் என்கின்ற பிசாசுகளை முதலில் ஓட்டிவிட வேண்டும்.

பழக்கவழக்கங்களை விடவேண்டுமானால் மனிதன் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். அப்படிப் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; எழுதி வைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; அநேகர் பின்பற்றுவதாலேயே நம்பிவிடக்கூடாது; கடவுளாலோ மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே நம்பிவிடக்கூடாது. ஏதாவது ஒரு விஷயம் நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய்த் தோன்றுவதாலேயே அதைத் தெய்விகம் என்றோ மந்திரசக்தி என்றோ நம்பிவிடக்கூடாது. எப்படிப்பட்ட விஷயமானாலும் நடுநிலைமையில் இருந்து பகுத்தறிவுக்குத் தாராளமாய் விட்டு ஆலோசிக்கத் தயாராயிருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் கண்மூடித்தனமான பழக்கவழக்கம் முதலியவைகளை ஒழிக்க முடியும்.

**அப்படிக்கில்லாமல், ‘எதையும் நம்பித்தானாக வேண்டும்’; ‘பெரியவர்கள் நடந்தபடிதான் நடக்க வேண்டும்’ என்று நினைப்போமானால், எதை நம்புவது? யார் சொன்னது சரி? யார் சொன்னது தப்பு? எந்த எந்தப் புத்தகம் கடவுள் சொன்னது? அதில் எதெது மத்தியில் நுழைக்**

**கப்பட்டது? அவைகளில் அறிவாளிகளுக்கு எழுதியது எது? புத்தியில்லாத பாமர மக்களுக்கு எழுதியது எது? பெரியவர்கள் யார்? - இவை போன்ற விஷயங்களுக்குச் சமாதானம் எங்கே இருக்கிறது? நமது சீர்திருத்த வேலையின் ஜீவநாடி இந்த இடத்தில்தான் இருக்கிறது. இங்குதான் மனிதன் தைரியமாயும் உறுதியாயும் இருக்க வேண்டும்.**

**தீவிர சீர்திருத்தங்களைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதன்மூலம் மக்களுக்கு எடுத்துச் சொல்லி முழுவதையும் சரிப்படுத்திவிடலாம் என்று எண்ணுவதும் மிகுதியும் பைத்தியக்காரத்தனமாகும்.**

ஏனெனில், நமது பிரச்சாரத்தைச் செய்வதற்கு நமக்குள்ள சந்தர்ப்பத்தைக் காட்டிலும் - நமது சீர்திருத்தத்திற்கு எதிரிகளான வைதிகர்கள், பண்டிதர்கள், சுயநலப் பார்ப்பனர்கள், அவர்களது கூலிகள் ஆகியவர்களுக்கே மிகுதியும் சந்தர்ப்பங்களும், சவுகரியங்களும் அதிகமாய் இருக்கின்றன. எப்படியெனில், கோயில்கள், புராணங்கள், சித்திரப்படங்கள் ஆகியவைகளும்; அவைகளின் உற்சவம், காலட்சேபம், பஜனை, சம்பிரதாயம் ஆகியவைகளும்; பள்ளிக்கூடப் படிப்பு, பாடப் புத்தகம் முதலியவைகளும் யாருடைய பிரயத்தனமும் இல்லாமல் மக்களுக்குள் சீர்திருத்தத்திற்கு விரோதமான விஷயத்தைப் புகுத்திவிடுகின்றன. இது தவிர, கோடிக் கணக்கான ரூபாய்கள் வருவாய் கொண்ட மக்களும் மடாதிபதிகளும் ஸ்தாபனங்களும் வெட்டி ஆள்களும் இருக்கின்றனர்.

**அன்றியும், ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் பெற்று, அதன்மூலம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களால் சட்டங்கள் செய்யப்பட்டு, முழு சீர்திருத்தங்களையும் செய்துவிடலாம் என்று எண்ணுவதும் அறியாமையே ஆகும். ஏனெனில், ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் என்பன பெரிதும் பாமர மக்களிடையே இருக்கின்றன. பிரதிநிதிகளாக வருபவர்களும் பெரிதும் சீர்திருத்த விரோதிகளுக்குப் பயந்தவர்களாகவும், சரியான சீர்திருத்த அறிவு இல்லாதவர்களாகவுமே இருக்கிறார்கள்.**

**சர்க்காரும் நம்முடைய கேவல நிலையினால் வாழ வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதனால், உண்மையானதும் முடிவானதுமான சீர்திருத்தம் ஒரு நாட்டிற்கு வரவேண்டுமானால், ஏகச் சக்ராதிபத்தியத் தன்மை கொண்ட ஒரு வீரனின் ஆட்சியில்தான் முடியும்.**

**அதாவது, 'இந்தப் பொதுக் கோயிலுக்குள் செல்ல எல்லோருக்கும் உரிமை உண்டு' என்று விளம்பரம் செய்ய வேண்டும். யாராவது ஆட்சேபித்தால் அவர்களைச் சிறையிலிட வேண்டும். இதைப் பொது ஜனங்கள் கூட்டம் போட்டுக் கண்டிக்க ஆரம்பித்தார்களானால் உடனே கோயிலை இடித்தெறிந்து விடவேண்டும்.**

**சாதி வித்தியாசமோ, உயர்வு தாழ்வோ கற்பிக்கின்ற புத்தகங்களைப் படிக்கக் கூடாது என்று சொல்லிவிட வேண்டும்; மீறிப் படிக்க ஆரம்பித்தால் அவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும். உயர்வு-தாழ்வு வித்தியாசம் முதலியவை கொண்ட மடாதிபதிகளை எல்லாம் சிறையில் அடைத்துவிட வேண்டும். பொதுஜனங்கள் கிளர்ச்சி செய்தால் மடாதிபதிகளைத் தீவாந்தரத்திற்கு அனுப்பிவிட வேண்டும். சாமிகளுக்கு உள்ள நகைகள், வாகனங்கள், பூமிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து, அவைகளை விற்றுப் படிப்பில்லாதவர்களுக்குப் படிப்பும், தொழில் இல்லாதவர்களுக்குத் தொழிலும் ஜீவனமும் ஏற்படுத்த உபயோகப்படுத்திவிட வேண்டும்.**

**இதுபோன்ற காரியங்கள் செய்யத்தக்க உரம் கொண்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவர வேண்டும். அப்பேர்ப்பட்ட வீரர்களின் ஆட்சிக்குட்பட்ட நாடுகள்தான் இன்று சுயமரியாதையும் சீர்திருத்தமும் பொலிந்து விளங்குகின்றன.**

**அப்பேர்ப்பட்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டு வரவேண்டுமானால், அநேக சீர்திருத்தக்காரர்கள் உயிர்துறக்கத் தயாராயிருந்துகொண்டு பாமர மக்களிடையில் உண்மையைப் பரப்ப முன்வர வேண்டும்.**

நம் நாட்டுப் பார்ப்பனர்கள் நம் சீர்திருத்தங்களை எதிர்க்க வெளியில் வருவதில்லை. ஒரு விதத்தில் ஒளிந்துகொண்டார்கள். ஆனாலும், நம்மவர்களிடையே சில கூலிகளையும் ஏமாந்த சோணகிரிகளையும் பிடித்து அவர்களை நம்மீது ஏவிவிட்டு தடைவேலை செய்யச் செய்துவிட்டு, தங்களுக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் செய்துகொள்ள வருணாசிரம தர்ம மகாநாடு, ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு, பிராமணர்கள் மகாசபை, சனாதன தர்மிகள் மகாநாடு, வேதவித்துக்கள் மகாநாடு, புரோகிதர்கள் மகாநாடு, பண்டிதர்கள், சாஸ்திரிகள், கனபாடிகள் சம்மேளனம் ஆகிய பல மகாநாடுகள் திருட்டுத்தனமாகவும் சூழ்ச்சியாகவும் கூட்டி, அவற்றில் பல இரகசியத் தீர்மானங்கள் செய்து, இரகசிய சமாச்சாரப் போக்குவரத்து மூலம் தெரிவித்துக் கொண்டு கட்டுப்பாடாய் வேலை செய்து வருகிறார்கள்.

இவ்வளவும் செய்துவிட்டு, சீர்திருத்த இயக்கத்திற்கு, 'நாத்திக இயக்கம்' என்ற பெயரைக் கொடுத்து, அதற்குப் பல தப்பர்த்தங்களையும் பழிப்புக்களையும் கற்பித்து வருகிறார்கள். இதைச் சில பார்ப்பனரல்லாதவர்களும் நம்பிக்கொண்டு அர்த்தமில்லாமல் குற்றம் சொல்கின்றார்கள். ஆனாலும், சீர்திருத்தக்காரர்கள் என்பவர்கள் நாத்திக மதம் என்கின்ற பூச்சாண்டிக்குப் பயப்படக்கூடாது. அது ஒரு அர்த்தமற்ற வார்த்தை. அதன் உண்மை அர்த்தமும் உண்மைப் பிரயோகமும்

என்னவென்றால், 'பார்ப்பனியத்தில் அதாவது பார்ப் பனர்களுடைய வேதம், சாத்திரம், இதிகாசம், புராணம் ஆகியவைகளில் நம்பிக்கை இல்லாதவன்; பார்ப்பனர் களின் புரட்டுக்களைக் கண்டுபிடித்து வெளிப்படுத்து கின்றவன்' என்பதாகும். இந்நிலையில், நாம் எல் லோரும் நல்ல உறுதியான நாத்திகர்களே ஆவோம். ஆகையால், நாம் ஒவ்வொருவரும் தைரியமாய் நம்மை நாத்திகர் என்றே சொல்லிக்கொள்ள வேண் டும். சீர்திருத்தக்காரர்கள் தங்களுடைய பெயரின் இறுதியில், 'நாத்திகன்' என்ற பட்டத்தையே சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாத்திகப் பூச்சாண்டி யைக் கொல்ல முடியும்.

**நமக்கும் வேதத்துக்கும் என்ன சம்பந்தம்? அதை யார் உண்டாக்கினார்கள்? யாருக்காக உண்டாக்கப்பட்டது? என்ன பாஷையில் செய் யப்பட்டது? அதில் நமது நிலைமை என்ன? மேற் கண்ட விஷயங்களை யோசித்துப் பார்த்தால், அதை நம்பலாமா? நாம் ஒப்புக்கொள்ளலாமா? அது நமது மக்களிடையே பரப்பப்படுவதற்கோ இருப்பதற்கோ இடம்கொடுக்கலாமா? என்பன விளங்கும்.**

**கடைசியாக, சீர்திருத்தக்காரர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.**

மதவெறியும் சமயவெறியும் பிடித்தவர்களும் - பொதுவாகப் பார்ப்பனர்களும், சமத்துவம், சுதந்தரம், சுயமரியாதை, பகுத்தறிவு ஆகியவைகள் கொண்ட சீர்திருத்தத்திற்கு எப்போதுமே விரோதிகள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஒருவர், 'எங்கள் மதத்தில் மேற்கண்ட சீர்திருத்த முண்டு' என்பார். 'ஆனால், எங்களைப்போல் வேடம் போட்டுக்கொள்ள வேண்டும்; எங்கள் வேதத்தை நம்ப வேண்டும்; எங்கள் சாமியையும் தூதனையும் வணங்க வேண்டும்' என்று சொல்லுவார்கள்.

மற்றொருவர், 'எங்கள் சமயத்தில் சீர்திருத்தம் உண்டு. ஆனால், எங்களைப் போல் வேடம் போட்டுக் கொண்டு எங்கள் சாமிகளையும் புராணங்களையும் நம்ப வேண்டும்' என்பார்கள். நம்பாவிட்டால் 'நாத்திகர், அஞ்ஞானி, பாவிகள், சமயத் துவேஷி' என்று சொல்லி விடுவார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும், இவர்கள் உண்மைச் சீர்திருத்தத்திற்கு விரோதிகள் என்பதையும் மறந்து விடாதீர்கள்.

முக்கிய எச்சரிக்கை என்னவென்றால், பார்ப்பனர் களில் சிலர் சீர்திருத்தக்காரர்கள் என்று சுலபத்தில் பட்டம் பெற்றுப் 'புரட்டு' விடுவார்கள். அதாவது, கள்ளும் சாராயமும் குடித்தால் அதனாலேயே அவர் ஒரு சீர் திருத்தக்காரர் ஆகிவிடுவார். ஒருவர் ஆடு, மாடு, பன்றி சாப்பிட்டால் அதனாலேயே அவர் ஒரு சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார். மற்றொருவர் வெட்டிச் சோறாக யார் வீட்டிலும் கிடைத்ததையெல்லாம் சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக் கொண்டு திரிந்தால் அதனாலேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார். மற்றொருவர், ஒழுக்கமில்லாமல் யாரையும் எந்தப் பெண்ணையும் கலியாணமாகவோ வைப்பாட்டியாகவோ வேசியா கவோ அனுபவித்துக் கொண்டு திரிந்தால் அதனா லேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார். ஜனங்களும் முட்டாள்தனமாக அவர்களை வித்தியாச மற்றவரென்றும், சீர்திருத்தக்காரர்கள் என்றும் நம்பி விடுவார்கள். ஆனால், அவர்களால் சீர்திருத்தத்திற்கு மாத்திரமன்னியில் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பெரிய ஆபத்து என்பதை மறந்துவிடாதீர்கள்.

மற்றும், எந்த விஷயத்திலும் சாமியையும் மதத் தையும் குறுக்கே கொண்டு வந்து போட்டுவிடுகின்றார் கள். ஆகவே, உங்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக எந்த மதமாவது, கடவுளாவது குறுக்கிட்டால் அவற்றைத் தைரியமாக எதிர்க்க வேண்டுமென்றே கேட்டுக் கொள்கிறேன்.

**இனி, பார்ப்பனர்கள் நம்மிடம் வித்தியாசம் காட்டுவதுடன், பார்ப்பனரல்லாதாருக்குள்ளும் பற்பல சாதியார் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டுகின்றனர். மேல்சாதியார்கள் நீங்கள் உங்களுக்குச் சமமாக இருக்க வேண்டுமென்று விரும்புவீர்களானால், உங்களுக்குக் கீழேயுள்ள சாதியார்களுக்கும் நீங்கள் சமத்துவம் அளிக்க வேண்டும். நம்மிடமிருக்கும் கொடுமை, பார்ப் பனர்கள் காட்டும் கொடுமைகளைவிடச் சற்று அதிகம் என்றே சொல்ல வேண்டும். ஆனால், நாம் பார்ப்பனர்களை ஏன் அதிகமாகச் சொல்லு கிறோமென்றால், அவர்கள் வைத்த தீ தான் நம்முடைய வீடுகளிலும் பிடித்துக் கொண்டது. நாம் மேல்சாதி என்பாரோடு சண்டை செய்து, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையில் வெற்றி பெற்றால், கீழ்சாதியார்களெனச் சொல்லப்படுகிற வர்களுக்கும் அவர்களுக்குரிய பங்கை நாம் கொடுக்க வேண்டும். சர்வகட்சி மகாநாட்டுத் திட்டத்தில் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்ற விஷயமே காணப்பட வில்லை. பார்ப்பனர்களுக்குப் பயந்தே எல்லோரும் அதில் கையெழுத்துப் போட்டுவிடுகிறார்கள். முதலில் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவம் கொடுப்பதை விட வேறு என்ன சீர்திருத்தம் வேண்டும் என நினைக்கின்றீர்கள்?**

பிச்சை எடுப்பதற்கு உபயோகமாயிருக்கும் வேதப் படிப்பிற்காக, கொள்ளை கொள்ளையாக இலாபம் சம்பாதிக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள், பார்ப் பனர்களுக்குச் சோறும் போட்டுப் படிக்கும்படிச் செய்கின் றார்கள். இம்மாதிரியான உதவி ஆதித் திராவிடப் பிள்ளைகளுக்கு அளிக்கப்படுமானால், அவர்களில்

வயிற்றுப்பிழைப்பிற்கு வழியின்றிச் சிறுவயதிலேயே கூலிக்குச் செல்லும் எத்தனையோ பிள்ளைகள் பள்ளிக் கூடம் சென்று படித்து மந்திரி வேலைக்குத் தயாராக இருப்பார்களென்பதை நினைத்துப் பாருங்கள்.

இனி, சிலர் வேதங்களும், புராணங்களும் பழங் கதை என்று சொல்லிக் கொண்டு, பண்டிகை, திதி, திவசம், கிரகணம் ஆகியவைகள் வரும்போது, அவர்கள் அப்புத்தகங்களையே முதலில் திறந்து பார்ப்பார்கள். ஆனால், அவர்களைக் கேட்டால், 'வழக்கத்திற்கு விரோத மாக நடக்கலாமா?'வென்று கூறுகிறார்கள். அவர்களை எந்தக் கூட்டத்தில் சேர்ப்பது?

**கடைசியாக, சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கம் கற்பிக்கவும், அறிவை விருத்தி செய்யவும், ஜீவன்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியை யும் அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும். ஆகையால் நீங்களெல்லோரும் இம்மகாநாட் டில் நிறைவேறிய தீர்மானங்களைத் தைரியமாக நடத்தையில் கெண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.**

(26.11.1928இல் சென்னையில் தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் மாநாட்டில், ஈ.வெ.ரா., தலைமை முடிவுரை; 'குடிஅரசு', 9.12.1928)

## திரைப்படப் பாடலாசிரியர் நா. முத்துக்குமார் மறைந்தார்!



தமிழ்த் திரைப்பட உலகில் 15 ஆண்டுகளுக்கு மேல் புகழ்பெற்று விளங்கியவரும், 1500 பாடல் களுக்குமேல் படைத்தவருமான கவிஞர் நா. முத்துக் குமார் அவர்கள், 14.8.2016இல் முதிராச்சாவு எய்தினார் என்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம். அவரது மறைவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**- ஆசிரியர் குழு**

## கட்சிச் சார்பற்ற விவசாயிகள் சங்கத் தலைவர் பேராசிரியர் எம்.ஆர்.சிவசாமி மறைந்தார்!



கட்சிச் சார்பற்ற மாநில விவ சாயிகள் சங்கத் தலைவர் பேரா சிரியர் முனைவர் எம்.ஆர். சிவசாமி அவர்கள், கோவை காரமடை யருகே உள்ள மத்தம் பாளையத் தில் தம் இல்லத்தில், 14.8.2016 அன்று, தம் 83ஆம் வயதில் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இவர் தலைமை யிலுள்ள சங்கத்தினரும், மா.பெ.பொ.க. வேளாண் அணியினரும் இணைந்து பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறோம்.

2015இல் மா.பெ.பொ.க. வேளாண் அணி சென் னையில் நடத்திய மாநாட்டைத் தோழர் எம்.ஆர். சிவசாமி தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரது மறைவு மாநில விவசாயிகள் சங்கத்தாருக்கும், தமிழக வேளாண் இயக்கங்களுக்கும், அவர்தம் குடும்பத் தார்க்கும் பேரிழப்பாகும். அனைவர்க்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

வளர்க பேராசிரியர் சிவசாமி புகழ்!

**- வே. ஆனைமுத்து**

## திருச்சி எஸ். வயணப் பெருமாள் துணைவியார் பாலம்மாள் மறைவுற்றார்


திருச்சியில், 1950 முதல் திராவிடர் கழகச் செயல் மறவராகவும், முன்னணி எவர்சில்வர் வணிகராகவும் விளங்கியவர் எஸ். வயணப் பெருமாள் அவர்கள். தி.க. தொண்டர்களுக்கு ஊக்கம் அளித்தவர்; தந்தை பெரியார், தி.பொ. வேதாசலம் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர். நான் திருச்சியில் 1950இல் வெளியிட்ட "குறள்மலர்" இதழின் ஆதரவாளர். அன்னாரின் அன்புத் துணைவியார் பாலம்மாள் அவர்கள், மதுரையில், தம் மகள் இராஜாமணியின் இல்லத்தில், 17.8.2016 புதன் அன்று இரவு, தம் 94ஆம் வயதில் மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

அவருடைய உடன்பிறந்த தங்கையும், மா.பெ.பொ.க. செயல் மறவர் மறைந்த சீர்காழி மா. முத்துச்சாமியின் துணைவியுமான பேச்சியம்மாள் அவர்கள் 1.6.2016 அன்று 88ஆம் அகவையில் இறந்த செய்தியறிந்து, தம் உடல் நலிவுற்றிருந்த போதும் மகிழுந்தில் சீர்காழிக்கு வந்து, தங்கைக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்; அவர்தம் மக்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, உடனே மதுரைக்குப் புறப்பட்டார். போற்றுதலுக்குரிய மூதாட்டி பாலம்மாளை இழந்து துயரு றும் இரு குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலை உரித் தாக்குகிறோம்.

**வளர்க, வ. பாலம்மாள் புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# தத்தனூர் பொட்டக்கொல்லை தந்த தமிழறிஞர் தமிழ்மணியை இழந்தோம்!



உடையார்பாளையம் வட்டம், ஜெமீன் தத்தனூர் பொட்டக் கொல்லைக்கு, நான் முதன்முதலாக 1947 அக்டோபரில் சென்றேன். அன்று தொட்டு அவ்வூர்ப் பெரியவர்கள் பலரை அறிவேன்.

1957 நவம்பரில், தந்தை பெரியாரின் கட்டளையை ஏற்று, என்னுடன் சேர்ந்து, பொட்டக்கொல்லை கோவிந்தசாமி, துரைக்கண்ணு, சி. இராமசாமி, தமிழரசன் ஆகிய இளந்தோழர்கள் அரசமைப்புச் சட்டத்தை எரித்து, அதற்கான தண்டனையை ஏற்றனர். அவர்களுள் எஞ்சி இருப்பவர்கள் துரைக்கண்ணுவும், சி. இராமசாமியும் மட்டுமே.

எங்களையெல்லாம் விட, அகவையால் மிக இளையவர் பொட்டக்கொல்லை சி. இராமசாமி என்கிற தமிழ்மணி. அவர் திருச்சி பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில், 1960-1962 இல் படித்த காலம் முதல் நெருக்கமாக அவரை அறிவேன்.

அவர் அடக்கத்தின் உருவம்; ஆழ்ந்த தமிழறிவின் அடையாளம்; கடமையில் கணந்தோறும் கவலைகொண்ட நல்லாசிரியர்; சுயமரியாதைக் கொள்கைக் காவலர்.

இவ்வளவு தகுதிகளுக்குமேல் தந்தை பெரியாரின் தலைமையில்-தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார், தமிழறிஞர் பொன். கோதண்டராமன், வே. ஆனைமுத்து ஆகியோரின் அறிவுரைகளுடன், 30.6.1968 முற்பகலில் அன்பே வடிவான கமலம் அவர்களை வாழ்க்கைத் துணைவியாராக ஏற்றார். அவருடைய மன்றல் விழா, ஒரு மாநாடு போல் நடைபெற்றது.

அன்று காலை 6 மணிமுதல் 7.30 மணிவரை மருவத்தூரில் பொன். இராசமாணிக்கம்-பொன். எழிலரசி திருமணத்தைத் தந்தை பெரியார் நடத்தி வைத்தார். மேலேகண்ட நாங்கள் மூவரும் அறிவுரை வழங்கினோம்.

தங்கத்தம்பி பொன். இராசமாணிக்கம் ஏற்கெனவே 2003 இல் மறைந்துவிட்டார். 1.8.2016 அன்று 74ஆம் வயதில் தமிழ்மணியும் மறைந்துவிட்டார். நானும், பொற்கோவும் உள்ளோம்-ஆனால், நம் இளைய தலைமுறையினர் இருவரைப் பறிகொடுத்துவிட்டோம்.

“வாழுங்காலத்தில் நல்லன செய்வதைத் தள்ளிப்போடாதே” என்கிற ஒரு நல்ல பாடத்தை இந்த இளைஞர்களை இழந்து துயருறும் நான் உணருகிறேன்.

கணவரை இழந்த கவலையில் மூழ்கியிருக்கும் கமலம் அவர்களை 21.8.2016 பகல் 1 மணிக்கு அரியலூரில் அவருடைய வீட்டில் காணப்போனேன். ஓடிவந்த அவர் என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு குமுறினார். முதுமையிலும் அஞ்சாத நானும் அழுதுவிட்டேன். தமிழ்மணியின் இறப்பை எண்ணியெண்ணி நொந்தேன்.

அவர் பெற்றிருந்த தமிழறிவு ஆழமானது; சுயமரியாதைக் கொள்கையில் அவர் பெற்றிருந்த பிடிப்பு கெட்டியானது; தம் மக்களை முன்னேற்றுவதில் அவர் கொண்டிருந்த அக்கறை போற்றத்தக்கது.

2012இல் தம் ஒரே மகன் அறிவுச்செல்வனைப் பறிகொடுத்தார். தாளமுடியாத - மீளமுடியாத துயரில் 10.7.2012 லேயே தமிழ்மணியும் கமலமும் மூழ்கினர். அறிவுச்செல்வனின் உழைப்பைச் சுரண்டியவர்கள், நம் தமிழ்மணியை ஏறெடுத்தும் பார்க்காதது ஓர் அவலம்!

பல நல்ல நூல்களைத் தமிழர்க்குத் தந்த தமிழ்மணி அவர்கள், இறுதியாக எழுதிய - “திரும்பிப் பார்க்கிறேன்! திகைத்து நிற்கிறேன்!” (தன் வரலாறு) என்ற நூலை, எனக்குக் காணிக்கையாகப் படையலாக்கியுள்ள அறிஞர் சி. தமிழ்மணி அவர்களை, என்றும் நான் மறக்க இயலாது. ஆற்றொணாத் துயரில் மூழ்கியுள்ள அவருடைய துணைவியார், என் அன்புக்குரிய மகள் கமலம் அவர்களும், அன்னாரின் மகள் தமிழரசி, மருமகன் சாமதுரை மற்றும் பெயரக்குழந்தைகளும் உறவினர்களும் மனந்தேற வேண்டுகிறேன்.

படத்திறப்பு நிகழ்ச்சியை முன்னிட்டு, ‘சிந்தனையாளன்’ வளர்ச்சி நிதியாக உருவா 1,000 கமலம் தமிழ்மணி வழங்கினார்.


வெல்க, வெல்க சி. தமிழ்மணியின் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

## அரகண்டநல்லூர் கு. மாலதி அவர்களின் இரண்டாமாண்டு நினைவு நாள் விழா

மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் அறிஞர் வே. ஆனைமுத்து, தமிழக முன்னாள் அமைச்சர் மறைந்த ஏ. கோவிந்தசாமி இவர்களின் அன்புக்குரியவரும், வளவனூர் பழக்கடை தேங்காய் மண்டி உரிமையாளர் மறைந்த நா.ஆதிமூலம் அவர்களின் மருமகளும், பெரியார் தொண்டர் தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாவட்டத் துணை அமைப்பாளர் சேகர் (எ) ஆ.குணசேகரன் துணைவியாருமான திருமதி. கு.மாலதி அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் விழா, 6.8.2016 அன்று ஆ. குணசேகரன் இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நகர தி.மு.க. செயலாளர் ர. சுந்தரமூர்த்தி மணம்பூண்டி - பா. கார்த்திகேயன் உள்ளிட்ட தி.மு.க. தோழர்கள் கலந்துகொண்டார்கள். திருமதி. கு. மாலதியின் உருவப் படத்தைப் பேரூராட்சித் தலைவர் ஆர். வாசிம்ராஜா திறந்து வைத்தார். அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.



# பெரியார் - நாகம்மை கல்வி அறக்கட்டளை அறங்காவலர் குழுவின் நிறுவனச் செயலாளர், அம்பத்தூர் குப்பம் தே. முத்து மறைந்தார்

புன்முறுவல் பூத்த முகம், காற்றில் அசைந்தாடும் தலைமுடி, ஆறடிக்கு மேல் உயரம், கால்நடையாகவும் பேருந்திலும் அலைந்து அலைந்து தொழில்கள் வளர்ச்சிக்கும் பெரியார் சுயமரியாதைக் கொள்கை வளர்ச்சிக்கும் உரம் சேர்த்த ஓயாத உழைப்பு - இவ்வளவு இயல்புகளுக்கும் இருப்பிடமானவர், அம்பத்தூர் குப்பம் தே.முத்து அவர்கள்.

அன்னார் நம்மிடையே 85 ஆண்டுகள் 7 மாதங்கள் 8 நாள்கள் வாழ்ந்து 11.8.2016 வியாழன் காலை 8 மணிக்கு மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தே.முத்து, 3.1.1931இல் திருக்கழுக்குன்றம் அடுத்த மானாமதி ஓட்டேரியில் வேளாண்மைத் தொழிலில் முன்னணியிலிருந்த தேவராசன் - கன்னியம்மாள் இணையருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர். உடன்பிறந்த மூத்தவர் தம்பிரான் சில ஆண்டுகளுக்கு முன் மறைந்தார். தம்பி பார்த்தசாரதி, தங்கை கௌரி நலமாக உள்ளனர்.

2014இல் தே. முத்து அவர்களின் உடல்நலம் கெட்டது. அப்போது முதல் அவருடைய துணைவியார் ஜெயலட்சுமி மனம் நைந்து, ஒரு நொடி கூடப் பிரியாமல் முத்துவுடன் இருந்தார்.

தோழர் தே. முத்து 1960 முதல் சுயமரியாதைக் கொள்கையாளர். தந்தை பெரியாரிடம் நெருங்கிப் பழகி அன்னாரின் மதிப்பைப் பெற்றவர்; பெரியாரின் கொள்கை நூல்களைத் தம்மோடு இரயல்வே கேரேஜ் தொழிற்சாலையில் பணிபுரிந்த தோழர்களிடையே இடைவிடாது பரப்பியவர்.

தந்தை பெரியார், ஈ.வெ.ரா. மணியம்மை, "விடுதலை" சா. குருசாமி, தே.மு. சண்முகம், திருவாரூர் கே. தங்கராசு, திருச்சி வே. ஆனைமுத்து, "விடுதலை" கி. வீரமணி ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர்.

தொழிற்சாலையில் பணியில் இருந்தபோதே, சொந்தமாக, பேட்டரிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான ஆசிட், டிஸ்டில்டு வாட்டர் இவற்றை உற்பத்தி செய்து விநியோகம் செய்து பெரும் பொருள் ஈட்டியவர்; தம் துணைவியாரையும், ஆறு மகள்களையும், ஒரே மகன் எழில்குமாரையும் பொன்னே போல் போற்றி வளர்த்தவர்; தம் மக்களுக்கு வேண்டிய செல்வத்தைத் தேடி வைத்தவர்; உறவினர்களையும், உதவிநாடி வந்தவர்களையும் மகிழ்ச்சியுடன் ஆதரித்து மனம் பூரித்தவர்.

1993க்குப் பிறகு, வே. ஆனைமுத்து, தம் வழிகாட்டி ஆ. கிருஷ்ணசாமி ஆகியோருடன் இணைந்து, அம்பத்தூரில், சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலையில், "பெரியார் ஈ.வெ. இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை" நிறுவப்பட முன்னின்றவர்; அதன் அறங்காவலர் குழுவின் ஆயுள்காலச் செயலாளராக, 11.8.2016இல் மறையும் வரையில் விளங்கியவர்.

2015 செப்டம்பர் 20 ஞாயிறு அன்று அறக்கட்டளை வளாகத்தில் நடைபெற்ற "சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி வகுப்பு" தொடக்க விழாவில் மகிழ்ச்சியுடன் பங்கேற்றார்.

கடந்த 10 மாதங்களாக உடல்நலிவுற்றிருந்த தே. முத்து அவர்கள், 11.8.2016 காலை மறைவுற்றார்.

அன்னாரின் மறைவை ஒட்டி உறவினர்களும், பெரியார் தொண்டர்களும், நண்பர்களும் 11.8.2016, 12.8.2016 இரு நாள்களிலும் வந்து, அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

12.8.2016 காலை இறுதி ஊர்வலம் புறப்படுமுன், இல்ல முன்புறப் பந்தலில், வே.ஆனைமுத்து தலைமையில் நடந்த இரங்கல் கூட்டத்தில், தி.க., தி.மு.க., மா.பெ.பொ.க. தோழர்களும் உறவினர்களும் இரங்கல் உரையாற்றினர்.

அன்னாரின் உடல் அடக்கம் அம்பத்தூர் இடுகாட்டில் 12.8.16 முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றது.

**பெரியாரின் கொள்கை வளர்ச்சியில் நாட்டங்கொண்ட தோழர் தே. முத்து அவர்களின் மறைவு அன்னாரின் குடும்பத்தாருக்கும், பெரியார் இயக்கத்தினர் அனைவர்க்கும், பெரியார் - நாகம்மை அறக்கட்டளையினர்க்கும் பேரிழப்பாகும். புகழ் வடிவில் என்றும் வாழ்வார் - நம் தே. முத்து!**

**வாழ்க, வளர்க தே.முத்துவின் புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# உறையூரில் பிறந்த உழைப்பாளி - தம்பி நீலமேகம்! உன்னை எப்படி மறப்பேன்?

திருச்சிராப்பள்ளியில், 1961இல் குடியேறிய நான், உறையூரில் குடியிருந்தேன். எனக்கு உற்ற துணை கோ. முத்துகிருஷ்ணன், இரா. கலியபெருமாள், சின்ன பக்கிரி ஆகிய பெரியார் தொண்டர்கள். மற்றும் சீனி வாசன், அய்யாக்கண்ணு, பெரிய பக்கிரி ஆகியோர் நல்ல நண்பர்கள்.

சு. நீலமேகம், இரா. கலியபெருமாள் இருவரும் என் உடன்பிறவாத் தம்பிகள்.


நான் ஊரில் இல்லாவிட்டாலும், இருந்தாலும் என் வீட்டில் எல்லோரோடும் பழகிடவும், எல்லா உதவி களையும் செய்திடவும் ஆர்வத்தோடும் அன்போடும் இருவரும் துறுதுறுவென நிற்பர். நிற்க.

நான் கோவையிலிருந்து 20.8.2016 சனி காலை 5 மணிக்கு திருச்சி சந்திப்பை அடைந்தேன். வெளியே வந்து தானியில் ஏறியுடன், ''நம்ப நீலமேகம் படுத்த படுக்கையாக இருக்கிறார். காலை சிற்றுண்டியை முடித்துக் கொண்டு, நாம் உடனே அவரைப் பார்க்க வேண்டும்'' என்றார், தோழர் இரா.கலியபெருமாள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

பேருந்தில் ஏறி, நீலமேகம் வீட்டுக்குப் போனோம். நீலமேகம் மருமகள் ஓடோடி வந்து, அழைத்து உட்கார வைத்து, ''மாமா-ஒருவாரமா கிறித்துவ மிஷன் ஆஸ்பத் திரியிலே இருக்கிறார்'' என்றார். அங்கிருந்து தானியில் மருத்துவமனைக்குப் போனோம். மகன் நீ.சுப்பிரமணியம், நீலமேகம் இருக்கும் அறைக்கு அழைத்துப் போனார். கட்டிலில் சுருட்டி முடக்கிக் கொண்டு படுத்திருந்தார், நீலமேகம். நான் ஒரு குரல் கொடுத்தவுடன், கண் விழித்தார்; ஒருமணித்துளி என்னை உற்றுப் பார்த்தார். தாளமுடியாமல் கண்ணை மூடிக்கொண்டு முடங்கினார்.

''அப்பா, வந்திருக்கிறது யார் தெரியுதா'' என்று மகன் கேட்டவுடன், 'ஆனைமுத்து அய்யா' என்று கூறிவிட்டு, மீண்டும் முடங்கினார்.

1973 முதல் 1982 வரையில் நான் திருச்சி நகரத் தொடர்வண்டி நிலையத்தருகில் குடியிருந்தேன். மாடி யுடன் கூடிய மிகப் பெரிய வீடு; அங்கேயே அச்சகம்; அங்கேயே ''பெரியார் சிந்தனைகள்'' நூல் பெட்டி களின் அடுக்குகள்; அங்கேயே குடியிருப்பு. அதுசமயம் கலியபெருமாள் அரசுப் பணியிலிருந்தார். எனவே எந்த நாளில், எந்த வீட்டுப் பணி என்றாலும் அதை யெல்லாம் செய்தவர் தம்பி சு. நீலமேகம் தான்.



நீலமேகம் ஒடித்துக் கட்டக்கூடிய உடல்; ஓயாத - வாய்பேச்சுக் கொடுக்காத கடும் உழைப்பாளி; என்ன கேட்டாலும் வாய்நிறைய சிரித்துக் கொண்டே, வாயோடு விடை; மிகவும் மரியாதை- மிகவும் அன்புடன் என் னோடும் என் குடும்பத்தாரோடும் பழகியவர், உறையூர் தம்பி சு. நீலமேகம்.

அந்த அன்புத் தம்பி நீலமேகம் 24.8.2016 புதன் காலை 6.00 மணிக்கு, 76 ஆம் வயதில் மறைந்துவிட்டார் என்பதை அறிந்து மிக வருந்துகிறேன்.

என் சார்பிலும், என் துணைவியார், என் மக்கள் சார்பிலும், மா.பெ.பொ.க. சார்பிலும் ஆழ்ந்த வருத்தத் தை, தம்பி நீலமேகத்தின் துணைவியார் பெரியக் காள், மகன்கள் இராசமாணிக்கம், சுப்பிரமணியன், ஆறுமுகம், மகள் செல்வி மற்றும் மருமகள்கள், பெயரக் குழந்தைகள் உறவினர்கள் ஆகியோர்க்கும் மனங் கசிந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க, வாழ்க சு. நீலமேகம் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

## மா.பெ.பொ.க. நகரச் செயலாளர் வீ. இராசாப்பிள்ளை 91ஆம் பிறந்த நாள்

மா.பெ.பொ.க. சிதம்பரம் நகரச் செயலாளர் தோழர் வீ. இராசாப்பிள்ளை அவர்கள், 30.8.2016 அன்று, தம் 91ஆம் பிறந்த நாளைக் கொண்டாடி னார். மகன்கள் முனைவர் சி.இரா. இளங்கோவன், பேராசிரியர் இரா. செங்குட்டுவன், ஓவியர் இரா. புகழேந்தி, மருமகள்கள் மா.பெ.பொ.க. தோழர்கள் பா.மோகன், இரா.காந்தி, ஆசிரியர் ஆறு. கலைச் செல்வன் மற்றும் பலரும், உடனிருந்து பிறந்த நாள் விருந்து உண்டுகளித்தனர்.

# சமற்கிருதம் பேச்சுவழக்கில் இல்லாத மொழி :

# இது நூற்றுக்கு நூறு மெய், மெய். மெய்யே!

# "இந்தி அதிகம் பேரால் பேசப்படும் மொழி" :

# இது நூற்றுக்கு நூறு பொய், பொய், பொய்யே!

# சமற்கிருதம், இந்தியை எதிர்ப்போர் - எங்கெங்கே, என்னென்ன செய்ய வேண்டும்?

பார்ப்பனிய - பிராமணிய மதமே இந்துமதம். எங்கோ தென்கோடியில் இருக்கிற கேரளாவில் பிறந்த ஆதிசங்கரர் கி.பி.800-832இல் 32 ஆண்டுகளே வாழ்ந்தார். அவர் இமயம் முதல் குமரி வரை உள்ள பரப்பைச் செயல்படுகளமாகக் கொண்டார். இந்தியா முழுவதிலும் இருந்த அரசர்களைக் கண்டு, அவர்கள் வழியாக, பௌத்த பிக்குகளுடன் வாதிட்டு, 'இந்து மதமே உயர்ந்த மதம்' என்பதை நிலைநாட்டினார்; பார்ப் பனரே எல்லா இந்துக்களுக்கும் மதகுரு என்பதை நிலைநாட்டினார். இதை எதிர்த்தவர்கள் அப்போதும் இருந்தனர்; இப்போதும் உள்ளனர். அந்த எதிர்ப்பை அவ ரவர் பகுதியில் மட்டுமே செய்தனர்; செய்கின்றனர். இந்திய அளவில் எப்போதும், எவரும் செய்யவில்லை.

பார்ப்பன மதம்-நீர் புனிதமானது; கங்கை, பிரம்ம புத்ரா புனிதமானவை; பசு, புனிதமானது; குரங்கு புனித மானது; சமற்கிருமம் புனிதமானது - தேவர்களுக்கும் கடவுள்களுக்கும் - சிலை வழிபாட்டுக்கும் - ஆண்-பெண்ணை இணைத்து வைக்கும் விவாகம் என்கிற திருமணத்துக்கும் - ஈமக் கடன்களுக்கும் ஓதப்பட ஏற்ற தேவ மொழி - புனித மொழி என்பதை இந்தியா முழு வதிலும் உள்ள இந்துக்களை நம்ப வைத்தது ஏற்க வைத்தது. இவற்றையும் இந்திய அளவில் எவரும் எதிர்க்கவில்லை.

கி.பி.6ஆம் நூற்றாண்டில், வடக்கில் குப்தர் ஆட்சிக் காலம் முதலும், கி.பி.8ஆம் நூற்றாண்டில், தெற்கில் பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர்கள் ஆட்சிக் காலம் முதலும் மேலே கண்ட நம்பிக்கைகளும் நடை முறைகளும் உள்ளன. இன்றுவரை இவை மாற்றப்பட வில்லை.

**இஸ்லாமியர்கள் ஆட்சியோ, வெள்ளையர் கள் ஆட்சியோ இவற்றை மாற்றிட முன்வரவில்லை. இவை அவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்தன.**

வெள்ளையர் வெளியேறிய பின்னர் இந்தியா முழுவதையும் ஆண்ட இந்திய தேசிய காங்கிரசுக் கட்சி ஆட்சியோ, 1977 முதல் 1979 மற்றும் 1990-1996 வரை தவிர, மீதமிருந்த காலத்தில் காங்கிரசிடமே இருந்தது. இதை மாற்றுவதற்கான, உறுதியான - இணக்கமான ஒற்றை மாற்றுத் திட்டத்தை 1948 பிப்ரவரியிலேயே வகுத்த ஒரே இந்துமத அமைப்பு, இராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம் மட்டுமே. கி.பி.2000இல் இந்தியாவில் இராமராஜ்யம் அமைப்பதே அத்திட்டம்.

25.12.1925இல் நிறுவப்பட்ட இந்தியப் பொதுவுடை மைக் கட்சி இந்தியாவை செயல்படு களமாகக் கொண்டது. ஆனால் முன்னர் சொல்லப்பட்ட பார்ப்பன மத "புனிதக் கோட்பாடுகள்" மற்றும் நால்வருணம், உள்சாதிப் பிரிவினைகள் பற்றி - எந்தவேலைத் திட்டத்தையும் அக்கட்சி மேற்கொள்ளவில்லை. இந்திய உழைக்கும் மக்கள் விழிப்புணர்வு பெறவும், விடுதலை பெறவும் - மேலேகண்ட இந்திய நிலைமைகள் பெருந்தடைகள் என்பதாக 14.5.1853லும், 10.6.1853லும் கார்ல்மார்க்சும் - எங்கெல்சும் எழுதியவற்றை இவர்கள் மனங்கொள்ள வில்லை. இது, ஏனோ தெரியவில்லை.

1916இல் நிறுவப்பட்ட திராவிடர் இயக்கமும், 26.12.1926இல், பார்ப்பனர் அல்லாதார் அமைப்பின் முயற்சியால் பெரியாரால் நிறுவப்பட்ட சுயமரியாதை இயக்கமும் எப்போதும் இந்தியாவை செயல்படு கள மாகக் கொள்ளவில்லை. இந்தியாவை உடைத்து 'திராவிட நாடு', 'தனித்தமிழ் நாடு' இவற்றை நிறுவவ விரும்பிய இவ்அமைப்புகளின் செயல்படுகளம் தமிழ் நாட்டோடு நின்றது. 1938இல் கட்டாய இந்திப் பாடத்தை எதிர்த்து நடத்தப்பட்ட மாபெரும் போராட்டம் சித்தூ ருக்கு வடக்கே கால்கொள்ளவில்லை.

இவை நிற்க.

இந்திய ஆட்சியைப் போதிய பெரும்பான்மையுடன் 2014இல் கைப்பற்றிய பாரதிய சனதாக் கட்சியின் நரேந்திர மோடி அரசு, பதவி ஏற்ற நாள் தொட்டு, இராமர் கோவிலைக் கட்டுவது, இந்தி ஆட்சி மொழி என்பதை ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றுவது, சமற்கிருத

மொழியைத் தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி - உயர் தொழிற்கல்வி வரையில் ஒரு கட்டாயப் பாட மொழியாக ஆக்குவது, 'மூச்சுப் பயிற்சி'யை 'யோகா' என்கிற பேரால் பள்ளிகளிலும், அரசு அலுவலகங்களி லும் புகுத்தி, 'சூரிய பகவான்' வணக்கத்தை இந்து - இஸ்லாம்-கிறித்துவ-சீக்கிய மக்களை ஏற்கச் செய்வது; வேதக்கணக்கு, வேத அறிவியல் என்கிற பேரால் புரோகிதம், சோதிடம், வேதங்கள் இவற்றைப் பாலர் பள்ளியில் தொடங்கிப் பல்கலைக்கழகம் வரையில் கட்டாயப் பாடங்களாகத் திணிப்பது என்கிற எல்லாத் திட்டங்களையும் பற்றி, 2015 கல்வி ஆண்டில் தொடங்கி 2016 பிப்பிரவரி, ஏப்பிரல், மே மாதங்களில் திட்டவட்ட மான முடிவுகளை மோடி அரசு அறிவித்துவிட்டது.

1. இம்முடிவுகளை நாம் எல்லோரும் எதிர்க்க வேண் டும் - அதாவது இந்தியர் எனப்படும் எல்லோரும் எதிர்க்க வேண்டும் என்பது முதலாவது.
2. இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராத - எல்லாப் பிறமொழிக்காரரும் எதிர்க்க வேண்டும் என்பது இரண்டாவது.
3. இந்த இரண்டு எதிர்ப்புகளையும் மேற்கொள்ள விரும்பும் உண்மையான கொள்கையாளர்கள் இந்தியா முழுவதையும் செயல்படுகளமாகக் கொள்ள வேண்டும் என்பது மூன்றாவது.

ஏன்? ஏன்?

1. தேசியக் கல்வி நிறுவனங்கள் தவிர்த்த - தொடக் கக் கல்வி, நடுநிலைக்கல்வி, உயர்நிலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, எல்லாத் தொழிற் கல்வி நிறுவனங்கள் இவற்றைத் தொடங்குதல், நடத்து தல், பாடத் திட்டங்களை வகுத்தல், தேர்வுகள் நடத்துதல்; அலுவலர்களையும் ஆசிரியர்களை யும் அமர்த்துதல் உட்பட்ட கல்வி தொடர்பான முழு அதிகாரம் 1937 முதல் 2.1.1977 வரையில், மாகாண அரசுகள் (அ) மாநில அரசுகளின் அதிகாரங்கள் பட்டியலில் (Provincial List or State List) இருந்தது. 3.1.1977 முதல் இவ்வதிகாரங்கள் மாநில அரசு அதிகாரங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு, பொது அதிகாரங்கள் பட்டியலில் (Concurrent List) சேர்க்கப்பட்டுவிட்டன.

**அதனால் கல்வியைக் குறித்து எதுபற்றியும் முடிவெடுக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு மாற்றப்பட்டுவிட்டது.**

இதன் விளைவு என்ன?

(அ) பாடத்திட்டங்களைத் தீட்டும் அதிகாரம் முற்றிலு மாக மய்ய அரசுக்குக்கீழ் வந்துவிட்டது.

(ஆ) 6ஆம் வகுப்பிற்குமேல் உயர்கல்வி, உயர் தொழிற் கல்வி வரையில் பெரிதும் ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடிக்கிறது.

இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர் கள் உட்பட, எட்டாம் அட்டவணையில் சேர்க்கப்பட் டுள்ள மற்ற 21 மொழிக்காரர்களும், எட்டாம் அட்ட வணையில் சேர்க்கப்படாத நூற்றுக்கணக்கான மொழிக் காரர்களும்-இந்தியர் எல்லோருக்கும் அயல்மொழி யான ஆங்கில மொழிவழியில் படிக்க நேர்ந்துவிட்டது. விடுதலை பெற்ற ஒரு நாட்டில் அவரவர் தாய்மொழி வழியில் மட்டுமே எல்லா நிலைக் கல்வியும் தரப்பட வேண்டும் என்கிற தாய்மொழி உரிமை பறிக்கப்பட்டு விட்டது.

**அதனால் ஒவ்வொரு இந்தியனின் தாய்மொழி யின் வளர்ச்சியும் தடுக்கப்பட்டுவிட்டது.**

**எனவே கல்வி பற்றிய முழு அதிகாரமும் - தேசியச் சிறப்புக் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட முழு அதிகாரமும் மாநில அரசின் அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.**

**ஒருகணம் எல்லோரும் எண்ணுங்கள். இந்திய அளவில் செயல்படு களம் அமைத்துப் போராடி னால் ஒழிய - இந்த அதிகார மாற்றம் வேறு எப்படி, எப்போது மாநிலங்களுக்கு வந்துசேரும்?**

2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 17ஆம் பகுதி யிலுள்ள விதி 343(1)இல் கூறப்பட்டுள்ளபடி, "இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியாக (அ) ஆட்சி மொழியாக, தேவநாகரி எழுத்து வடி விலுள்ள இந்தி இருக்க வேண்டும் - The Official language of the Union shall be Hindi in Devanagari Script".

343 முதல் 349 முடிய உள்ள விதிகள் இந்திய ஒன்றியத்தின் பல துறைகளிலும் அலுவல் மொழி இந்தி தான் என்றே பேசுகின்றன.

இந்திய ஒன்றியத்தின் ஆட்சிமொழியாக இந்தி வரித்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முதலில் பேசியவர், காந்தியார். அதை 'இந்தியா' ஏட்டில் ஆதரித்து எழுதியவர் தேசியக் கவிஞர் பாரதியார்.

இந்திய தேசியக் காங்கிரசின் உயர்மட்டக் குழு விலும், ஒரு வாக்கு வேறுபாட்டில், இந்திய ஒன்றியத் தின் ஆட்சிமொழியாக இந்தி இருக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்திய அரசமைப்பு அவையில், இந்திய ஒன்றியத் தின் ஆட்சிமொழியாக இந்தி இருக்க வேண்டும் என்கிற முடிவு 14.9.1949இல் எடுக்கப்பட்டது.

**இவ்வாறு முடிவு செய்யப்பட எல்லோராலும் சொல்லப்பட்ட ஒரே காரணம், 'இந்தி அதிகம் பேரால் பேசப்படும் மொழி' - இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களே இந்தியாவில் அதிகம் பேர் என்பதுதான்.**

இந்த கூற்று, மற்ற மொழிகளைத் தாய்மொழிகளைக் கொண்டவர்களை விட - அம்மொழிகளைப் பேசுகிறவர்களைவிட அதிகம் பேரால் இந்தி பேசப்படுகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டது.

மேலும் அரசமைப்புச் சட்டத்தின் எட்டாம் அட்டவணையில், அரசமைப்பு விதிகள் 344(1) மற்றும் 351-இன்படி,

மொழிகள் - Languages என்று மட்டும் குறிப்பிட்டுள்ள இந்தி உட்பட்ட 22 மொழிகள் எதற்காக - எந்தத் தகுதியைக் குறிப்பதற்காக வெறும் 'மொழிகள்' என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

பிராந்திய மொழிகள்
தாய்மொழிகள்
பேச்சுவழக்கில் உள்ள மொழிகள்

என்கிறவற்றில் எந்தத் தகுதியைக் கொண்டு இப்படிப் பட்டியலிடப்பட்டுள்ளது?

I. இந்த மூன்றில் எந்த வகையை, 'மொழிகள்' என்கிற தலைப்பு குறித்தாலும், இங்கு பட்டியலிடப்பட்ட 22 மொழிகள் மட்டுமே - பிராந்திய மொழிகளா? தாய்மொழிகளா? பேச்சுவழக்கில் உள்ள மொழிகளா? என்பதும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் எண்ணிக்கையைவிட, மற்ற 21 மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களின் கூட்டு எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமா, குறைவா என்பதும் தெரியவேண்டும்.

II. பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான தகுதி (அ) தாய்மொழி, (ஆ) பிராந்திய மொழி, (இ) பேச்சு வழக்கில் உள்ள மொழி என்றால் - இந்த 22 மொழிகளை அல்லாமல் தாய்மொழிகள் எத்தனை? அல்லது பிராந்திய மொழிகள் எத்தனை? பேச்சு வழக்கில் உள்ள மொழிகள் எத்தனை? இந்த 22 மொழிகளை அன்னியில் இப்பட்டியலில் சேர்க்கப் படாத - மீதம் உள்ள மொழிகள் எத்தனை?

22 மொழிகளுடன் பட்டியலில் சேர்க்கப்படாத மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கையின் கூட்டுத் தொகை மட்டும் எத்தனை? இவற்றையும் நாம் காணவேண்டும்.

அரசமைப்புச் சட்ட அவையில், XIV-A - LANGUAGE என்னும் பகுதியின்கீழ் விதி 301A (1) என உள்ளது - ஒன்றிய ஆட்சிமொழி பற்றிய விதி இந்த வரிசை எண், இறுதியில் 343-(1) என மாற்றப்பட்டது.

இதுபற்றிய விவாதம் 12.9.1949, 13.9.1949, 14.9.1949 ஆகிய மூன்று நாள்கள் அரசமைப்புச் சட்ட அவையில் நடைபெற்றது.

விவாதங்களில் பெரும்பங்கு கொண்ட உறுப்பினர்கள் என். கோபாலசாமி அய்யங்கார், புருசோத்தம தாஸ்தாண்டன், தமிழக உறுப்பினர்கள் முகமது இஸ்மாயில் சாகிப், கோவை டி.ஏ. இராமலிங்கம் செடியார் போன்றவர்களாவர்.

இறுதியாக, ''இந்திய ஒன்றியத்தின் ஆட்சிமொழி (அ) அலுவல் மொழி தேவநாகரி வடிவத்திலான இந்தி ஆகும். எண்கள் ஒன்றியத்தின் அலுவல்களுக்கு இந்தியாவில் இப்போது நடப்பில் உள்ளதும், அனைத்து நாடுகளின் பயன்பாட்டில் உள்ளதும் ஆன வடிவில் இருக்கும்'' என்ற விதி, 14.9.1949இல் நிறைவேற்றப் பட்டது.

மற்றெல்லா விதிகளும் அன்றே நிறைவேற்றப்பட்டன.

இதன்படி, இச்சட்டம் நடப்புக்கு வரும் 26.1.1950 முதல் 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் ஒன்றிய அலுவல் மொழியாக இருக்கும்; அதற்குள் இந்தி அலுவல் மொழியாகப் பயன்படுவதற்குத் தகுதியான மொழியாக வளர்க்கப்படும் என்பதும் முடிவானது.

இனி, இவ்வெளிச்சத்தில் இப்போது உள்ள எட்டாவது அட்டவணையின்கீழ் பட்டியலிடப்பட்ட 22 மொழிகள் - அந்த ஒவ்வொரு மொழியையும் - தாய்மொழியாகக் கொண்டிருப்போர்-மற்றும் பேசுவோர் எண்ணிக்கை, 1961 முதல் ஒவ்வொரு பத்தாண்டிலும் எடுக்கப்படும் மக்கள் தொகைக் கணக்கில் வெளியிடப்பட்டுள்ளது.

'2011இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கு வெளியான அரசு வெளியீடு வேண்டும்' என்று கோரி, 29.7.2016 அன்று, புதுச்சேரி French Institute and Library என்கிற நூலகத்தாரிடம் கோரினேன். அவர்கள் 2001 கணக்கை மட்டுமே கொடுத்தனர்.

**சென்னையிலுள்ள கன்னிமரா நூலகம், சென்னை பெசன்ட் நகரில் உள்ள இந்திய மக்கள் தொகைக் கணக்கு இயக்ககம் இவற்றில் 16.8.2016இல் தேடினேன். 2011 மக்கள் தொகைக் கணக்குப் புள்ளிவிவரங்கள் இன்றுவரை இந்திய அரசினரால் வெளியிடப்படவில்லை என்பதை உறுதியாக அவர்கள் தெரிவித்தனர்.**

2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ''மொழிகள்'' என்கிற தொகுதியில் :

### அறிக்கை I : Statement - I
### பகுதி - அ : Part-A

பேச்சுவழக்கில் உள்ள மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கையும் தாய்மொழிகளும் : 2001 Abstract of Speakers Strength and Mother Tongues - 2001 என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

| | மொழியின் பெயரும் அம்மொழியுடன் இணைக்கப்பட்ட தாய்மொழிகளும் | | | அவரவர் தங்கள் தாய்மொழி என்றும் தாங்கள் பேசும் மொழி என்றும் பதிவு செய்தோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | ASSAMESE | அசாமி | | **1,31,68,484** |
| | | 1. | அசாமி | 1,27,78,738 |
| | | 2. | தாய்மொழிகள் | 3,89,749 |
| 2. | BENGALI | பெங்காலி | | **8,33,69,769** |
| | | தாய்மொழிகள் | | |
| | | 1. | பெங்காலி | 8,24,62,437 |
| | | 2. | சக்மா | 1,76,458 |
| | | 3. | ஹஜோங் | 63,188 |
| | | 4. | ராஜ்பாங்சி | 82,570 |
| | | மற்ற தாய்மொழிகள் | | 5,85,116 |
| 3. | BODO | போடோ/போரோ - | | **13,50,478** |
| | | தாய்மொழிகள் | | |
| | | 1. | போடோ | 13,30,775 |
| | | மற்ற தாய்மொழிகள் | | 19,703 |
| 4. | DOGRI | டோக்ரி | | **22,82,589** |
| | | தாய்மொழிகள் | | |
| | | 1. | டோக்ரி | 22,82,547 |
| | | 2. | மற்ற தாய்மொழிகள் | 42 |
| 5. | GUJARATI | குசராத்தி | | **4,60,91,617** |
| | | தாய்மொழிகள் | | |
| | | 1. | குசராத்தி | 4,57,15,654 |
| | | 2. | குஜ்ராவ் | 43,414 |
| | | 3. | சௌராஷ்ட்ரா | 1,85,420 |
| | | மற்ற தாய்மொழிகள் | | 1,48,129 |
| 6. | HINDI | இந்தி | | **42,20,48,462** |
| | | தாய்மொழிகள் | | |
| | | 1. | அவதி | 25,29,308 |
| | | 2. | பகேல் | 26,65,011 |
| | | 3. | பக்ரி ராஜஸ்தானி | 14,34,123 |
| | | 4. | பஞ்சாரி | 12,59,821 |
| | | 5. | பத்ராவஹி | 66,918 |
| | | 6. | பஹார்மௌரி | 66,246 |
| | | 7. | போஜ்புரி | 3,30,99,497 |
| | | 8. | பிரஜ்பாஷா | 5,74,245 |
| | | 9. | பண்டேலி | 30,72,147 |
| | | 10. | சம்பீலி | 1,26,589 |
| | | 11. | சத்திஸ்கரி | 1,32,60,186 |
| | | 12. | சௌராஹி | 61,199 |
| | | 13. | துந்தாரி | 18,71,130 |
| | | 14. | கர்வாலி | 22,67,314 |

| | | | |
|---|---|---|---|
| | | 15. கோஜ்ரி | 7,62,332 |
| | | 16. ஹரௌட்டி | 24,62,867 |
| | | 17. ஹர்யான்வி | 79,97,192 |
| | | 18. **இந்தி** | **25,79,19,635** |
| | | 19. ஜன்சாரி | 1,14,733 |
| | | 20. கங்ரி | 11,22,843 |
| | | 21. கைராரி | 11,937 |
| | | 22. கரிபோலி | 47,730 |
| | | 23. கொர்த்தா / கோட்டா | 47,25,927 |
| | | 24. குல்வி | 1,70,770 |
| | | 25. குமௌனி | 20,03,783 |
| | | 26. குர்மாலிதார் | 4,25,927 |
| | | 27. லபானி | 22,162 |
| | | 28. லமானி / லம்பாடி | 27,07,562 |
| | | 29. லரியா | 67,697 |
| | | 30. லோதி | 1,39,321 |
| | | 31. மகதி | 1,39,78,565 |
| | | 32. மால்வி | 55,65,167 |
| | | 33. மண்டேலி | 6,11,930 |
| | | 34. மார்வாரி | 79,36,183 |
| | | 35. மேவாரி | 50,91,697 |
| | | 36. மேவாத்தி | 6,45,291 |
| | | 37. நாக்பூரியா | 12,42,586 |
| | | 38. நிமாடி | 21,48,146 |
| | | 39. பகரி | 28,32,825 |
| | | 40. பஞ்ச்பர்கனியா | 1,93,769 |
| | | 41. பங்வலி | 16,285 |
| | | 42. பவரி / பொவரி | 4,25,745 |
| | | 43. ராஜஸ்தானி | 1,83,55,613 |
| | | 44. சடன் / சட்ரி | 20,44,776 |
| | | 45. சிமௌரி | 31,144 |
| | | 46. சோண்ட்வாரி | 59,221 |
| | | 47. சுகலி | 1,60,736 |
| | | 48. சுர்குஜியா | 14,58,533 |
| | | 49. சுர்ஜபுரி | 12,17,019 |
| | | மற்ற தாய்மொழிகள் | 1,47,77,266 |
| 7. | கன்னடம் | | **3,79,24,011** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. படகா | 1,34,514 |
| | | 2. கன்னடம் | 3,77,42,232 |
| | | 3. குருபா / குரும்பா | 14,613 |
| | | மற்ற தாய்மொழிகள் | 32,652 |
| 8. | காஷ்மீரி | தாய்மொழிகள் | **55,27,698** |
| | | 1. காஷ்மீரி | 53,62,349 |
| | | 2. கிஷ்வாரி | 33,429 |
| | | 3. சிராஜி | 87,179 |
| | | மற்ற தாய்மொழிகள் | 44,741 |

| | | | |
|---|---|---|---|
| 9. | கொங்கணி | | **24,89,015** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. கொங்கணி | 24,20,140 |
| | | 2. குடுபி / குடும்பி | 10,192 |
| | | 3. மால்வானி | 46,851 |
| | | மற்ற தாய்மொழிகள் | 11,832 |
| 10. | மைதிலி | | **1,21,79,122** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. மைதிலி | 1,21,78,673 |
| | | மற்ற தாய்மொழிகள் | 449 |
| 11. | மலையாளம் | | **3,30,66,392** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. மலையாளம் | 3,30,15,420 |
| | | 2. எரவா | 19,643 |
| | | மற்ற தாய்மொழிகள் | 31,329 |
| 12. | மணிபுரி | | **14,66,705** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. மணிபுரி | 14,66,497 |
| | | மற்ற தாய்மொழிகள் | 208 |
| 13. | மராத்தி | | **7,19,36,894** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. மராத்தி | 7,17,01,478 |
| | | மற்ற தாய்மொழிகள் | 2,35,416 |
| 14. | நேபாளி | | **28,71,749** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. நேபாளி | 28,67,922 |
| | | மற்ற தாய்மொழிகள் | 3,827 |
| 15. | ஒரியா | | **3,30,17,446** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. பத்ரி | 2,16,940 |
| | | 2. ஒரியா | 3,21,10,482 |
| | | 3. புரோஜா | 92,774 |
| | | 4. ரேல்லி | 21,965 |
| | | 5. சம்பல்புரி | 5,18,803 |
| | | மற்ற தாய்மொழிகள் | 56,482 |
| 16. | பஞ்சாபி | | **2,91,02,477** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. பக்ரி | 6,46,921 |
| | | 2. பிலாஸ்புரி | 1,79,511 |
| | | 3. பஞ்சாபி | 2,81,52,794 |
| | | மற்ற தாய்மொழிகள் | 1,23,251 |
| 17. | சமற்கிருதம் | | **14,135** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. சமற்கிருதம் | 14,099 |
| | | மற்ற தாய்மொழிகள் | 36 |
| 18. | சந்தாலி | | **64,69,600** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. கர்மாலி | 3,68,853 |
| | | 2. சந்தாலி | 59,43,679 |

| | | | |
|---|---|---|---|
| | | மற்ற தாய்மொழிகள் | 1,57,068 |
| 19. | சிந்தி | | **25,35,485** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. காச்சி | 8,23,058 |
| | | 2. சிந்தி | 16,94,061 |
| | | மற்ற தாய்மொழிகள் | 18,366 |
| 20. | தமிழ் | | **6,07,93,814** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. கைக்கடி | 23,694 |
| | | 2. தமிழ் | 6,06,55,813 |
| | | 3. எருகலா | 69,533 |
| | | மற்ற தாய்மொழிகள் | 44,774 |
| 21. | தெலுங்கு | | **7,40,02,856** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. தெலுங்கு | 7,38,17,148 |
| | | 2. வடரி | 1,71,726 |
| | | மற்ற தாய்மொழிகள் | 13,983 |
| 22. | உருது | | **5,15,36,111** |
| | | தாய்மொழிகள் | |
| | | 1. உருது | **5,15,33,954** |
| | | மற்ற தாய்மொழிகள் | **2,157** |

# அயராமல் படியுங்களேன்

1. இந்திய அரசு 2001இல் எடுத்த மக்கள் தொகைக் கணக்கில் - அறிக்கை 5இன்படி, மொத்த மக்கள் தொகை 102,86,10,328.

2. **இந்தியாவில் 2001இல் எடுத்த கணக்கின்படி, சமற்கிருதத்தைத் தாய்மொழியாகக் கொண்டோரும், சமற்கிருதம் பேசுவோரும் - மொத்தம் உள்ள 102.86 கோடிப் பேரில், வெறும் 14,135 பேர் மட்டுமே.**

   சமற்கிருதம், பேச்சுவழக்கில் அருகிப் போனது மெய், மெய் அல்லவா? இந்த சமற்கிருதத்தை, நாம் எதற்காகப் படிக்க வேண்டும்? ஏன் படிக்க வேண்டும்?

   (அ) பார்ப்பனியச் சடங்குகளை நம் வீடுதோறும் செய்வதற்காகவா?

   (ஆ) வாழும் போதும், செத்த பிறகும் பார்ப்பனர் - தமிழன் வீட்டில் புரோகிதத் தொழிலைச் செய்வதற்காகவா?

   (இ) தமிழ் புரியாத-கோவில் குழவிக் கல்லுக்குப் பார்ப்பனர் மட்டுமே அர்ச்சகர்களாக - 2016க்குப் பிறகும் செயல்படவா?

**2001 மக்கள் தொகைக்கணக்குப்படி, உள்ள 102.86 கோடிப் பேரில், ‘இந்தி’ என்கிற மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 25,79,19,635 பேர்களே! இந்தி அதிகம் பேரால் பேசப்படும் மொழி என்பதை நிலைநாட்டுவதற்காக, “இந்தி” என்கிற தலைப்பில் குறிப்பிடப்பட்ட 49 வெவ்வேறு தாய்மொழிகளையும், பெயர் குறிப்பிடப்படாத மற்ற தாய்மொழிகளையும் ஆக 50 மொழிகளுக்குமேல் சேர்த்து, 42,20,48,642 பேர் இந்தி பேசும் மக்கள் என்பது பொய் - வடிகட்டிய பொய் அல்லவா?**

பட்டியலில் சேர்க்கப்பட்ட 22 மொழிகளில் இந்தியைத் தவிர்த்த மற்ற 21 மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும்;

**தமிழகத் தமிழறிஞர்களும் உலகத் தமிழறிஞர்களும், மக்கள் நாயகக் காவலர்களும் அவரவர் சார்ந்த கட்சி - சாதி - மதம் பார்க்காமல்,**

1. **சமற்கிருதம் கல்வியில் இடம்பெறப் போவதைத் தடுத்து நிறுத்தவும்;**

2. **இந்தி மட்டுமே இந்திய அரசின் அலுவல் மொழி என்பதைத் தடுத்து நிறுத்துவதுடன், பட்டியலிடப்பட்ட 22 மொழி களையும், மற்றும் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய மொழிகளையும் - இந்திய அரசு அலுவல்மொழிகளாக ஆக்கிடவும் ஒன்றிணைந்து போராடத் திட்டமிடுங்கள் என, அன்புடன் வேண்டுகிறேன்.**

**வே. ஆனைமுத்து**

# தேசிய இனங்களின் மொழிகளை அழிக்கும், மாநில உரிமைகளைப் பறிக்கும் 'தேசியக் கல்விக் கொள்கையை'த் தீயிட்டுப் பொசுக்குவோம்

- க. முகிலன்

முதலாளியம் தன் தேவைக்காகப் பொதுக்கல்வி முறையைக் கொண்டுவந்தது. இயந்திரங்களை இயக்கு வதற்குத் தொழிலாளர்களுக்குக் கல்வியைத் தரவேண்டிய தாயிற்று. அதற்கு முன்வரை உலகம் முழுவதும் கல்வி என்பது சிறு எண்ணிக்கையினராக இருந்த மேட்டுக்குடியினருக்கு மட்டுமே உரியதாக இருந்தது.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியில் 1835இல் மெக்காலே கல்வித் திட்டம் பொதுக்கல்விக்கு வித்திட்டது. 'எண்ணத்திலும் அறிவாற்றலிலும் கலாச்சாரத்திலும் ஆங்கிலேயராகவும், ஆனால் இரத்தத்திலும் நிறத்தி லும் இந்தியராகவும் இருப்போரை அரசு வேலைகளில் பணிசெய்வதற்கான ஆட்களாக உருவாக்குவதே' மெக் காலே கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். அனைவருக் கும் கல்வி அளிக்க வேண்டும் என்பது ஆங்கிலேய அரசின் நோக்கம் அன்று.

1947இல் இந்தியா சுதந்தரம் பெற்ற போது, இந்தியாவில் 12 விழுக்காட்டினர் மட்டுமே எழுத்தறிவு பெற்றிருந்தனர். இவர்களில் 90 விழுக்காட்டினர் மேல் சாதியினர். சுதந்தர இந்தியாவுக்கான அரசியலமைப் புச் சட்டத்தை இயற்றிய போது அனைவருக்கும் கல்வி என்பது அடிப்படை உரிமை என்று விதி செய்யவில்லை. இந்துமத சாத்திரங்களின் பெயரால் காலங்காலமாக பெரும்பான்மையினராக உள்ள கீழ்ச்சாதி மக்களுக்குக் கல்வி உரிமையை மறுத்து வந்தமை தொடரவேண்டும் என நினைத்ததே இதற்குக் காரணமாகும்.

அரசமைப்புச் சட்டத்தில் "அரசு கொள்கைகள் வழிகாட்டும் நெறிகள்" பகுதியில் "இச்சட்டம் நடை முறைக்கு வந்தபின் பத்து ஆண்டுகளுக்குள் 14 அகவைக் குட்பட்டவர்களுக்குக் கட்டாய இலவயக் கல்வி தர அரசு முயலவேண்டும்" என்றுதான் எழுதப்பட்டது. நேரு தலை மையிலான நடுவண் அரசும், காங்கிரசுக் கட்சியின் கீழ் இருந்த மாநில அரசுகளும் இதைக்கூட நிறை வேற்றிட அக்கறை காட்டவில்லை.

அன்றைய சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை ஆட்சியில் இருந்த நீதிக்கட்சி ஆட்சியில் இந்தியாவில் பிற மாகாணங்களில் இல்லாத அளவில் பள்ளிகள் தொடங்கப்பட்டன. 1937இல் சென்னை மாகாணத் தலைமை அமைச்சராக இராசகோபாலாச்சாரி ஆட்சியில் அமர்ந்ததும், 2200 தொடக்கப் பள்ளிகளை மூடினார். மீண்டும் 1952இல் முதலமைச்சராக வந்த போது 6000 பள்ளிகளை மூடினார். மேலும் குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். பெரியார் ஈ.வெ. இராம சாமியும் மற்றவர்களும் இதைக் கடுமையாக எதிர்த் தனர். இராசாசி பதவி விலகினார்.

காமராசர் 1954 ஏப்பிரலில் முதலமைச்சர் ஆனார். காமராசர் ஆட்சியில் (1954-1963) ஏராளமான தொடக்



கப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் தொடங்கப் பட்டன. அப்போது எஸ்.எஸ்.எல்.சி. எனப்பட்ட உயர் நிலைப் பள்ளி வரை தமிழே பயிற்று மொழியாக இருந்தது. அதனால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் குறிப்பிடத்தக்க அளவில் கல்வியில் முன் னேறினர். கல்லூரிகளில் பட்டம் பெற்று அரசுப் பணி களில் அமர்ந்தனர். கேரளத்திலும் முற்போக்கு இயக் கங்கள், மன்னராட்சியின் கல்வி ஆதரவு நிலைப்பாடு காரணமாகக் கல்வி வளர்ச்சி விரைவாக நடந்தது. எனவே இந்தியாவில் கேரளமும் தமிழ்நாடும் தொடக் கக் கல்வி அளிப்பதில்-எழுத்தறிவு பெற்றவர் எண்ணிக் கையில் இன்றும் முதலிடத்தில் இருக்கின்றன.

நடுவண் அரசு 1964இல் பேராசிரியர் டி.எஸ். கோத்தாரி தலைமையில் கல்விக்குழுவை அமைத்தது. அதன் அறிக்கை 1968இல் அரசிடம் தரப்பட்டது. இக்குழுவின் முதன்மையான பரிந்துரைகளில் ஒன்று, நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் (GDP) 6 விழுக் காடு கல்விக்காக அரசு செலவிட வேண்டும் என்பதா கும். இன்று வரையில் இது 3.5 விழுக்காடு என்கிற அளவிலேயே இருக்கிறது. மேலும் கோத்தாரி குழு, 'கல்வி என்பது மாணவர்களின் ஒட்டுமொத்தத் திறனை யும் வளர்ப்பதாக இருக்க வேண்டும் என்று கூறியது. கோத்தாரி குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த அரசு முனையவில்லை.

அதன்பின் இந்திரா காந்தி தலைமை அமைச்சராக இருந்தபோது நெருக்கடி நிலை என்கிற பெயரால் நடத்திய காட்டாட்சிக் காலத்தில், 42ஆவது அரசமைப் புச் சட்டத்திருத்தத்தின் மூலம், மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வியை பொது அதி காரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. கல்வி சார்ந்த எல்லா முடிவுகளையும் எடுப்பதற்கு நடுவண் அரசுக்கு இதன் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுவிட்டது. நெருக்கடி நிலை ஆட்சிக்குப்பின் நடந்த தேர்தலில் - 1977இல் காங்கிரசுக் கட்சியும் இந்திராகாந்தியும் படுதோல்வி அடைந்தனர். அச்சூழலில் கல்வியை மீண்டும் மாநிலங்

களின் அதிகாரப்பட்டியலுக்குக் கொண்டு வருவதில் மாநில அரசுகள் தவறிவிட்டன. இதனால் மாநிலங் களின் உரிமைகள் பறிக்கப்பட்டிருப்பதுடன் மொழிவழி யில் அமைந்துள்ள மாநிலங்களின் தேசிய மொழி களை ஒடுக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. கல்வி தனி யார் மயமாகி, கல்வி வணிகக் கொள்ளையும், ஊழ லும் பெருகியதற்குக் காரணம் கல்வி தொடர்பான அதிகாரம் நடுவண் அரசிடம் இருப்பதே ஆகும்.

பொது அதிகாரப் பட்டியலில் கல்வி சேர்க்கப்பட்ட தால், இராசிவ் காந்தி தலைமை அமைச்சராக இருந்த போது 1986இல் நடுவண் அரசு புதிய கல்விக் கொள் கையை அறிவித்தது. இது ‘‘கரும்பலகைத் திட்டம்’’ என்று அப்போது அழைக்கப்பட்டது. இந்திய அளவில் கரும்பலகையும் இல்லாமல் எண்ணற்ற தொடக்கப் பள்ளிகள் அப்போது இயங்கின. இத்திட்டத்தின் அடிப் படையில்தான் நாட்டின் சில பகுதிகளில் நவோதயா மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் ஒன்ப தாம் வகுப்பிலிருந்து இந்தி அல்லது ஆங்கிலம் மட்டுமே பயிற்று மொழியாக இருக்கும். இப்போது இது ஆறாம் வகுப்பிலிருந்தே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

1986ஆம் ஆண்டின் புதிய கல்விக் கொள்கையில் 1992ஆம் ஆண்டு சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ‘‘சர்வ சிட்சா அபியான்’’ எனப்படும் அனைவருக்கும் கல்வி என்கிற திட்டம் அறிவிக்கப்பட்டது. தொடக்கக் கல்வி உரிமையை, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில் சேர்த்தால்தான், அனைவருக்கும் கல்வி என்கிற கொள்கையைச் செயல்படுத்த முடியும் என்று கல்வியாளர்களும், சமூகச் செயற்பாட்டாளர் களும் வலியுறுத்தினர்.

அதன் விளைவாக அரசமைப்புச் சட்டத்தின் 86ஆவது திருத்தமாக 6 முதல் 14 அகவைக்குட்பட்ட சிறுவர்களுக்குக் கட்டாய இலவயக் கல்வி உரிமை என்பது அரசமைப்புச் சட்டத்தின் விதி 21-A எனச் சேர்க் கப்பட்டது. மேலும் 2009இல் இதற்கென்று தனியாகச் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் சிறுவர்களுக்கு இக் கல்வி உரிமையை அளிக்கத் தவறுவதற்கு யார் பொறுப் பேற்பது என்பது குறித்து இச்சட்டத்தில் விளக்கப்பட வில்லை.

2014-2015ஆம் ஆண்டில் 5ஆம் வகுப்பு வரை உள்ள தொடக்கப் பள்ளியில், 8ஆம் வகுப்பு வரை உள்ள நடுநிலைப் பள்ளிகள் சேர்த்து 14 இலட்சம் பள்ளிகள் உள்ளன. இவற்றில் 19.77 கோடி மாணவர் கள் பயில்கின்றனர். மொத்தப் பள்ளிகளில் 11 இலட்சம் பள்ளிகள் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி கள். இப்பள்ளிகளில் 11.9 கோடி மாணவர்கள் உள்ளனர். கல்விக் கட்டணம் பெறும் தனியார் பள்ளிகள் 3 இலட்சம் உள்ளன; ஆனால் இவற்றில் 8.56 கோடி மாணவர் கள் படிக்கின்றனர். இந்தப் புள்ளிவிவரம் அரசுப் பள்ளி களில் மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதைப் புலப்படுத்துகிறது. தொடக்கக் கல்வியைத்



தருவது என்கிற கடமையிலிருந்து அரசுகள் வழுவி, தனியார் பள்ளிகளை ஊக்குவித்ததே இதற்குக் காரண மாகும்.

முதல் வகுப்பில் சேரும் மாணவர்களில் 83.7 விழுக்காட்டினர் மட்டுமே 5ஆம் வகுப்பில் படிக்கின்ற னர்; அதாவது 16.3 விழுக்காடு மாணவர்கள் இடையில் பள்ளிக்கு வராமல் நின்றுவிடுகின்றனர். எட்டாம் வகுப் பில் 67.4 விழுக்காடு மாணவர்கள் மட்டும் படிக்கின் றனர். அதாவது முதல் வகுப்பில் சேர்ந்த மாணவர் களில் 32.6 விழுக்காட்டினர் எட்டாம் வகுப்பை முடிப் பதற்கு முன்பே பள்ளியை விட்டு நின்றுவிடுகின்றனர். முதல் வகுப்பில் சேரும் 10 மாணவர்களில் 4 பேர் எட்டாம் வகுப்பை முடிக்கும் முன்பே படிப்பைத் தொட ராமல் விட்டுவிடுகின்றனர். எட்டாம் வகுப்பு வரை கூட பள்ளியில் பயில இயலாமல் தங்கிவிடும் மாணவர்கள் கீழ்ச்சாதிகளின் உழைக்கும் மக்களின் பிள்ளைகளாகவே இருக்கின்றனர். இதைப்பற்றி 2016இல் தேசியக் கல்வி அறிக்கை வரைவில் எந்த இடத்திலும் குறிப்பிடப்பட வில்லை.

தில்லியில் உள்ள ‘பிரதம’ எனப்படும் தொண்டு நிறுவனத்தின் கல்வியின் தரம் குறித்த 2014ஆம் ஆண்டிற்கான ஆய்வறிக்கையில் (ASER) இரண்டாம் வகுப்பு மாணவர்களின் மொழிப் பாடப் பகுதியை அய்ந்தாம் வகுப்பு மாணவர்களில் பாதிப்பேர்கள்கூட இயல்பாகப் படிக்க முடியவில்லை; அதேபோல் இரண் டாம் வகுப்புக்குரிய கணிதத்தில் எளிய கூட்டல், கழித் தல் கணக்குகளைச் செய்ய முடியவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இதே கருத்தை நடுவண் அரசின்கீழ் இயங்கும் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசியக் குழுவும் (NCERT) தெரிவித்துள்ளது.

இந்தியாவில் உள்ள 15 இலட்சம் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் 26 கோடி மாணவர்கள் படிக்கின்றனர். இப்பள்ளிகளில் 80 இலட்சம் ஆசிரியர்கள் உள்ளனர். **முதல் வகுப்பில் பள்ளியில் சேர்பவர்களில் 23.6 விழுக்காட்டினர் மட்டுமே உயர்கல்வியில் சேர்கின்றனர். அதேசமயம் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, ஏழு**

**அகவைக்கு மேற்பட்டவர்களில் 28.26 கோடி ஆண்களும் பெண்களும் எழுத்தறிவற்றவர் களாக இருக்கின்றனர். எழுத்தறிவற்றவர் எண் ணிக்கை உலகிலேயே இந்தியாவில்தான் அதிகம்.**

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் (UGC) 2014-15ஆம் ஆண்டின் அறிக்கையின்படி, இந்தியா வில் 712 பல்கலைக்கழகங்கள் உள்ளன. 40,760 கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 3.33 கோடி மாண வர்கள் படிக்கின்றனர். 14 இலட்சம் ஆசிரியர்கள் இருக் கின்றனர். ஆனால் உலகில் தரவரிசையில் முதலில் உள்ள 200 பல்கலைக்கழகங்களில் இந்தியாவில் உள்ள எந்தவொரு பல்கலைக்கழகமும் இடம்பெற வில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் 51 விழுக்காடும், மேனிலைப் பள்ளிகளில் 58 விழுக்காடும் கல்லூரி களில் 60 விழுக்காடும் தனியாரிடம் இருந்தும் தரம் இல்லையே ஏன்? ஏனெனில் இவை கல்வி வணிகக் கொள்ளை நிறுவனங்களாகவே செயல்படுகின்றன. மேலும் தாய் மொழி வழியில் கற்பிக்காமல் ஆங்கில வழியில் கற்பிக்கிறார்கள்; போதிய தகுதி பெறாத ஆசிரி யர்களை வைத்துக் கற்பிக்கிறார்கள்.

எனவே தொடக்கக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரையில் உள்ள குறைபாடுகளைக் களைந்து, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக என்ற பெயரில் மோடி தலைமையிலான நடுவண் அரசு 2016ஆம் ஆண்டிற்கான தேசியக் கல்விக் கொள்கையை முன் மொழிந்துள்ளது.

இதற்கான முதல் தொடக்கமாக 2015 சனவரி 26 அன்று மோடி அரசு, கல்வியில் செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்த கருத்தை "mygov" எனும் வலைத் தளத்தில் தெரிவிக்குமாறு அறிக்கை வெளியிட்டது. இதற்காக 33 உள்தலைப்புகளையும் அறிவித்திருந்தது. இவ்வாறு பெறப்பட்ட கருத்துகளையும் கணக்கில் கொண்டு தேசிய கல்விக் கொள்கையை வகுப்பதற்காக நடுவண் அரசின் முன்னாள் செயலாளர் டி.எஸ்.ஆர். சுப்பிர மணியம் தலைமையில் அய்வர் கொண்ட குழுவை நடுவண் அரசு 2015 அக்டோபர் 31 அன்று அமைத் தது. இவர்களில் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளரான ஜெ.எஸ். ராஜ்புட் என்பவர் ஒருவரே கல்வித் துறையைச் சார்ந்த வர். மற்ற நால்வரும் அரசு உயர் அதிகாரிகளாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். எனவே முதலில் கல்வியை உயர் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத் திலிருந்து மீட்டெடுத்து கல்வியாளர்களின் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும்.

சுப்பிரமணியன் தலைமையிலான குழுவின் அறிக்கை 2016 மே 27 அன்று நடுவண் அரசிடம் அளிக் கப்பட்டது. ஆனால் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த சுமிருதி இராணி இதை வெளி யிடுவதைத் தவிர்த்து வந்தார். குழுவின் தலைவர் சுப்பிரமணியன், "அரசு வெளியிடாவிடில் அந்த அறிக் கையைத் தானே வெளியிடப் போவதாக" அச்சுறுத்தினார்.

அந்நிலையில் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் "தேசியக் கல்விக் கொள்கை 2016 வரைவிற்கான சில உள்ளீடுகள்" (Some Inputs for Draft National Educational Policy 2016) என்ற அறிக்கையை வெளியிட்டது.

இந்த அறிக்கையின் முன்னுரையிலேயே இந்துத் துவக் கோட்பாட்டை நிலைநாட்டுவது இதன் முதன்மை யான நோக்கம் என்பது புலனாகிறது. "பண்டைய இந்தியாவில் உருவான கல்வி முறை என்பது வேதக் கல்வியே ஆகும். இவ்வுலக வாழ்விற்கான அல்லது அதற்கு அப்பால் உள்ளது பற்றிய அறிவைப் பெறுவது மட்டுமே நோக்கமன்று; ஒருவன் தன்னை முழுமை யாக அறிதலே இதன் விழுமிய நோக்கமாக இருந்தது. குருகுலக் கல்வியானது குருவுக்கும் சீடனுக்கும் இடை யில் பிணைப்பை உண்டாக்கியது. ஆசிரியரை மய்ய மாகக் கொண்டதாகக் கல்வி இருந்தது. மாணவர்கள் கண்டிப்பான ஒழுக்க விதிமுறைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்" என்று குருகுல கல்வியைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

குருகுலக் கல்வியை இந்த அறிக்கை இப்போது சுட்டிக்காட்டுவதன் நோக்கம், தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையில் ரோகித் வெமுலா, கன்னையா குமார் போன்று எவரும் எதிர்த்துப் பேசாமல் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதற்காகவே ஆகும். வேதக் கல்வி முற்றிலும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது என்பதையும், சாத்திரங்களில் சூத்திரன் வேதம் ஓதுவதைக் காதால் கேட்டால் அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்; வேதத்தை ஓதிட முயன்றால் அவன் நாக்கை அறுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதையும் இந்த அறிக்கையில் கூறாமல் ஏன் மறைத்தார்கள்?

சிந்துவெளி நாகரிகத்தை ஆரிய நாகரிகமென்று பார்ப்பன அறிவாளிகள் நிறுவிட முயல்கின்றனர். அது போல், கி.மு.700இல் தட்சசீலா (Takshila)வில் உலகின் முதலாவது பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது என்கிற அப்பட்டமான பொய் இந்த அறிக்கையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அதேபோன்று நாளந்தாப் பல்கலைக் கழகம் கி.மு.4ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட தாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கு எத்தகைய வரலாற்றுச் சான்றும் இல்லை. ஆனால் அப்பல்கலை கி.பி.4ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டதற்கான தொல்லியல் சான்றுகள் உள்ளன. நாளந்தாப் பல்கலைக்கழகம் என்றால் எல்லோருக்கும் உடனே நினைவிற்கு வருவது அது பவுத்த தத்துவக் கல்விக்கான தலைமை இடமாக ஆசியாவிற்குத் திகழ்ந்தது என்பதாகும். ஆனால் தேசிய கல்விக் கொள்கை அறிக்கையிலோ, நாளந்தா வில் கற்பிக்கப்பட்ட பாடங்களின் பட்டியலில் இறுதியில் பவுத்த தத்துவம் இடம்பெற்றுள்ளது.

காந்தியைக் கொன்ற கோட்சே ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் தீவிரமாகச் செயல்பட்டவர். மோடி ஆட்சி

ஆர்.எஸ்.எஸ். அமைப்பை ஆணிவேராகக் கொண்டிருக்கிறது. பாரத இந்துத்துவப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதற்காக இந்த அறிக்கையில் காந்தியின் மேற்கோளைச் சுட்டியுள்ளது. "நிலத்தை மதிப்பிடுவது போல் - பங்குச் சந்தையில் பங்குகளை மதிப்பிடுவது போல் கல்வியை நாம் மதிப்பீடு செய்கிறோம். அதிக வருவாய் ஈட்டுவதற்கான வழியாகக் கல்வியை மாணவர்களுக்கு அளிக்க விரும்புகின்றோம். ஆனால் கற்பவனின் ஒழுக்கத்தை மேம்படுத்துவது பற்றி நாம் சிறிதும் சிந்திப்பதே இல்லை" - என்பதே காந்தியின் மேற்கோளாகும். ஆனால் தேசியக் கல்வித் திட்ட வரைவு அறிக்கையின் தொடக்கம் முதல் முடிவு வரையிலும் காந்தியின் கூற்றுக்கு மாறாகக் கடந்த இருபது, முப்பது ஆண்டுகளில் உருவாகி வளர்ந்துள்ள உலகமயப் பொருளாதார-சமூகச் சூழலின் தேவைக்கு ஏற்ப இந்திய இளைஞர்களின் கல்வி அறிவை - தொழில் திறனை, வாழ்க்கைக்கான பொருளை ஈட்டுவதே முதன்மை எனும் சிந்தனைப்போக்கை வளர்த்தெடுக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் பண்டைய கலாச்சாரங்களைக் கட்டிக்காப்பது என்கிற பெயரில் இந்துத்துவ ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவே-"இந்திய ஞான சூரியனின் ஒளி இந்தியா முழுவதும் பரவி, பின் ஆசியாவிலும் உலகம் முழுவதும் பரவும்" என்கிற அரவிந்தரின் மேற்கோளுடன் முன்னுரை முடிகிறது. இனி எஞ்சியுள்ள 21ஆம் நூற்றாண்டு என்பது இந்தியாவுக்கு உரியதாக இருக்கும் என்கிற பொய்யான பெருமிதத்தை நம்முன் நிறுத்துகிறது.

இந்த அறிக்கையின் நான்காவது உட்பிரிவில் (Chapter - 4) தான் சிக்கல்களுக்கான தீர்வுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

4.1 எனும் பிரிவு பள்ளி முன்பருவக் கல்வி (Pre-school Education) பற்றிப் பேசுகிறது. தொடர்ந்து பள்ளிக்குச் செல்வதற்கான மனநிலையை - ஊக்கத்தைக் குழந்தைகள் 4, 5 அகவையினராக இருக்கும் போதே உருவாக்கிட வேண்டும்; அப்போதுதான் முதல் வகுப்பில் சேரும் குழந்தைகளிடம் 5ஆம் வகுப்பில் 'இடைநிற்றல்' ஏற்படாது என்று அறிக்கை கூறுகிறது. பள்ளி முன்பருவக் கல்விக்காக 'அங்கன்வாடிகள்' செயல்படுகின்றன. தமிழ்நாடு, கேரளா போன்ற சில மாநிலங்களில் மட்டுமே இவை நல்ல முறையில் செயல்படுகின்றன. இவற்றை இன்னும் செம்மையாகச் செயல்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. முன்பருவக் கல்வி உரிமையை உறுதி செய்திட 2009ஆம் ஆண்டின் கல்வி உரிமைச் சட்டத்தில் 6 அகவை முதல் என்று இருப்பதை 3 அகவை முதல் என்று மாற்றம் செய்ய வேண்டும்.

இந்த அறிக்கையில் முதல் வகுப்பில் 5 அகவை எய்திய எல்லாக் குழந்தைகளும் பள்ளியில் சேர வேண்டும்; அக்குழந்தைகள் பல்கலைக்கழகக் கல்வி வரை தொடர்ந்து படித்திட வேண்டும் என்கிற விருப்பம் மட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின்




இடைநிற்றலுக்கான சமூக-சாதிய, பொருளாதாரக் காரணிகள் பற்றி எந்தவொரு இடத்திலும் சுட்டிக்காட்டப்படவில்லை. திட்டமிட்டே இந்த உண்மை மறைக்கப்பட்டுள்ளது.

4.4 பள்ளிக்கல்வி எனும் தலைப்பின்கீழ், குறைந்த அளவில் மாணவர்கள் உள்ள-திறம்படச் செயல்படுத்த வாய்ப்பில்லாத பள்ளிகளை அருகில் உள்ள பள்ளிகளுடன் இணைத்திட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய - கீழ்ச்சாதி வீட்டுப் பிள்ளைகள் பணம் கட்டித் தனியார் பள்ளிகளில் படிக்க முடியாமல் அரசின் தொடக்கப் பள்ளிகளில் படிக்கிறார்கள். இந்திய அளவில் பெரும்பாலான தொடக்கப் பள்ளிகளில் இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையை ஏற்படுத்தி ஏழை, எளிய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வழங்க வேண்டிய அரசு, அதற்கு மாறாக அவற்றை மூடுவதற்கு வழி சொல்கிறது.

இந்தி அல்லது ஆங்கில மொழி வழியில் கற்பிக்கப்படும் கேந்திரிய வித்யாலயா, நவோதயா பள்ளிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று இந்த அறிக்கை கூறுகிறது. தாய்மொழி வழியில் கற்பிக்கும் போக்கிற்கு இது மேலும் இடையூறாக அமையும்.

4.5 பாடத்திட்டத்தைப் புதுப்பித்தலும் தேர்வு முறையில் சீர்திருத்தமும் என்கிற பிரிவின்கீழ், எல்லா மாணவர்களுக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகள்

மற்றும் கடமைகள் குறித்துக் கற்பிக்க வேண்டும். பொறுப்பான இந்தியக் குடிமக்களாகவும் உலகக் குடி மக்களாகவும் உருவாக்க வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. தான் ஒரு 'இந்தியக் குடிமகன்' என்று நினைக்க முடியாத அளவுக்குத் தேசிய இனங்களை நடுவண் அரசு ஒடுக்கிவரும் நிலையில் 'உலகக் குடி மகன்' என்று தன்னைக் கருத வேண்டும் என்பது எவ்வளவு பித்தலாட்டம்! தாராளமய - தனியார்மய - உலகமய ஏகாதிபத்தியச் சிந்தனையில் தன்னைக் கரைத்துக் கொள்ள வேண்டும் என்பதே இவ்வாறு கூறுவதன் நோக்கமாகும்.

''அறிவியல், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக் குத் தேசிய அளவில் ஒரே பாடத் திட்டம் என்று வகுக் கப்பட வேண்டும். சமூக அறிவியல் பாடத்தில் ஒரு பகுதி இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். மற்ற பாடங்களுக்கான பாடத் திட்டத்தை மாநில அரசுகள் வகுத்துக் கொள்ளலாம்'' என்று இந்த அறிக்கை சொல்கிறது.

**உயர்கல்வி முழுவதையும் பார்ப்பன மேல்சாதி ஆதிக்க வர்க்கத்தினர் கைப்பற்றிக் கொள்வ தற்கான வழி இது. மாநிலங்களின் அடையா ளங்கள்-உரிமைகளை அடியோடு துடைத்தெறிந்து எல்லாவற்றையும் 'அனைத்திந்தியா' என்று ஆக்கி நடுவண் அரசின்கீழ் எல்லா அதிகாரங் களையும் குவிப்பதற்கே இது வழிகோலும். வரலாறு பாடத்தில் ஒரு பகுதியை நடுவண் அரசுக்கு ஒதுக்குவது என்பது இந்துத்துவத்தைத் திணிப் பதற்காகவே! மாநிலப் பாடத் திட்டத்தை மாநில அரசுகளே வகுக்கும் உரிமை நீடிக்க வேண்டும்.**

விரும்புவோர் மட்டும் 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வை எழுதலாம் என்பது, கீழ்ச்சாதி வீட்டுப் பிள்ளைகளுக்குக் கேடானதாகவே அமையும்.

கிராமப்புற மற்றும் நகர்ப்புற உழைக்கும் மக் களின்-பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட-பழங்குடி வகுப்பு களின் பிள்ளைகளை இரண்டாம் நிலையினராக்கி - வெறும் உடலுழைப்பாளிகளாக நிலைபெறச் செய்தி டவே 10ஆம் வகுப்பில் இரண்டு வகையான தேர்வு முறைகளை இந்த வரைவு பரிந்துரைத்துள்ளது.

கணக்கு, அறிவியல், ஆங்கிலம் ஆகிய பாடங் களில் தேர்ச்சிக்குரிய மதிப்பெண் பெற முடியாத தால்தான் பொதுத் தேர்வில் பலரால் தேர்ச்சி பெற முடியவில்லை. எனவே சிறப்பாகப் படிக்கும் மாணவர் களுக்கு இம்மூன்று பாடங்களிலும் தரமான வினாத் தாள் பிரிவு-அ (Part-A) அமைக்கப்படும்; பத்தாம் வகுப்பை முடித்தபின் உடலுழைப்பை முதன்மை யாகக் கொண்ட தொழிற்கல்வி சார்ந்த (Vocational Stream) சான்றிதழ் - பட்டயப் படிப்புகளுக்குச் செல்ல விரும்புகின்ற - சுமாராகப் படிக்கும் மாணவர்களுக்கு மிக எளிய வகையில் இம்மூன்று பாடங்களுக்கும் வினாத்தாள் - பிரிவு-ஆ (Part - B) அமைக்கப்படும் என்று இந்த வரைவு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பள்ளி முன்பருவக் கல்வி முதலே தரமான கல்வியைத் தருவதே குறிக்கோள் என்று தம்பட்டம் அடித்துக்கொள் ளும் இந்த வரைவு, கீழ்த்தட்டு - கீழ்ச்சாதி மக்களைத் தாழ்த்தி வைக்கும் இந்த வருணாசிரமத் திட்டத்தை முன்மொழியலாமா?

4.11 பிரிவு கல்வியில் கலாச்சாரம் மற்றும் மொழி பற்றியதாகும். ''மாநிலங்களுக்கிடையேயும் உலகின் பல பகுதிகளுக்கும் செல்வதற்கு மாணவர்களின் மொழித்திறனை வளர்க்க வேண்டும். இதற்கு மும்மொழிக் கொள்கை உதவுகிறது. தாய்மொழி வழியில் கற்பது தான் எளிதானதும் திறனை வளர்ப்பதும் ஆகும் என்பது உண்மைதான். ஆனால் ஆங்கில மொழியைக் கற்க வேண்டும் என்கிற விருப்பம் மக்களிடம் அதிகமாகி வருகிறது. அதனால் ஆங்கிலவழிப் பள்ளிகள் பெருகி யுள்ளன'' என்று இந்த அறிக்கை கூறுவது தாய்மொழி வழிக் கல்விக்குக் கதவை அடைப்பதாகும்.

4.11 (1) ''எல்லா மாநிலங்களும் யூனியன் பிரதேசங் களும் விரும்பினால் 5ஆம் வகுப்பு வரையில் தாய் மொழியில், வட்டார அல்லது அப்பகுதி மொழியைப் பயிற்று மொழியாகக் கொள்ளலாம்.''

4.11 (2) ''தேசிய அளவிலும் உலக அளவிலும் உயர்ந்த நிலையை அடைவதற்கும் உலக அறிவைப் பெறுவதற்கும் ஆங்கில அறிவு முதன்மையாக வேண்டப் படுகிறது. எனவே இளம் வயதிலேயே மாணவர்கள் ஆங்கிலத்தில் இயல்பாகப் பேசவும் எழுதவும் பயிற்சி அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். எனவே 5ஆம் வகுப்பு வரை தாய்மொழி வழியில் படிக்கலாம். அப்போது ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் படிக்க வேண்டும். 6ஆம் வகுப்பில் மூன்றாவது மொழி யாக எது இருப்பது என்பது மாநிலங்களின் உரிமை யாகும்.''

**மேலே சுட்டப்பட்டுள்ள இவ்விரு பிரிவுகளும் இந்திய அளவில் உயர்நிலைப் பள்ளி வரையில் தாய்மொழி வழியில் பயிலும் 70 விழுக்காட்டு மாணவர்களின் கல்வியின் எதிர்காலத்தைக் குழிதோண்டிப் புதைப்பதாகும். தமிழ்நாட்டில் 60 விழுக்காடு மாணவர்கள் தமிழ் வழியில் பள்ளிக் கல்வியைப் படிக்கின்றனர். ஆங்கில வழிக் கல்வி யை ஊக்குவித்து வளர்ப்பது என்பது தாய்மொழி வழியில் கற்பிக்கும் அரசுப் பள்ளிகளை மூடச் செய்வதாகும்.**

உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகளும், இன்று வேகமாக வளரும் பல நாடுகளும் அரசின் நிதியில், அருகமைப் பள்ளிகளைக் கொண்ட பொதுப்பள்ளி முறையைத்தான் கொண்டுள்ளன. பெரிய பணக்காரர் களும் அடித்தட்டு ஏழைகளும் ஒரே பள்ளியில் படிக் கின்றனர். அனைவரும் இலவசமாகத் தாய்மொழி வழியே கற்கும் பள்ளிகள் மட்டுமே இந்த நாடுகள் அனைத்திலும் உள்ளன. இவை சோசலிச நாடுகள்

அல்ல; அனைத்தும் முதலாளித்துவ நாடுகளாகும். ஆனால் அவை மக்கள் நல அரசுகளாக (Welfare States) இருப்பதால் அனைவருக்கும் ஒரே தரமான இலவசமான பொதுப்பள்ளி முறையைச் செயல்படுத்து கின்றன. மேலும் பொதுப் பள்ளி முறையில் முன்பருவக் கல்வி முதல் 18 அகவை வரையிலான மேனிலைப் பள்ளிக் கல்வி வரை அரசின் செலவில் - பொறுப்பில் ஒரே தரமான கல்வி அளிப்பது அரசின் கடமை; பெறுவது மாணவர் உரிமை என்று கல்வி உரிமைச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும். இவற்றில் தாய்மொழி அல்லது மாநில மொழி ஒன்றே பயிற்று மொழியாக இருக்க வேண்டும். ஆங்கிலம் கல்வி மொழியாக இருத்தல் கூடாது. ஆங்கில வழிக் கல்வி நம் வகுப்பறைகளைப் புரியாத இருளில் மூழ்கடித்து, கல்வியை வெறும் மனப்பாடம் என்பதாக்கிவிட்டது என்று சொல்கிறார், கல்வியாளர் வே. வசந்தி தேவி.

"தனிமனிதரிடையே புதைந்திருக்கும் முழு ஆளு மையை வளர்த்தெடுப்பதும், அதை மொத்த சமுதாயத் தின் நலனுக்காகப் பயன்பெற வைப்பதும் கல்வியின் இலக்குகளாகும். கல்வி சிலரின் இலாபம், ஆதிக்கம், அதிகாரக் குவியல் ஆகியவற்றுக்கான சாதனமாக இருத்தல் கூடாது. அத்துடன் ஆயிரம் பாகுபாடுகளும் ஒடுக்குமுறைகளும் கொண்ட நம் நாட்டில் பொருளா தார, சமூக அநீதிகளுக்கு ஆளாகியிருப்போரை மேலெழச் செய்யும் வலிமை மிக்க ஆயுதமாகக் கல்வி விளங்க வேண்டும்" என்று முனைவர் வே. வசந்தி தேவி திட்டவட்டமாகக் கூறுகிறார்.

**தனியார் பள்ளிகள் 1973-74இல் 5.6 விழுக் காடாக மட்டுமே இருந்தன. இவை 1993-94இல் 15.2 விழுக்காடாக உயர்ந்தன. 2011-12இல் 40.3 விழுக்காடானது. 2016இல் 50 விழுக்காட்டை எட்டியிருக்கும். ஆங்கில வழிக் கல்வி மோகத் தால் - அரசுகளின் ஊக்குவிப்பால் இது 70-80 விழுக்காடாக உயர்ந்திடக் கூடும். ஆங்கில வழிக் கல்வியால் தமிழ்நாட்டில் தமிழ்மொழியைப் புரிந்துகொள்ள முடியாத இளைய தலைமுறை வளர்ந்து வருகிறது. ஆங்கில வழியிலான கல்வி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற தேசிய மொழிகளை அழிக்கும். இம்மொழிகளில் படைப்பாளிகளும், படிப்போரும் இருக்கமாட்டார்கள்.**


4.11 (5) பிரிவில் - "இந்திய மொழிகள் உருவாகி வளர்வதற்குச் சமற்கிருத மொழி ஆற்றிய பங்களிப் பையும் நாட்டின் கலாச்சார ஒருமைப்பாட்டைக் கட்டிக் காத்து வருவதில் சமற்கிருதம் ஆற்றிவரும் ஒப்பரிய பங்களிப்பையும் கருத்தில் கொண்டு பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தாராளமான வழிகளில் சமற்கிருதத்தைக் கற்பிக்க வேண்டும்" என்று கூறப் பட்டுள்ளது.

இந்துத்துவ ஆதிக்க ஆணவத்திற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

ஒருபுறம் பார்ப்பனிய - மேல்சாதி ஆதிக்கத்தை - இந்துத்துவத்தை நிலைநாட்டுவதற்கும், மறுபடியும் பல்வேறு தேசிய இன வழிப்பட்ட மக்களைப் பன் னாட்டு - உள்நாட்டுப் பெருமுதலாளிகளிடம் குறைந்த கூலிக்கு வேலை செய்ய வைப்பதற்கும் மேலும் வலிமை சேர்ப்பதாகவே 2016ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கை வரைவு அமைந்துள்ளது.

எல்லா வகையிலும் - கல்வியில் மாநிலங்களின் உரிமையைப் பறிக்கின்ற, தாய்மொழிவழிக் கல்விக்குக் குழிதோண்டுகின்ற, உழைக்கும் மக்களை மேலும் சுரண்டுகின்ற, இந்துத்துவப் பாசிசத்தை நிலைநாட்டத் துடிக்கின்ற இந்த அறிக்கையைத் தீயிட்டுப் பொசுக்கு வோம்!

## ஓய்வுபெற்ற, மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மருதூர் வே. சோமசுந்தரம் மறைந்தார்!



தமிழ்ப் பற்றாளரும், பெரியார் இயக்க ஆதர வாளரும், நல்லாம்பா ளையம் கு.பாலகிருஷ் ணன், வே.ஆனைமுத்து ஆகியோரின் அன்புக் குரிய தோழருமான, மருதூர் வே.சோம சுந்தரம் அவர்கள், தம் 87ஆம் அகவையில் 30.8.2016 அன்று மறைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னார் சிறந்த தமிழ்ப் பற்றாளர்; அவர் தலை மை ஆசிரியராக விளங்கிய எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் தந்தை பெரியாரை அழைத்து உரையாற்றச் செய்தவர்.

திருச்சிக்கு எப்போது தொடர் வண்டியில் வந்தா லும், தம் இளைய துணைவியாருடன், அருகி லிருந்த வே. ஆனைமுத்துவின் வீட்டுக்கு வந்து அளவளாவிச் செல்லும் வழக்கம் உள்ளவர்; ஆர வாரமின்றிச் செயல்படும் பண்பாளர்.

அன்னாரை இழந்து துயருறும் அவர்தம் இரு துணைவியர், மக்கள், உறவினர் ஆகியோர்க்கு என் சார்பிலும் மா.பெ.பொ.க. சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறேன்.

வாழ்க, வே. சோமசுந்தரம் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

# சரக்கு சேவை வரி யாருக்குச் சுகம்? யாருக்குச் சுமை?

-குட்டுவன்

இந்திய அரசமைப்புச் சட்டம் 1950இல் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் 1919ஆம் ஆண்டும், 1935ஆம் ஆண்டும் இரண்டு இந்திய அரசுச் சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. பிரித்தானிய அரசு ஒற்றையாட்சி முறையைப் பின்பற்றியே இந்தியாவில் தனது ஆட்சியை நிலைநிறுத்தினாலும், இந்திய விடுதலைப் போராட்டத்தின் விளைவால் கூட்டாட்சி இயலைப் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. காங்கிரசுக் கட்சி மாநில உரிமைகளுக்காக விடுதலைப் போராட்டக்காலத்தில் போராடியதை யாரும் மறுத்துவிட முடியாது. 1919, 1935ஆம் ஆண்டுச் சட்டங்களை ஏகாதிபத்தியத்திற்கு வழிவகுக்கும் சட்டங்கள் என காங்கிரசுத் தலைவர்கள் கடுமையான முறையில் சாடினர்.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் தனது சட்டங்களில் மாகாணங்களுக்கு வழங்கிய உரிமைகளைக்கூட, தற்போது இருக்கிற நடுவண் அரசு பறித்துக் கொண்டு வருகிறது. ஒற்றை ஆட்சிமுறையைவிட மோசமான ஏகாதிபத்திய ஆட்சிமுறையை இன்றைய பா.ஜ.க அரசு மக்கள் மீது திணிக்கிறது.

சான்றாக சென்னை மாகாணத்தில், 1937இல் இராஜாஜி முதல்வராக இருந்த போது மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த முற்பட்டார். அப்போது மதுவிலக்கால் ஏற்படும் வருவாய் இழப்பால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டுவதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறையில் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் இருந்த பி.ஜே.தாமஸ் அவர்களின் பரிந்துரையின் பேரிலேயே, விற்பனை வரியை விதித்தார். அன்றைய பிரித்தானிய அரசு இதற்கு அனுமதி அளித்தது. இந்த வரிதான் விடுதலை பெற்ற இந்தியாவில் மாநிலங்களுக்கு அதிக வரிவருவாயை ஈட்டுகின்ற முதன்மையான வரியாக இருந்து வந்தது.

இந்த விற்பனை வரியை மாநிலங்களிடமிருந்து பறிக்கத்தான் வாட் வரியை நடுவண் அரசு நடைமுறைப்படுத்தியது. தமிழ்நாட்டில் வாட் வரி 2007ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அப்போதைய நடுவண் அரசின் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்து இந்த வரிவிதிப்பால் மாநிலங்களுக்கு ஏற்படுகிற இழப்பினை நடுவண் அரசு ஈடு செய்யும் என்று உறுதியளித்தார். வாட் வரியை நடைமுறைப்படுத்தியதால் 2008இல் ஏறக்குறைய 3000 கோடி ரூபாய்க்கு மேல் தமிழ்நாடு வரிவருவாயை இழந்தது. இழப்பீடு தொகையையும் நடுவண் அரசு அளிக்கவில்லை. ஆனால் வாட் வரி வந்தால் முதலீடுகள் பெருகும்-விலைவாசி குறையும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. இதை நம்பித்தான் மருந்துப் பொருட்கள் மற்றும் ஏழைகள் நுகரும் பொருட்கள் மீது வாட் வரியை 4 விழுக்காட்டிற்குத் தமிழக அரசு குறைத்தது. இந்த வரிக் குறைப்பினால் மருந்து விலைகளும் மற்ற பொருட்களின் விலைகளும் குறையவில்லை என்று நிதிச் செயலர்கள் பின்பு உணர்ந்தனர். மாறாக, சில மருந்துப் பொருட்களின் விலைகள் 100 முதல் 150 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ளன என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். மாநிலத்தில் பல நிதி நிர்வாகக் குழப்பங்களை வாட் வரி உருவாக்கிவிட்டது. பல பொருட்கள் மீது வாட் வரியும், சில பொருட்கள் மீது வாட் வரி அமைப்பின் கீழ் (Non-VAT) வராத வரிகளும் விதிக்கப்படுகின்றன. சான்றாக மது, பெட்ரோலியப் பொருட்கள், சர்க்கரை புகையிலை ஆகிய பொருட்கள் மீது வாட் வரிவிதிப்பின் கீழ் வராத மாநில வரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மட்டும் மேற்குறிப்பிட்ட பொருட்களின் வழியாக வரும் வருவாய் மாநிலம் திரட்டும் வரிவருவாயில் 50 விழுக்காடாக உள்ளது.

1973ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்நாடு அரசு விற்பனை வரியை ஒருமுனை வரியாக விதித்து வந்தது. இதில் குழப்பங்கள் இல்லை. இதனால் மாநிலத்தின் ஒட்டுமொத்த வருவாய்க்கு ஏற்ப வரிவருவாயும் பெருகி வந்தது. மேலும் மாநிலத்தினுடைய வேளாண்மை சிறு, குறு, நடுத்தர பெருந்தொழில்கள் எல்லா மாவட்டங்களிலும் பரவுவதற்கு வரிவிலக்கு அளிக்கும் உரிமையையும் மாநில அரசு பெற்றிருந்தது. சான்றாக, வரி விடுமுறை (Tax Holiday) அளிப்பதன் வழியாகத் தொழில்களில் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் துறையை வளர்க்கும் அதிகாரத்தையும் மாநில அரசு பெற்றிருந்தது. பின்தங்கிய மாவட்டமான தருமபுரியில் தமிழக அரசு அளித்த வரிச்சலுகையின் காரணமாகத்தான் ஓசூரில் தொழில் நகரங்கள் உருவாயின என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவேதான் மாநிலத் திட்டக் குழு இந்த வாட் வரியை விதிக்கக்கூடாது எனக் கூறியது. இதனால் இவ்வரி 2006 ஆம் ஆண்டு விதிக்கப்படவில்லை.

வாட் வரி நடைமுறைக்கு வந்த பிறகு மாநிலத்தின் வரிவருவாய் குறைந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இச்சூழலில் மாநிலங்கள் விதிக்கின்ற கேளிக்கை வரி, பொழுதுபோக்கு வரி, மாநிலங்களுக்கிடையே விதிக்கப்படும் மத்திய விற்பனை வரி, சேவை வரி ஆகியவற்றை இணைத்துத்தான் தற்போது நடுவண் அரசால் நாடளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரக்கு-சேவை வரியாகும் (Goods

and Services Tax). இன்னும் இவ்வரி அமைப்பு முறையை நடைமுறைப்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வரிவிதிப்பின் வழியாக மாநிலங்கள் தங்களுடைய நிதி வருவாயை இழப்பதுடன் நிதித் தன்னாட்சியையும் இழந்து விடுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எளிமையான முறையில் வரிவிதிக்கப்படும் என்று ஏமாற்றுக் காரணத்தைக் குறிப்பிட்டு, ஏழை மக்களையும் நடுத்தர மக்களையும் வஞ்சிக்கும் வரிவிதிப்பு முறையே சரக்கு-சேவை வரியாகும். 2006ஆம் ஆண்டு நடுவண் அரசின் நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் ப.சிதம்பரம் இவ்வரியை 2010ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும் என்று அறிவித்தார். இன்றையப் பிரதமர் மோடி உட்பட பல மாநில பாஜக முதல்வர்கள் இவ் வரிவிதிப்பு முறைக்கு அப்போது கடும் கண்டனம் தெரிவித்தனர். நாடாளுமன்றத்தில் பேசிய பாஜக உறுப்பினர்கள் கூட்டாட்சி இயலைச் சிதைக்கும் வரி என்று வாதிட்டனர். இப்படி வாதிட்டவர்கள், இன்று ஏன் இந்த வரியைக் கொண்டு வந்தார்கள் என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக ஒரே வரிமுறையைச் செலுத்திவிட்டால் உள்நாட்டு-பன்னாட்டு முதலாளித்துவ நிறுவனங்கள் தங்களின் பொருட்களை மாநிலங்களுக் கிடையே எடுத்துச் செல்லும் போது எவ்விதத் தடையுமில்லாமல் எளிதாகத் தங்கள் வணிகத்தைப் பெருக்கலாம் என்ற காரணத்தை முன் வைத்துத்தான், நடுவண் அரசின் அமைச்சர்களையும் உயர் அலுவலர் களையும் வலியுறுத்தி வந்தனர். மாநிலங்களை உரிய முறையில் கலந்தாலோசிக்காமல் முதலாளிகள் நலனை ஒட்டியே இவ்வரியின் சட்ட வரைவு உருவாக்கப்பட் டுள்ளது.

இந்த வரி வருவதனால் விலைவாசி கட்டுப்படுத் தப்படுமா? சரக்கு-சேவை வரியை 18 விழுக்காடு விதிக்கலமா? அல்லது 24 விழுக்காடு விதிக்கலாமா? என்பன போன்ற கருத்தொற்றுமை இன்றளவும் ஏற்படவில்லை. அதிக அளவு விழுக்காடு வரியை உயர்த்தினால்தான் தமிழ்நாடு போன்ற தொழில் உற்பத்தியிலும் சரக்கு விற்பனையிலும் முன்னிலை வகிக்கின்ற மாநிலங்கள் இவ்வரி வழியாக உரிய பலனை அடைய முடியும். இவ்வரிவிதிப்பு முறையை விட்டுக் கொடுப்பதால் ஏற்படும் வருவாய் இழப்பையும் சரிக்கட்ட முடியும். உற்பத்தியாளர்களுக்கும் முதலாளி களுக்கும் ஆதரவாக வரிவிகிதத்தைக் குறைக்க, குறைக்க மாநிலங்களுக்குக் கிடைக்கின்ற வரிவரு வாயில் இழப்பு ஏற்படும். சான்றாக, தமிழ்நாடு அரசிற்கு மட்டும் இவ்வரிவிதிப்பு நடைமுறைப்படுத் தப்பட்டால் ஏறக்குறைய 9000 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்று சுட்டப்படுகின்றது.

இந்த வரித் தொடர்பான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியவுடன் நடுவண் அரசின் வருவாய் துறையின் செயலர் அ'முக் அதியா, இச்சட்டம் 2017 ஏப்ரல் முதல் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்படலாம் என்று கூறிவிட்டு, 18 விழுக்காட்டு வரியை விதிக்கலாம் என்று பேசுவது சரியாக அமையாது என்றும் குறிப் பிட்டுள்ளார். மேலும் பெரும்பான்மையான மாநிலங்கள் இந்தச் சட்டத்திற்கு 30 நாள்களுக்குள் தங்கள் சட்ட மன்றங்களின் ஒப்புதலை அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு நிதித்துறையைச் சார்ந்த உயர் அலுலவர் குறிப்பிடுவதைப் பலர் ஏற்றுக் கொள்ள வில்லை. 22 விழுக்காட்டிலிருந்து 24 விழுக்காடு அள விற்கு இந்த வரியை உயர்த்தி விதித்தால்தான் வருவாய் இழப்பு ஏற்படுகின்ற மாநிலங்களுக்கு நடுவண் அரசு குறைந்தது 5 ஆண்டுகளுக்கு உதவி செய்ய முடியும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சாதாரண மாக எல்லாச் சேவைகளுக்கும் 22 முதல் 24 விழுக் காடு வரியை விதித்தால் நடுத்தரப் பிரிவினரும் ஏழை களும் பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள். குறிப்பாக முடித்திருத்தம் செய்பவர்கள்கூட 22 அல்லது 24 விழுக்காட்டுச் சேவை வரியைச் செலுத்த வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். இதே போன்று உணவகங் களுக்கும், செல்லும் நுகர்வோர்க்கும் இதே அதிக விழுக்காடு வரியைச் செலுத்த வேண்டும்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் சரக்கு சேவை வரிவிகிதத்தை 5 முதல் 10 விழுக்கா டாகத்தான் வைத்திருக்கிறார்கள். இதுவே மிக உயர் வான வரிவிகிதம் என்று அந்நாட்டினர் குறிப்பிடு கின்றனர். இந்தியாவில் உள்ள பத்து மாநிலங்களில் தான் ஏறக்குறைய 80 விழுக்காட்டிற்கு மேல் இந்த வரியின் வழியாக வருவாய் கிடைக்கும் சூழல் ஏற்படுகிறது. ஏனென்றால் இந்த மாநிலங்களில்தான் தொழில் துறை தொடங்கிப் பல சேவைத் தொழில்கள் பரவிக் கிடக்கின்றன. இந்தப் பத்து மாநிலங்களில் நான்கு மாநிலங்களில்தான் அதிகத் தொழில்களும் சேவைகளும் குவிந்துள்ளன. எனவே 19 மாநிலங் களில் தொழில் துறை சேவைத் துறைகள் போதிய வளர்ச்சியடையாத காரணத்தினால், இந்த வரி வழியாக அரசிற்கு வருகின்ற வருமானம் மிகச் சொற்ப மாக இருக்கும். ஒடிசா, பீகார் மாநிலங்கள் இந்த வரி விதிப்பு முறையை ஆதரித்து, சட்டமன்றங்களில் தீர் மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றன. இந்த வரியால் ரூ.30,000 கோடிகள் அளவிற்குக் கூடுதலாக வருவாய் கிடைக்கும் எனக் குறிப்பிடப்படுகிறது. இத்தகைய அணுகுமுறை வழியாக மாநிலங்களுக்கு இடையே காலப்போக்கில் கசப்புணர்ச்சி வளரும். கல்வி, திறன் வளம் ஆகிய துறைகளில் சாதனை படைத்து வரும் மாநிலங்களில் இவ்வரிவிதிப்பு முறை சமூக பொருளா

தார பாதிப்புகளைப் பெருமளவில் ஏற்படுத்தும். ஏற்கெனவே நிதிக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் நடுவண் அரசினுடைய நிதிப் பகிர்வுகள், அதிக அளவில் வரிவருவாய் ஈட்டித் தரும் மாநிலங்களுக்குக் குறை வாகவே கிடைக்கின்றன. சான்றாக, தமிழ்நாட்டிற்கு நிதிக்குழுவின் வழியாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை கிடைக்கும் நிதி ஒதுக்கீடு ஒட்டுமொத்த நிதிப்பகிர்வில் 4 விழுக்காடே கிடைக்கின்றது என்பதைப் புள்ளி விவரங்கள் சுட்டுகின்றன.

எனவே இந்த வரிவிதிப்பு முறை ஏற்கெனவே வரியை ஏய்ப்பு செய்து வரும் பன்னாட்டு உள்நாட்டு முதலாளி களுக்கும் பெரும் வணிகர்களுக்கும் மட்டுமே சாதகமாக அமையும். பொருளாதாரத்தையும் வரிவருவாய் வளர்ச்சியையும் நிதிப்பகிர்வையும் ஆய்ந்த அறிஞர்கள், இந்த வரிவிதிப்பு முறையைக் கடுமையாக எதிர்க் கிறார்கள். மேற்கு வங்காளத்தில் இடதுசாரிகள் ஆட்சி செய்த போது வாட் வரியை விதிப்பதற்கான மாநிலங் களுக்கான அமைச்சரவைக் குழுத் தலைவராக அஜிம்தாஸ் குப்தா என்பவர் செயல்பட்டார். இந்திய மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பொருளாதார அறிஞரும் ஜோதிபாசு அமைச்சரவையில் நிதியமைச்சராகப் பணியாற்றியவருமான அசோக் மித்ரா, மேற்கு வங்க உயர் நீதிமன்றத்தில் மேற்கூறிய காரணங்களைச் சுட்டி வாட் வரிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநிலங்களில் இருந்து வரியை நடுவண் அரசு எடுத்துச் செல்லுவதற்கும், மாநிலங்கள் வரி உரிமையை இழப்பதற்கும் இந்தியக் கூட்டாட்சி நிதியியலை (Fedeal Finance) நன்குணர்ந்த பொருளாதார அறிஞர்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இந்திய அரசமைப்புச் சட்டம் உருவான போது நடுவண் அரசு விதிக்கும் வரிகள் மாநில அரசு விதிக்கும் வரிகள் எனப் பகுத்தாய்ந்து பிரிக்கப்பட்டது. மாநில அரசுகள்தான் முதன்மையான மக்கள் பணிகளைச் செய்கின்றன. எனவே மாநில அரசுகளுக்கு நடுவண் அரசின் வரிவருவாயில் இருந்து நிதிக்குழுவின் வழியாக வரிவருவாய் பகிர்வையும் மானியத்தையும் அளிக்க வேண்டும் என்று அரசமைப்புச்சட்டத்தில் 280ஆம் விதி இணைக்கப்பட்டது. ஆனால் இன்று வரி வருவாய் திரட்டுவதில் மாநிலங்களின் தனித்தியங்கும் தன் மையே தகர்க்கப்படுகிறது.

**தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் என்ற பெயரில் மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு 1990ஆம் ஆண்டி லிருந்து தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே இது போன்ற வரிவிதிப்பு முறைகளை ஏற்படுத்தி மாநிலங்களின் அதி காரங்களைக் குறைக்கும் செயல் இந்திய ஒரு மைப்பாட்டிற்கு உலை வைக்கும் முயற்சியாகும். அரசமைப்புச் சட்டத்தின் 124வது திருத்தம் வழியாக இவ்வரிவிதிப்பு முறை நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு முரண்பாடுகளும் குழப்பங்களும் உள்ள சரக்கு-சேவை வரி விதிப்பு முறையை அரசமைப் புச்சட்டத்தின் வழியாகக் கொண்டு வராமல் மேலை நாடுகளில் நடைமுறையில் இருப்பது போன்று வரி ஒப்பந்தங்கள் (Tax Agreement) வழியாகவே சில ஆண்டுகள் சோதனை அடிப் படையில் செயல்படுத்தி இருக்கலாம். இவற்றை யெல்லாம் விட்டுவிட்டு நடுவண் அரசு தனது அதிகார எல்லையை விரிவுப்படுத்துவதை மட்டும் தான் ஒற்றை இலக்காக வைத்துச் செயல்படு கிறதோ என்ற ஐயம் எழுகிறது. இந்தச் சட்டத் திருத்தத்தின் மீது பேசிய பிரதமர் மோடி சரக்கு-சேவை வரி வரி பயங்கரவாதத்திற்கு (Tax Terrorism) முற்றுப்புள்ளி வைக்கிறது என்று கூறியுள்ளார். நிதியமைச்சர் அருண் ஜெட்லி ஒரு நாடு ஒரே வரி (One Nation, One Tax) என்று குறிப்பிட்டுள்ளார். இந்நாள் வரை நடுவண், மாநில அரசுகளுக்கு மறைமுக வரி வழியாகத் தான் 60 விழுக்காட்டிற்கு மேல் வருவாய் வரு கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதைத்தான் பயங்கரவாதம் என்று மோடி குறிப்பிடுகிறார். மேலும் ஏறக்குறைய 1990க்குப் பிறகு வரிச்சலு கைகளை நடுவண் அரசு முதலாளிகளுக்கு அள்ளிக் கொடுத்துள்ளது. இதனுடைய ஒட்டு மொத்த மதிப்பு கடந்த பத்தாண்டுகளில் மட்டும் 150 இலட்சம் கோடியைத் தாண்டுகிறது. இதைத் தவிர நடுவண் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள நேர்முக வரிகளில்தான் வரி ஏய்ப்பும் மோசடிகளும் அதிக அளவில் நடைபெறுகின்றன. இந்த வரிஏய்ப்பு செய்த பணம்தான் மொரிஷியஸ் போன்ற நாடுகளில் இயங்கி வரும் வங்கிகளில் கறுப்புப் பணமாகக் குவிக்கப்படுகிறது. இந்தப் பணம்தான் மீண்டும் இந்தியாவிற்கு அந்நிய நேரடி முதலீடு என்ற பெயரில் திரும்புகிறது என்பதை 2016ஆம்ஆண்டின் நடுவண் அரசின் பொருளாதார ஆய்வு அறிக்கையிலேயே சுட்டப் பட்டுள்ளது. இதுபோன்ற நிதி மோசடிகள்தான் பொருளாதார பாசிசத்தையும் பயங்கரவாதத்தையும் ஊக்குவிக்கிறது. இந்த உண்மைகளை மறைத்து விட்டு பாஜகவும் காங்கிரசும் முதலாளித்து வத்தின் தரகர்களாகவே செயல்பட்டு மக்களுக் கும் நாட்டிற்கும் கேடு விளைவிக்கும் சரக்கு-சேவை வரியை அறிமுகப்படுத்துகிறார்கள். இதன் நீண்டகால விளைவுகளை உணராத அரசியல்**

**கட்சிகளும் முதலாளித்துவ ஏடுகளும் அவர்களின் தரகர்களும் சரக்குச் சேவை வரி முறையை ஆதரிக்கின்றனர்.**

19ஆம் நூற்றாண்டில் முதலாளித்துவம் ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய போதே இத்தகைய வன்மங்களோடுதான் செயல்படும் அதிகாரங்களைக் குவிக்கும் என்று பொதுவுடைமை அறிக்கையில் மார்க்சும்-ஏங்கல்சும் நுண்மான் நுழைப்புலத்துடன் விளக்கியுள்ளனர். தனித்தனியாகப் பிரிந்து நிற்கும் மக்களையும் உற்பத்திக் கருவிகளையும் சொத்துக்களையும் முதலாளிகள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்கிறார்கள். இதனால் சிலர் கையில் சொத்துகள் சேருவதும் உற்பத்திச் சாதனங்கள் மையப்படுத்தப்படுவதும் மக்கள் ஒன்று திரட்டப்படுவதும் நிகழ்கின்றன. இதன் விளைவாக அரசியல் அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்படுகிறது. தனித்தனி நலன்களையும் சட்டங்களையும் அரசுகளையும் வரிவிதிப்பு முறைகளையும் கொண்ட சுயாட்சி உடைய அல்லது தனித்தனியாக இயங்குகின்ற மாநிலங்கள் ஒரே சட்டத்தோடு ஒரே வரிவிதிப்பு முறையோடு ஒரே தேசிய வர்க்க நலனிற்காக ஒரே அரசாக ஒரே எல்லையோடு ஒரு நாடாகத் திணிக்கப்படுகிறது என இப்பேரறிஞர்கள் சரியாகக் கணித்துள்ளனர் (The bourgeoisie keeps more and more doing away with the scattered state of the population, of the means of production, and of property. It has agglomerated population, centralized means of production and has concentrated property in a few hands. The necessary consequence of this was political centralization, independent, or but loosely connected provinces with separate interests, laws, governments and systems of taxation, became lumped together into one nation, with one government, one code of laws, one national class interest, one frontier and one customs-tariff (Ref:From Communist Manifesto (1848) – Karl Marx- Frederic Engels – On the National and Colonial Questions – Selected Writings, edt. by Aijaz Ahmad, 2001, p.37)

**இந்தியாவின் பத்து மாநிலங்களில் இருந்து பெறப்படும் அதிக வரிவருவாயை மிகக் குறைவான வரிவருவாயை ஈட்டும் ஏனைய 19 மாநிலங்களுக்கு சரக்கு-சேவை வரி என்ற பெயரில் பிரித்துக் கொடுப்பதுதான் தேசிய ஒருமைப்பாடா? இதுதான் நிதிச் சமத்துவமா? வட மாநிலங்களில் உள்ள முதலாளிகளின் நலன்களுக்காகவே மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் முதல் மூன்று இடங்களில் உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களை வஞ்சிக்கத்தான் இந்த வரிவிதிப்பு முறையா? சுமை ஒரு பக்கம்! சுகம் ஒரு பக்கமா?**

## காஞ்சி மாவட்ட தி.மு.க.வின் மூத்த உறுப்பினர் ஈசூர் செ. சாமிக்கண்ணு அவர்கள் 102ஆம் அகவையில் மறைவுற்றார்



காஞ்சி மாவட்டம், செய்யூர் வட்டம், ஈசூர் செங்கேணி அவர்களின் மகனாகப் பிறந்த சாமிக்கண்ணு அவர்கள் எளிய வேளாண் குடும்பத்தைச் சார்ந்தவர்; உழைப்பால் உயர்ந்தவர்; காஞ்சி மாவட்டத்தின் மிக மூத்த தி.மு.க. உறுப்பினர்.

2014 இல், தம் 100ஆம் பிறந்த நாளையொட்டி, தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேரில் கண்டு அவருக்கு ஆடை போர்த்தி வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தவர்.

சென்னை அம்பத்தூரில் இயங்கும் பெரியார் - நாகம்மை அறக்கட்டளை வளாகத்தின் அருகில், இளநீர் வணிகம் செய்யும் தோழர் இராசேந்திரன் சாமிக்கண்ணு அவர்களின் சொந்த மருமகன். அவரும் அவருடைய துணைவியார் சத்தியவாணியும், அவர்தம் மக்களும் சாமிக்கண்ணு அவர்களின் பொதுத் தொண்டு பற்றி 2014இல் மிக விவரமாகக் கூறி, என் போன்றோரை மகிழ வைத்தார்கள்; மலைக்க வைத்தார்கள். செ.சாமிக்கண்ணு அவர்களை நேரில் பார்த்து அளவளாவ நானும் தோழர்களும் விரும்பினோம்.

ஆயினும், எதிர்பாராத தன்மையில் அவருடைய உடல்நிலை கெட்டு, 1.8.2016 மாலை செ. சாமிக்கண்ணு அவர்கள் மறைந்துவிட்டார் என்ற செய்தியை அறிந்து, மா.பெ.பொ.க. தோழர்கள் வே. ஆனைமுத்து, கு. தொல்காப்பியன், இரா. மன்பழகன் ஆகியோர் ஈசூருக்கு 2.8.2016 பிற்பகல் 4 மணிக்குச் சென்று கருப்பு ஆடையும் மலர் மாலையும் அவருடைய உடலுக்கு அணிவித்து செ. சாமிக்கண்ணு அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினோம்.

2.8.2016 முழுவதும் காஞ்சி மாவட்டத்தின் தி.மு.க. தலைவர்களும் தோழர்களும்; மற்ற கட்சிகளின் தலைவர்களும் வருகை தந்து 102 அகவை வரை சுறுசுறுப்பாகப் பணியாற்றிய மூத்த தி.மு.க. தலைவருக்கு அஞ்சலி செலுத்திச் சென்றனர்.

**வாழ்க ஈசூர் செ. சாமிக்கண்ணு புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# இந்துத்துவ வெறியர்களின் தாக்குதலுக்கு எதிராகக் குசராத்தில் மூண்டெழுந்த தலித்துகளின் எழுச்சிமிகு போராட்டம்

- க. முகிலன்

பிரித்தானிய ஆட்சியை எதிர்த்துக் காந்தியார் நடத்திய போராட்டங்களில் தண்டி நெடும் பயணம் (யாத்திரை) முதன்மையான ஒன்றாகும். 1882இல் பிரித்தானிய ஆட்சி, உப்பு மீது விதித்த வரியை நீக்கக் கோரியும்-இந்தியாவில் கடற்கரையில் வாழும் மக்களின் உப்புக் காய்ச்சும் உரிமையை நிலைநாட்டும் பொருட்டும் காந்தியார் தண்டி யாத்திரையை மேற்கொண்டார். குசராத் மாநிலத்தில் அகமதாபாத் நகருக்கு அருகில் இருந்த சபர்மதி ஆசிரமத்திலிருந்து 1930 மார்ச்சு 12 அன்று 78 தொண்டர்களுடன் குசராத் கடற்கரையில் உள்ள சிற்றூரான தண்டியில் உப்புக் காய்ச்சுவதற்கான நெடும் பயணத்தைத் தொடங்கினார். 390 கி.மீ. (240 மைல்கள்) தொலைவை 24 நாட்களில் நடந்து 1930 ஏப்ரல் 5 அன்று தண்டியை அடைந்தார். 1930 ஏப்ரல் 6 அன்று காலை 6.30 மணிக்குக் காந்தியார் தண்டியின் கடற்கரையில் உப்பை அள்ளினார். இந்த நிகழ்வு பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான உணர்வலைகளை மக்களிடம் உண்டாக்கியது. உப்புச் சத்தியாக்கிரகத்தையொட்டி காந்தி கைது செய்யப்பட்டார். 80,000 மக்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆயினும் காந்தியாரின் கோரிக்கையை ஆங்கிலேயர் ஆட்சி ஏற்கவில்லை.

காந்தியாரின் தண்டி நெடும் பயணத்தைக் காட்டிலும், சீனாவில் மா-சே-துங் தலைமையில் நடந்த நெடும் பயணம் இன்றளவும் உலகப் புகழ்பெற்றதாக விளங்குகிறது. நெடும் பயணம் என்ற சொல்லே மாவோ நடத்தியதைத்தான் குறிப்பதாக நிற்கிறது. சீனாவில் அமெரிக்காவின் ஆதரவுடன் ஆட்சியில் இருந்த சியாங்-கே-ஷேக் படைகளின் தாக்குதல்களை முறியடித்துக் கொண்டு தென் சீனாவின் ஜியாங்சி மாகாணத்திலிருந்து வடக்கில் உள்ள ஷாங்சி மாகாணம் வரை மக்கள் செம்படை நெடும்பயணமாகச் சென்றது. வழிநெடுகிலும் மக்களிடம் பொதுவுடைமைக் கோட்பாட்டைப் பரப்பியும், பண்ணையார்களின் நிலைங்களைப் பறித்து உழவர்களுக்குப் பகிர்ந்தளித்தும் சோசலிசக் கட்சிக்கான அடித்தளத்தை அமைத்தும் செம்படை சென்றது.

**1934 அக்டோபர் 16 அன்று மாவோ தலைமையில் 86,000 பேர்களுடன் புறப்பட்ட இந்த நெடும் பயணம் 9000 கி.மீ. (5600 மைல்கள்) தொலைவை 370 நாள்கள் நடந்து, 1935 அக்டோபர் 22 அன்று முடிவுற்றது. வழிநெடுக சியாங்கே ஷேக் படைகளின் தாக்குதல், பெரிய ஆறுகளின் வெள்ளப் பெருக்குகள், பனிமலைகள், இயற்கைப் பேரிடர்கள் என்று சொல்லொணாத் துன்பங்களைச் சந்தித்து வென்றது. வழிநெடுகிலும் நெடும் பயணத்தில் மக்கள் இணைந்தனர். ஆயினும் 1934 அக்டோபர் 16 அன்று நெடும் பயணம் புறப்பட்ட போது செம்படையில் இருந்த 86,000 பேர்களில் 1935 அக்டோபர் 22 அன்று இப்பயணம் நிறைவுற்ற போது, 7000 பேர்கள் மட்டுமே எஞ்சியிருந்தனர். மீதி 79,000 பேர்களில் பெரும்பாலோர் போரில் மாண்டனர்; மற்றவர்கள் இயற்கைப் பேரிடர்களினால் மாண்டனர். இந்த நெடும் பயணமே 1949இல் சீனாவில் சோச லிசப் புரட்சி வெற்றிபெற அடித்தளமாக அமைந்தது.**



*சூலை 11 அன்று தலித் இளைஞர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து அமதாபாத்தில் தலித்துகளின் ஆர்ப்பாட்டம்*

காந்தியார் தண்டி யாத்திரையைத் தொடங்கிய அகமதாபாத் நகரிலிருந்து புறப்பட்டு 2016 ஆகத்து மாதம் 5ஆம் நாள் - பசுவைக் கொன்று அதன் தோலை உரித்ததாக நான்கு தலித்துகள்மீது உனாநகரில் ''பசுப் பாதுகாப்புப் படை'' என்ற பெயரிலான சங்பரிவார ஆட்கள் நடத்திய கொடிய தாக்குதலைக் கண்டித்து உனாநகருக்கு 10,000 தலித்துகள் பத்து நாள்கள் மேற்கொண்ட நெடும் பயணம் குசராத்தை மட்டுமின்றி, இந்தியாவையே உலுக்கியது.

மாட்டிறைச்சி உண்கின்ற-மாட்டுத் தோல் தொழில்களில் ஈடுபட்டுள்ள முசுலீம்களையும், தலித்துகளையும் தாக்கி, அவ்விரு வகுப்பினரையும் அச்சுறுத்துவதற்காக, ''பசுப் பாதுகாப்புப் படை'' என்ற பெயரில் சங் பரிவாரங்கள் பல ''ரவுடிக் கும்பல்களை'' ஏவிவிட்டுள்ளது.

அண்மைக்காலத்தில், ''கோமாதாவின்'' பெயரால் தலித்துகள் தாக்கப்பட்ட முதலாவது நிகழ்ச்சி அரியானா மாவட்டத்தில் ஜஜ்ஜார் என்ற ஊரில் 2002 அக்டோபர் 15 அன்று நடந்தது. செத்துப்போன பசுவின் தோலை உரித்துக் கொண்டிருந்த அய்ந்து தலித்துகளை இந்துத்துவ வெறிக்கும்பல் தாக்கியது - தலித்துகள்தான் பசு

வைக் கொன்றார்கள் என்று கூறியது துலினா காவல் நிலையத்துக்கு எதிரில், மக்கள் புடைசூழப் பார்த்திருக் கும் நிலையில், அய்ந்து தலித்துகளும் கடுமையாகத் தாக்கப்பட்டபின் எரித்துக் கொல்லப்பட்டனர். காவல் துறையினர் தலையிட்டுத் தடுக்கவில்லை. இதற்கு இந்திய அளவில் கண்டனக் குரல்கள் எழுந்தன. செத்த பசுவின் இறைச்சியை ஆய்வுக்கூடத்தில் ஆய்வு செய்த தில், தலித்துகள் அதன் தோலை உரிப்பதற்கு 24 மணிநேரத்திற்கு முன்பே அப்பசு இறந்துவிட்டிருந்தது என்பது தெரிய வந்தது. அதன்பிறகுதான் தலித்துகள் மீதான தாக்குதல் தொடர்பாக 32 பேர் கைது செய் யப்பட்டனர். 1989ஆம் ஆண்டின் தலித்துகள் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பேரில் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆயினும் அவர் கள் 2003 சனவரியில் பிணையில் வெளிவந்து சுதந்தரமாக உலவிக் கொண்டிருக்கின்றனர்.

2015 செப்டம்பர் 28 அன்று உத்தரப்பிரதேச மாநி லத்தில் தாக்கி என்ற ஊருக்கு அருகில் உள்ள பிஷாரா என்ற சிற்றூரில் முகமத் அக்லக் என்ற முசுலீம் பசுவைக் கொன்று அதன் இறைச்சியை வீட்டில் வைத்திருக் கிறார் என்கிற பொய்யான செய்தியின் அடிப்படையில், இருநூறு பேர் கொண்ட இந்துமத வெறிக்கும்பல் அவரு டைய வீட்டையும், குடும்பத்தினரையும் தாக்கியது. இத்தாக்குதலில் முகமது அக்லக் கொல்லப்பட்டார்; அவரது மகன் தனிஷ் படுகாயமடைந்தார்.

முசுலீம்களின் வாக்கு வங்கிக்காகத் தன்னை முசுலீம்களின் காவலராகப் பல ஆண்டுகளாகக் காட்டிக் கொள்ளும் முலாயம் சிங்கின் மகன் அகிலேஷ் யாதவின் ஆட்சி, அக்லக்கைக் கொன்றவர்கள் மீது பெயரளவில் மென்மையாக நடவடிக்கை மட்டுமே எடுத்துள்ளது. தாத்ரி நிகழ்ச்சி குறித்து நடுவண் அரசுக்கு உ.பி. அரசு அனுப்பிய அறிக்கை மோடியை மகிழ்விக்கும் தன்மை யில் அமைந்திருந்தது.

தாத்ரியில் முசுலீம்கள் தாக்கப்பட்ட பின், கோமாதா பெயரால் முசுலீம்கள், தலித்துகள் மீது தாக்குதல் நடத்து வது அதிகமாயிற்று. மாட்டுத்தோல் தொடர்பான தொழில் களில் முசுலீம்களும், தலித்துகளும் இருப்பதாலும், இவ்விரு பிரிவினரும் மாட்டிறைச்சி உண்பதாலும் வெறி யர்கள் இவர்களைக் குறிவைத்துத் தாக்குகின்றனர். மாடுகளின் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களை அச் சுறுத்துகின்றனர். சந்தைக்கு மாடுகளை ஏற்றிச்செல்லும் வாகனங்களைத் தடுத்து நிறுத்தித் தாக்குகின்றனர். இதனால் வடஇந்தியாவில் மாட்டுச் சந்தைகளே நடை பெற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாட்டு வணிகம் செய்யும் இரண்டு முசுலீம்களை பசுமாட்டுப் படையினர் ஒரு மரத்தில் தூக்கிலிட்டனர். இரண்டு முசுலீம்களில் ஒருவர் 17 அகவையினர். சட்டத்தை இந்து வெறியர்கள் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு



இரண்டு முசு லீம்களைத் தூக்கிலிட்டதைக் கண்டித்து முசுலீம் கள் வீதியில் இறங்கிப் போராட முடியாது. அப்படிச் செய்தால் மேலும் பல முசுலீம்கள் கொல்லப்படுவார்கள்; அவர் களின் வீடுகள் சூறையாடப்படும் என்கிற அச்சம் முசுலீம் களை அலைக் கழித்துக் கொண்டே இருக்கிறது. முசுலீம் கள் இவ்வாறு அஞ்சி அஞ்சி இந்துக்களுக்கு அடங்கி நடக்க வேண்டும்; இரண்டாம் தரக் குடிமக்களாக வாழவேண் டும் என்பது தான் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தத்துவத் தலைவர் எம்.எஸ்.கோல் வால்கர் வகுத்தளித்துள்ள திட்டமாகும். இது மோடியின் ஆட்சியில் தங்குதடை யின்றி - காவல் துறையின் ஆதரவுடன் அரங்கேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இதன் தொடர் நடவடிக்கையாக 2016 சூலை 11 அன்று ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது. குசராத் மாநிலம் கிர்சோம்நாத் மாவட்டத்தில் உனா நகருக்கு அருகில் உள்ள மோடா சமந்ரியாலா என்ற சிற்றூரில் செத்த பசுவின் தோலை நான்கு தலித்துகள் உரித்துக் கொண்டிருந்தார்கள். சங்பரிவாரங்கள் இந்திய அளவில் உளவுப்படையை வைத்துள்ளது. இச்செய்தி உனா நகரின் பசுமாட்டுப் படைப் பிரிவுக்கு எட்டியது. உடனே ஒரு மகிழுந்தில் மோடா சத்தியாலாவிற்கு வந்தனர். பசு மாட்டின் தோலை உரித்துக் கொண்டிருந்த நான்கு தலித் இளைஞர்களைக் கடுமையாக உதைத்தனர். அவர்களை மகிழுந்தில் கட்டி உனா நகருக்கு இழுத்துச் சென்றனர். உனா நகரில் காவல் நிலையத்திற்கு அருகில் அந்த நான்கு தலித் இளைஞர்களை அரை நிர்வாணமாக்கி, தடியாலும், இரும்புக் குழாய்களாலும் மாறி மாறி அடித்தனர். ‘‘நாங்கள் செத்த பசுவின் தோலைத்தான் உரித்தோம்’’ என்று அந்த நான்கு தலித் இளைஞர்களும் அவர்களின் குடும்பத்தினரும்



*15-8-2016 அன்று உனாவில் நடந்த மாபெரும் கூட்டத்தில் தலித்துகள்*

கூறி மன்றாடியும், இந்துத்துவ வெறியர்கள் அவர்களை அடிப்பதை நிறுத்தவில்லை. மதவெறி காரணமாக மனிதநேயத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்ட மக்கள் கூட்டம் இதைத் தடுக்க முயலாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இதைவிடக் கொடுமை என்னவெனில் காவல் துறையினரும் வேடிக்கை பார்த்ததுடன், தலித் இளைஞர்களை அடிப்பதற்குத் தங்களிடம் இருந்த 'லத்தி'க் கம்புகளையும் கொடுத்தனர்.

கோமாதாவுக்கு ஊறு விளைவிக்க எந்தவொரு தலித்தோ, முசுலீமோ கனவிலும் நினைக்கக்கூடாது என்று பாடம் கற்பிக்கும் நோக்கத்துடன், உனா நகரில் நான்கு தலித்துகள் பல மணிநேரம் தாக்கப்பட்ட நிகழ்ச்சியைப் படம் பிடித்து இந்துத்துவ வெறியர்கள் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தனர். இவர்களின் வஞ்சகக் கொடிய மனத்திற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா!

இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட காட்சிதான் எவரும் எதிர்பாராத வகையில் மாபெரும் எதிர்ப்பலையாக மாறியது. குசராத்தில் தலித்து மக்கள் 7.1 விழுக்காட்டினர் உள்ளனர். குசராத் மாநிலம் பனியாக்கள்-பட்டேல்கர் எனும் மேல்சாதிகளின் ஆதிக்கக் கோட்டை ஆகும். பனியாக்கள் இந்தியாவின் மிகப் பெரிய - அதிக எண்ணிக்கையிலான முதலாளிகளாக இருக்கின்றனர். பட்டேல்கர் பெரிய நிலவுடைமையாளர்கள்; ஆதிக்கத் திமிர் பிடித்தவர்கள். குசராத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கூட தலைதூக்கவிடாமல் பனியா-பட்டேல் மேல்சாதி வர்க்கம் அடக்கி வைத்துள்ள நிலையில், தலித்துகள் இன்னும் கொடிய முறையில் ஒடுக்கி வைக்கப்பட்டுள்ளனர். 1980களில் குசராத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக மேல்சாதியினர் நடத்திய வெறிச்செயல்கள் தலித்துகளை மேலும் ஒடுக்கின.

எனவே உனாவில் நான்கு தலித்துகள் தாக்கப்பட்ட செய்தி, அதிகம் போனால் நாளேடுகளில் ஒரு நாள் செய்தியாக மட்டும் முடிந்துவிடும் என்று இந்துத்துவ வெறியர்கள் நினைத்தார்கள். ஏனெனில் குசராத்திலும் நடுவண் அரசிலும் பா.ச.க. ஆட்சிகள் உள்ளன. ஆனால் இணைய தளத்தில் கண்மூடித்தனமாக நான்கு இளைஞர்கள் தாக்கப்பட்டதைக் கண்ட தலித் இளைஞர்களும் மக்களும் சினங்கொண்டு எதிர்த்துப் போராடத் துணிந்தனர்.

**முதல் நடவடிக்கையாக, செத்த பசுக்களின் உடல்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பும், மற்ற அரசு அலுவலகங்களின் வாயிலிலும் போட்டு, "பசு உன் அம்மா என்றால் அவளை நீ பார்த்துக் கொள்" என்று முழக்கமிட்டனர். தங்கள் சமூகம் காலங்காலமாகத் தொடர்ந்து இழிவுகளுக்கும் இயலாமைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவதால் வெறுப்பும் சினமும் கொண்ட முப்பதுக்கும் மேற்பட்ட தலித் இளைஞர்கள் பொது இடங்களில் நஞ்சுண்டு மாய்த்துக் கொள்ள முயன்றனர். இதில் ஒருவர் உயிரிழந்தார்.**

உனா, குசராத்தின் சவுராட்டிரா பகுதியில் இருக்கிறது. 1947க்குமுன் சவுராட்டிரா பகுதி முழுவதும் சிற்றரசர்களின் ஆட்சியின்கீழ் இருந்ததால் பழமைவாதமும் சாதி வெறியும் தலைவிரித்தாடின. சவுராட்டிரா பகுதியில் முழு வேலை நிறுத்தத்திற்கு தலித்துகள் அழைப்பு விடுத்தனர். இதைத் தடுத்திட காவல்துறையினர் குவிக்கப்பட்டிருந்த போதிலும் முழு கடையடைப்பு நடந்தது. கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. நெடுஞ்சாலைகளில் தலித் ஆண்களும் பெண்களும் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதனால் வாகனப் போக்குவரத்து நின்றது. சில இடங்களில் பேருந்துகள், காவல் துறை வாகனங்கள் எரிக்கப்பட்டன. காவல் துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வெடித்தனர். கல்லெறியில் ஒரு காவலர் கொல்லப்பட்டார்.

**குசராத்தில் நரேந்திர மோடி 12 ஆண்டுகளாக முதலமைச்சராக இருந்தார். வளர்ச்சியில் இந்தியாவுக்கே குசராத் மாநிலம் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது என்று கூறி மோடியே தன்னைச் சுற்றி ஒரு ஒலி வட்டத்தை உருவாக்கிக் கொண்டார். இதைக் காட்டித்தான் மோடி 2014இல் பிரதமரானார். ஆனால் நடுவண் அரசின்கீழ் இயங்கும் தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட (National Crime Records Bureau - NCRB) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (அப்போது மோடி குசராத் முதல்வராக இருந்தார்) இந்தியாவிலேயே தலித்துகள் மீதான தாக்குதல்கள், கொலைகள், பாலியல் வன்கொடுமைகள் பட்டியலில் குசராத் முதல் மாநிலமாக இடம்பெற்றுள்ளது (Economic and Political Weekly, 2016, August 2016) எனக் குறிக்கப்பட்டுள்ளது.**

மேலும் 2014ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், தலித்துகள் மீதான தாக்குதல் குறித்த வழக்குகளில் இந்திய அளவில் 28.8 விழுக்காட்டு வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வெட்கக்கேடான அளவில் குசராத்தில் தலித்துகள் தாக்கப்பட்ட வழக்குகளில் 3.4 விழுக்காட்டு வழக்குகளில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பின்னணியில் 2016 சூலை 11 அன்று உனாவில் நான்கு தலித் இளைஞர்கள் தாக்கப்பட்டதை எதிர்த்துத் தொடர்ந்து போராட வேண்டும் என்பதற்கான உந்துவிசையாக இணையதளத்தின் பதிவேற்றக் காட்சிகள் விளங்கின. இழிவுபடுத்தப்படுவதற்கும் ஒடுக் கப்படுவதற்கும் ஒரு முடிவு காணவேண்டும் என்கிற போர்க்குணம் தலித்துகளிடையே கொழுந்துவிட்டு எரிந்தது.

எனவே, உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதற் காக அகமதாபாத் நகரில் ஆயிரக்கணக்கான தலித் துகள் 31.7.2016 அன்று பொது வெளியில் கூடினர். எந்த அரசியல் கட்சியின் சார்பும் இல்லாமல், தலித்துகளுக் குள் உள்ள உள்சாதிப் பிரிவுகளை ஒதுக்கிவிட்டு, தன் னெழுச்சியாக அகமதாபாத்தில் ஒன்றுதிரண்டனர். ஒரு முடிவு எடுத்தனர். அதன்படி, 5.8.2016 அன்று அகமதா பாத்திலிருந்து மாபெரும் பேரணியைத் தொடங்கி, வழியில் சிற்றூர் நெடுகிலும் பரப்புரை செய்து கொண்டு, 370 கி.மீ. தொலைவில் உள்ள உனா நகரில் நான்கு தலித்துகள் தாக்கப்பட்ட இடத்தில் 15.8.2016 அன்று இந்தியாவின் சுதந்தர நாளில் தலித்துகளுக்குச் சுதந் தரம் (ஆசாத்) வேண்டும் என்ற முழக்கத்துடன் தேசிய மூவண்ணக் கொடியை ஏற்றுவது என்று முடிவு செய்தனர்.

அவ்வாறே 5.8.2016 அன்று அகமதாபாத் நகரில் பத்தாயிரம் தலித்துகள் கலந்துகொண்ட பேரணி தொடங்கியது. இப்பேரணியில் பிற மாநிலங்களி லிருந்து தலித்துகளும், சமூக செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர்.

இங்கு தலித்துகள் இந்த ஆண்டு நடத்திய மற்றொரு பேரணியைப் பற்றிக் குறிப்பிட வேண்டியுள்ளது. தீண்டப் படாதவருள்ளும் தீண்டப்படாதவராகக் கருதப்படும் கையால் மலம் அள்ளும் - மனிதக் கழிவுகளை அகற்று வோர் சங்கம் 2015 திசம்பரில் அசாம் மாநிலத்தில் திப்ரும் என்ற இடத்தில் தில்லியை நோக்கிப் பேரணி நடத்தியது. இப்பேரணி 30 மாநிலங்களில் 500 மாவங்டடங்கள் வழியாக 3500 கி.மீ. தொலைவை 125 நாள்கள் நடந்தே சென்று 2016 ஏப்ரல் 13 அன்று தில்லியில் ஜந்தர்மந்தரில் முடிவுற்றது. அம்பேத்கரின் 125ஆவது பிறந்த நாளை 125 நாள்கள் நடந்து வந்து தில்லியில் மாபெரும் கூட்டம் நடத்திக் கொண்டாடியது. ஆனால் செய்தி ஊடகங்களில் பெரிய அளவில் இச் செய்தி வெளிவரவில்லை. கடையருள் கடையராக உள்ள இவர்களின் பேரணி எந்தவொரு மாநில அரசியலி லோ, இந்திய அளவிலான அரசியலிலோ எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் வலிமை வாய்ந்ததாக இருக்க வில்லை.

ஆனால் குசராத்தில் உனாவில் 5.8.2016 அன்று தொடங்கிய பேரணி உடனே இந்திய அரசியலில் விவாதப் பொருளாகிவிட்டது. உத்தரப்பிரதேசத்தில் 2017 ஏப்ரல் - மே மாதங்களில் சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடைபெற உள்ளது. அதேபோல் 2017ஆம் ஆண்டின் பிற்பகுதியில் குசராத் சட்டப்பேரவைக்குத் தேர்தல் நடைபெற இருக்கிறது. 2014 நாடாளுமன்றத் தேர்தலில் உ.பி.யில் 80 நாடாளுமன்ற உறுப்பினர் இடங்களில் 73 இடங்களை பா.ச.க கைப்பற்றியதால் தான் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடிந்தது. 21 கோடி மக்கள் வாழும் உ.பி.யில் ஆட்சியைக் கட்டாயம் முலாயம் சிங் கட்சியிடமிருந்து கைப்பற்றிவிட வேண்டும் என்று பா.ச.க. திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. 12 ஆண்டுகள் மோடி ஆட்சி செய்த குசராத் மாநிலத்தின் ஆட்சியைத் தக்க வைத் துக் கொள்ள வேண்டியது பெரிய மானப் பிரச்சனை யாக இருக்கிறது. மேலும் உ.பி.யில் மாயாவதி உனா வில் தலித்துகள் தாக்கப்பட்ட நிகழ்வைக் காட்டி அரசியல் ஆதாயம் அடையக்கூடும் என்று பா.ச.க. அஞ்சியது.



*அகமதாபாத்தில் பெண்கள் சாலை மறியல்*

எனவே 5.8.2016 அன்று உனாவை நோக்கித் தலித் பேரணி தொடங்கியதும், அதன் விளைவுகளால் பாதிக்கப்படுவோமோ என்ற அச்சம் பா.ச.க.வுக்கு ஏற்பட்டது. 20.7.2016 அன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உனாவில் நான்கு தலித் இளைஞர்கள் தாக்கப்பட்டது குறித்து எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரி வித்தபோது உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், குசராத் மாநில அரசு சட்டப்படியான உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று வழக்கமான முறையில் விடை யளித்தார். மோடி அப்போது வாய்திறக்கவில்லை.

ஆனால் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தலித்துகள் பங்கேற்கும் பேரணி பத்து நாள்களில் பல நூறு ஊர் களில் பரப்புரை செய்யத் தொடங்கிவிட்ட காரணத் தால், 7.8.2016 அன்று அய்தராபாத்தில் பாரதிய சனதா கட்சி ஊழியர்களிடம் பேசிய நரேந்திர மோடி தனக்கே உரிய நாடக பாணியில், உனாவில் தலித்துகள் மீதான தாக்குதல் குறித்து 25 நாள்களுக்குப் பிறகு கருத்து ரைத்தார். “என்னுடைய தலித் சகோதரர்களைத் தாக்க நினைப்பவர்கள், முதலில் என்னைச் சுடுங்கள்” என்று வீர வசனம் பேசினார். தலித்துகளைத் தாக்கும் பசுப்பாதுகாவலர்கள் போலி இந்துத்துவவாதிகள்; சமூக விரோதிகள் என்று மோடி கூறினார். அவருடைய

உரையின் உட்கரு தலித்துகளைத் தாக்கியவர்களைக் கண்டிப்பதாக அல்லாமல், எதிர்க்கட்சிகள் இதை அரசிய லாக்குவதைக் கண்டிப்பதையே முதன்மையாகக் கொண்டிருந்தது. அக்கூட்டத்தில், தான் பிரதமரான பின்னர் அம்பேத்கரின் பெருமையை-புகழைப் பரப்பு வதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பட்டிய லிட்டார். அம்பேத்கர் இலண்டனில் படித்த போது வாழ்ந்த வீட்டை வாங்கி நினைவிடமாக்கியது, தில்லியில் அம்பேத்கர் நினைவாக பெரிய மணிமண்டபம் கட்டுவது, அய்க்கிய நாடுகள் மன்றத்தை அம்பேத்கரின் 125 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடச் செய்தது என்று மோடி பட்டியலிட்டார்.

மோடி தலித்துகளின் காவலரா? மோடி பிரதம ராவதற்கு இரண்டு ஆண்டுகளுக்குமுன் 2012 செப்டம் பர் 22, 23 ஆகிய நாள்களில் குசராத்தில் சுரேந்திர நாத் மாவட்டம், தங்காத் என்ற ஊரில் மூன்று தலித் இளைஞர்களைக் காவல்துறையினர் சுட்டுக் கொன்ற னர். அப்போது மோடி அவ்வூரிலிருந்து 17 கி.மீ. தொலைவில் விவேகானந்தர் இளைஞர் இதர யாத்தி ரையில் பங்கேற்றிருந்தார். தலித் இளைஞர்கள் சுடப் பட்ட ஊருக்கு வரவில்லை; அதுகுறித்து ஒரு சொல்லும் பேசவில்லை. அதுதான் உண்மையான மோடியின் உள்ளம்.

5.8.2016 அன்று உனாவிலிருந்து புறப்பட்ட பேரணியை ஊடகவியலாளரும், வழக்குரைஞரும், சமூக செயற்பாட்டாளருமான 35 அகவையினரான ஜிக்னேஷ் மெவானி என்பவர் ஒருங்கிணைப்பாளராக இருந்து நெறிப்படுத்தினார். இந்த நடைப்பயணத்தைச் ''சுதந்தரத்துக்கான நடைப்பயணம்'' (ஆசாத் கூன்) என்று அழைத்தனர். ஜிக்னேஷ் மெவானி, ''எங்களுக் குச் சுதந்தரம் கொடு; பசுவின் வாலை நீங்களே வைத் துக் கொள்ளுங்கள்; எங்களுடைய நிலத்தை எங்களி டம் கொடுங்கள்'' (you keep the cow's tail; give us our land) போன்ற முழக்கத்தை முன்வைத்தார்.

கிராமங்களில் தலித்துகள் இப்பேரணியைப் பெரு மிதம் பொங்க வரவேற்றனர். கிராமங்களில் செய்யப் பட்ட பரப்புரைகளின் போது, சாதி இந்துக்களும் வேடிக் கைப் பார்த்தனர். ஜிக்னேஷ் மெவானி உரையாற்றிய எல்லா ஊர்களிலும் சாதி இந்துக்களை நோக்கி, ''நாங் களும் உங்களைப் போன்ற மனிதர்கள்தாமே; உங்கள் உடலில் இருப்பது போன்ற இரத்தம்தானே எங்கள் உடலிலும் ஓடுகிறது. ஏன் எங்களைச் சமத்துவமாக நடத்த மறுக்கிறீர்கள்?'' என்று அமைதியான முறையில் வினவினார்.

1927ஆம் ஆண்டு மகத் குளப் போராட்டக் காலத்தின் போது மேதை அம்பேத்கரும் சாதி இந்துக்களை நோக்கி, ''உங்களுடைய மதம்தான் எங்களுடைய மதம் எனில், உங்களுடைய உரிமைகளும் எங்களு டைய உரிமைகளும் சமமாக இருக்க வேண்டும் அல்லவா'' என்று வினவினார்.



*அகமதாபாத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்*

பேரணியின் வழிநெடுகிலும் 'சுதந்தரம், சுதந்தரம்' (ஆசாத், ஆசாத்) என முழங்கி வந்தனர். அதே போன்று செத்த மாடுகளை இனி அப்புறப்படுத்த மாட்டோம் என்று முழங்கினர். 1927 மார்ச்சு 19, 20 நாள்களில் மகதில் அம்பேத்கர் நடத்திய மாநாட்டில் ''இறந்த விலங்கு களைச் சாதி இந்துக்களே அப்புறப்படுத்திப் புதைத்துக் கொள்ள வேண்டும்'' என்று தீர்மானம் இயற்றப் பட்டது. ஆனால் செத்த மாடுகளை அப்புறப்படுத்தும் பணியை இந்தியா முழுவதும் தலித்துகளே செய்து வருகின்றனர். அவற்றின் தோலை உரிக்கும் இழிந்த வாழ்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

துப்புரவு தொழிலாளர்களில் 90 விழுக்காட்டுக்கும் மேற்பட்டோர் இன்றளவும் தலித்துகளாகவே இருக்கும் நிலையில், அவர்களுக்குச் சுதந்தரம் கிடைத்திருப்ப தாக அவர்களால் நினைக்க முடியுமா? மற்றவர்களால் அவ்வாறு துணிந்து கூறமுடியுமா? இப்போதும் இழி வான-தூய்மையற்ற ஏவல் தொழில்களைத் தலித்து கள் மட்டுமே செய்வது ஏன்? சாதிக்கொரு சுடுகாடு என்று இருந்தாலும், எந்தச் சாதிக்காரன் செத்தாலும் அவனைப் புதைக்கப் பள்ளம் தோண்டுவதும், பிணத் தைக் குழியில் வைத்தபின் மண் மூடுவதும், எரிப்ப தாயின் அதற்கான பிண எரிமேடையை உருவாக்கு வதும், சாம்பலாகும் வரை அருகில் காவலாக நின்று எரிக்கும் கொடுமையும் இழிவும் நீடிப்பது ஏன்? சாதிக் காரர்களே சாதியாளின் உடலை அடக்கம் செய்து கொள்ளும் நிலை ஏன் இன்னும் ஏற்படவில்லை?

அகமதாபாத்திலிருந்து புறப்பட்ட தலித் தன்மான எழுச்சிப் பேரணி 15.8.2016 அன்று உனா நகரை அடைந்தது. உனாவின் சுற்று வட்டாரத்தில் நூற்றுக் கும் மேற்பட்ட கி.மீ. தொலைவில் உள்ள ஊர்களி லிருந்தும் பேரணியின் முடிவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள பல ஆயிரம் தலித்துகள் வந்திருந்தனர். சமூக செயற்பாட்டாளர்கள், முசுலீம் களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். அம்பேத்கரின் உருவப்படத்தைக் கையில் ஏந்தியவாறு 'ஜெய்பீம்',

'ஆசாத், ஆசாத்' என்று விண்ணதிர முழக்கமிட்டனர்.

15.8.2016 அன்று உனா நகரில் நான்கு தலித் இளைஞர்கள் கொடுமையாகத் தாக்கப்பட்ட இடத்தில் நடப்பட்ட உயரமான கம்பத்தில் ரோகித் வெமுலாவின் தாய் இராதிகாவும், தாக்கப்பட்ட நான்கு தலித் இளைஞர்களில் ஒருவரின் தந்தையான பாலுபாய் சர்வய்யாவும் இந்தியாவின் தேசியக் கொடியை 'ஜெய்பீம்' என்கிற முழக்கத்திடையே ஏற்றினர். அப்போது இராதிகா வெமுலா பேசிய போது, "ரோகித்தின் இறப்புக்கு எனக்கு நீதி கிடைக்கவில்லை. என் மகனுக்கு நேரிட்டது போன்ற நிலை இனி எதிர்காலத்தில் எந்தவொரு தலித்துக்கும் ஏற்படாதவாறு நாம் செயல்பட வேண்டும்" என்று அறைகூவல் விடுத்தார். சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் மாணவர் தலைவர் கன்னையா குமார், "குசராத் மாநிலம் முன்னோடி என்கிற முகத்திரையைத் தலித் மக்களின் இம்மாபெரும் பேரணி கிழித்துவிட்டது" என்றார். அக்கூட்டத்தில், "செத்த மாடுகளை அகற்றுவதில்லை; அவற்றின் தோலை உரிப்பதில்லை; மனிதக் கழிவை அகற்றுவதில்லை" என்று தலித்துகள் உறுதிமொழி எடுத்தனர். குசராத் அரசு தலித்துகளின் வாழ்வாதாரத்துக்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் அய்ந்து ஏக்கர் நிலத்தை ஓராண்டிற்குள் தரவேண்டும்; இல்லாவிடில் இரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் என்று அக்கூட்டத்தில் அறிவிக்கப் பட்டது.

முற்றிலுமாகத் தலித் அரசியல் கட்சிகளையோ, மற்ற அரசியல் கட்சிகளையோ சாராமல், போராடினால்தான் ஒரு தப்படியேனும் முன்னேற முடியும் என்பதை குசராத்தின் தலித் தன்மானப் பேரணி உணர்த்துகிறது. 1942இல் நாகபுரியில் தலித்துகள் மாநாட்டில் அம்பேத்கர் விடுத்த "கற்பி, போராடு, ஒன்று சேர்" என்கிற கோட்பாட்டின்படி தலித்துகள் செயல்பட்டனர். எதிர்காலத்திற்கும் இதையே முன்னோடியாகப் பின்பற்ற வேண்டும் என்பதை தலித் மக்களின் ஒன்றுபட்ட பேரணி உணர்த்துகிறது.

சங்பரிவாரங்களும் பா.ச.க.வும் அயோத்தியில் பாபர் மசூதி - இராமஜென்மபூமி பிரச்சனையைப் பல ஆண்டுகள் அரசியல் கருவியாகப் பயன்படுத்தி இந்தியா முழுவதும் ஆழமாக வேரூன்றி வளர்ச்சி பெற்றன. இராமர் கோயிலின் சாயம் வெளுத்துவிட்டதால் கோமாதா வாலைக் கெட்டியாகப் பிடித்துத் தொங்கிக் கொண்டு "சொர்க்கம் போவது" போல், நடுவண் அரசின் ஆட்சியை மட்டுமின்றி எல்லா மாநிலங்களின் ஆட்சிகளையும் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளன.

'பசு அரசியலுக்கு' ஒரே தீர்வு - முதலாவது அரசமைப்புச் சட்டத்தை எழுதிய பெனகல் நரசிங்கராவ் எழுதிய வரைவிலோ, மேதை அம்பேத்கர் உருவாக்கிய அரசமைப்புச் சட்ட வரைவிலோ 'பசுப் பாதுகாப்பு' என்பது இடம்பெறவில்லை. அரசமைப்புச் சட்ட அவையில் இருந்த சில இந்துவெறியர்களின் கட்டாயத்தால்,



*இராஜஸ்தானில் கோசாலையில் பட்டினியால் மடியும் பசுக்கள்*

அரசின் கொள்கை வழிகாட்டும் நெறிப்பகுதியில் விதி 48இல் பசுப் பாதுகாப்பு - பசுவைக் கொல்லக் கூடாது என்பது இடம்பெற நேரிட்டது.

முள்ளை முள்ளால் எடுப்பதுபோல், பசுப் பாதுகாப்பு எனும் இந்துத்துவ முழக்கத்தை விஞ்சும் வகையில் விதி 48அய் நீக்குக என்று கோரித் தீவிரமாகப் போராட வேண்டியது மதச்சார்பற்ற முற்போக்கு சனநாயக இயக்கத்தின் பல்துறை அறிஞர்களின் முதல் கடமையாகும். ஜெய்ப்பூரில் 6.8.2016 அன்று கோசாலையில் 500 பசுக்கள் பட்டினியால் செத்தன. கோசாலையில் பசுக்களை அடைத்துக் கொல்லும் இந்துத்துவ வெறியர்களே உண்மையான கொலைகாரர்கள்.


## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **Dr. சிவகுமார் சிவசாமி** |
| பிறந்தநாள் | : | 23-06-1982 |
| உயரம் & எடை | : | 163 cms. (5.5) & 57 Kgs. |
| கல்வித் தகுதி | : | B.A., M.L., Ph.D., |
| வேலை | : | Lecturer, Government Law College, Chennai |
| தந்தை | : | K. சிவசாமி<br>Primary School HM Retd.<br>Mobile : 97517 76927 |
| தாய் | : | S. தமிழரசி ராஜலட்சுமி<br>(Home Maker) |
| சொந்த வீடு | : | Concrete Building-2 &<br>20 Acres Land &<br>5 Wells with Pumpset Motors |
| நிரந்தர முகவரி | : | காருகுடி கிராமம்,<br>முருக்கன்குடி அஞ்சல்,<br>குன்னம் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம்-621133. |
| தொடர்புக்கு | : | +91 - 98408 21122 |
| E-Mail ID | : | sivakumarsjj@yahoo.co.in |

# பா.ஜ.க. மட்டும்தான் எதிரியா?

- இராமியா

வ.உ.சிதம்பரனார் ஒரு பழுத்த ஆத்திகர்; இந்து மதத்தைச் சேர்ந்தவர்; சைவ சமயத்தின் சாராம்சத்தை விளக்கும் அடிப்படை நூலாகக் கருதப்படும் சிவஞான போதத்திற்கு உரை எழுதிய இந்து தத்துவ மாமேதை. சமூக நீதி என்று வரும் போது, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலுவாக ஆதரித்தவர். அதற்கு எதிராக வைக்கப்படும் வாதங்கள் யுக்திக்கும் அனுபவத்திற்கும் எதிரானது என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துக் காட்டியவர். சேலத்தில் 5.11.1927 அன்று நடந்த அரசியல் மகாநாட்டிற்குத் தலைமை ஏற்று, தனது அரசியல் பெருஞ் சொல்லாக ஆற்றிய வ.உ.சி.யின் இவ்வுரை இருட்டடிப்புச் செய்யப்பட்டது; தொடர்ந்து இருட்டடிப்பு செய்யப்பட்டுக் கொண்டும் இருக்கிறது. அவர் இந்து மதத்தின் மிகப் பெரிய தத்துவ மேதை என்பதற்காக-அவருடைய கருத்தை வெளியிடவும், பரப்பவும் இந்து மதத்தைக் காப்பாற்றுவதாகக் கூறுவோர் ஆயத்தமாக இல்லை.

ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாட், பி.இராமமூர்த்தி மற்றும் சில / பல பொதுவுடைமைக் கட்சியினர் நாத்திகர்கள். சுரண்டலின் அனைத்து வடிவங்களையும் எதிர்ப்பதாகக் கூறிக் கொள்பவர்கள். ஆனால் சாதிய / வருணக் கொடுமைகளுக்கு முடிவு கட்டும் விகிதாச்சாரப் பங்கீட்டைப் பற்றி அடாவடியாக மவுனம் சாதிப்பவர்கள். இவர்கள் நாத்திகர்கள் என்பதற்காக, இந்து மதவாதிகள் இவர்களுடைய மவுனத்தை ஆதரிக்காமல் இருப்பது இல்லை.

காந்தியாரும், கோட்சேயும் சனாதனவாதிகள். இருவருமே பகவத் கீதையை வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டவர்கள்; வருணாசிரம அதர்மத்தைத் தூக்கிப் பிடித்தவர்கள். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை அரவணைத்துக் கொள்வதன் மூலம்தான், பிறவி அடிப்படையிலான வருணாசிரம அதர்மத்தை உயிர்ப்புடன் வைத்துக் கொள்ள முடியும் என்பது காற்தியாரின் வழியாக இருந்தது. உழைக்கும் மக்களான சூத்திரர்களை வன்முறையால் அடக்கி, ஒடுக்கி உயர்சாதிக் கும்பலினருக்குச் சேவை செய்ய வைக்க வேண்டும் என்ற மனு அநீதி வெளிப்படையாகக் கோலேச்சிய பழைய காலத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும் என்பது கோட்சேயின் நோக்கமாக இருந்தது. இந்த முரண்பாடுதான் காந்தியார் கொல்லப்படுவதற்குக் காரணமாக அமைந்தது.

காந்தியார் கொலை செய்யப்பட்டது தொடர்பாக, கோட்சேயும், நாராயண் ஆப்தேயும் தூக்கிலிடப்பட்டனர். மற்ற சிலருக்குச் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. காந்தியார் கொலைக்குப் பெருந்திட்டம் (Master Plan) வகுத்த வீர் சவார்க்கர் போன்றோர் விசாரிக்கப்படவே இல்லை.

கோட்சே குழுவினர் காந்தியாரைக் கொல்லப் பல ஆண்டுகள் முயன்றும், காந்தியாரை நெருங்கும் வழி கிடைக்காமல் தவித்துக் கொண்டு இருந்தனர். ஆனால் இட ஒதுக்கீட்டுக் கொள்கைச் செயல்பாட்டை, காந்தியாரால் மறுக்க முடியாதபடி விளக்கம் அளித்த ஓமந்தூராரை- எதிர்கொள்ள முடியாத நிலை உருவான பின், கேட்சே குழுவினருக்கு காந்தியாரை நெருங்கும் வாய்ப்புக் கிடைத்தது. வீர் சவார்க்கரும், கோட்சே குழுவினர் காந்தியை நெருங்க வழி ஏற்படுத்திக் கொடுத்தவர்களும் விசாரணை வளையத்திற்கு உள்ளே வராமலேயே தப்பிக்க முடிந்ததில் இருந்து, மனு அநீதி வெளிப்படையாக ஆட்சி செய்ய வேண்டும் என்ற கருத்தியலைக் கொண்டவர்கள வலுவாக இருந்ததை / இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

**அதாவது ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை அரவணைத்துக் கொள்வதன் மூலம்தான்-பிறவி அடிப்படையிலான வருணாசிரம அதர்மத்தை உயிர்ப்புடன் வைத்துக் கொள்ள வேண்டும் / முடியும் என்ற கருத்தும், மனு அநீதியை வெளிப்படையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியே தீர வேண்டும் என்ற கருத்தும்தான் முரண்பட்டுக் கொண்டு முன்னணியில் நிற்கின்றன.**

வ.உ.சி.யின், நீதிக் கட்சியின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கருத்து இன்று களத்தில் இருக்கும் இடம் மிகப் பலருக்குத் தெரியவில்லை. ஆனால் இக்கருத்து மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினால் மேலும் செழுமைப்படுத்தப்பட்டு விகிதாச்சாரப் பங்கீடு என்பதாக வளர்த்து எடுக்கப்பட்டு உள்ளது. இக்கொள்கையின்படி, கல்வி, அரசு மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைத்து நிலை (Class I, Class II, Class III and Class IV) வேலைகள், எரிவாயு, பெட்ரோல் விநியோகம் போன்ற முகமை (Agency) அளிப்பது, இன்னும் அரசியல், பொருளாதாரம், சமூக நடவடிக்கைகள் அனைத்திலும், எல்லா மதங்களிலும் உள்ள முற்பட்ட வகுப்பினர், எல்லா மதங்களிலும் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோருக்கு மக்கள் தொகையில் அவரவர் விகிதப்படி பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

இப்படிப் பகிர்ந்து அளிக்கப்படுவதில் சீர்மை இல்லாவிட்டால், உள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அதாவது ஒரு பிரிவில் ஒரு உள்சாதியினர், தொடர்ந்து அவர்களுடைய மக்கள் தொகை விகித்தில் பங்கு பெற முடியாமல் போனால், அதை உள் ஒதுக்கீடு மூலம் சமன் செய்ய வேண்டும்.

**இவ்வாறு செய்வதால் அனைத்துப் பிரிவிலும் உள்ள திறமைசாலிகள் உயர்நிலை வேலைகளை அடைய முடியும். அனைத்துப் பிரிவிலும் உள்ள குறைந்த அறிவுத் திறன் உடையோர் அடுத்த நிலை வேலைகளை அடைய முடியும்.**

இப்போது நடப்பது போல் உயர்சாதிக் கும்பலினரில் உள்ள குறைந்த அறிவுத்திறன் உடையோர் உயர்நிலை வேலைகளைப் பெறுவது தடுக்கப்பட்டு விடும். அதே போல் அறிவுத் திறன் மிகுந்து இருந்தாலும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் உயர்நிலை வேலைகளைப் பெற முடியாமல் செய்யும் தடைகள் நீங்கி விடும்.

இன்று உயர்நிலைகளில் / ஆதிக்கம் செலுத்தும் வேலைகளில் பார்ப்பனர்கள் அளவுக்கு மீறி நிரம்பி வழிவதால், பார்ப்பன ஆதிக்கத்தை வலுப்படுத்தும் / தளர விடாமல் பார்த்துக் கொள்ளும் செயல்களைத் துணிச்சலாக நடை

முறைப்படுத்த முடிகிறது. மென்மையான விவாதத்தில் இருந்து வன்முறையான அடி தடி, கொலை, கொள்ளை என எந்த நடவடிக்கையாக இருந்தாலும், இறுதி முடிவை வடிவமைக்கும் வலிமையும், அதிகாரமும் பார்ப்பனர்களிடமே இருக்கிறது. ஆகவே நாட்டில் நடக்கும் எந்த விதமான நடவடிக்கைகளின் முடிவும் பார்ப்பன ஆதிக்கம் தளர்ந்து விடாமல் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ளப்படுகிறது. இதற்கு ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை அரவணைத்துக் கொள்ளும் வழியை மேற்கொள்வதா அல்லது மனு அநீதியை வெளிப்படையாகக் கையாள்வதா என்பது, சமயத்திற்கு ஏற்றபடி முடிவு செய்யப்படுகிறது. விகிதாச்சாரப் பங்கீட்டு முறை செயல்பட்டு, உயர்நிலைகளில் / அதிகாரம் செலுத்தும் வேலைகளில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள், தங்கள் மக்கள் தொகையின் விகிதாச்சாரப்படி அமர்ந்துவிட்டால், இது போன்ற முறையில்லா முடிவுகள் எடுப்பது முற்றிலும் தடுக்கப்பட்டு விடும். எந்த ஒரு சாதியினரும் முறையற்ற வழிகளில் தங்கள் சாதியினருக்கு ஆதரவாகவும் மற்ற சாதியினருக்கு எதிராகவும் செயல்பட முடியாமல் போய்விடும். ஏனெனில் தங்களுக்குச் சம நிலையில், சம வலிமையில் மற்ற சாதியினரும் அதிகாரத்தில் இருப்பார்கள்.

**ஆகவே விகிதாச்சாரப் பங்கீடு முறையைச் செயல்படுத்துவது தான், இந்தியாவைப் பீடித்து உள்ள சாதி / வருணக் கெடுமைகளை ஒழிப்பதற்கான சரியான வழியாகும்.**

ஆனால் இக்கருத்து பொதுக் கருத்தாக உருவாகி விடக் கூடாது என்ற எண்ணத்தில், பார்ப்பனர்கள் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை அரவணைத்து அடிமைப்படுத்தும் கருத்துக் கும், மனு அநீதியை வெளிப்படையாக ஆட்சியில் அமர்த்தத் துடிக்கும் கருத்துக்கும் இடையிலான முரண்பாட்டைக் கூர்மைப்படுத்தவும், முன்னணியில் நிறுத்தி வைக்கவும் முயல்கின்றனர்.

ராணா அய்யூப் (Rana Ayyub) என்ற பெண் பத்திரிக்கை யாளர் எழுதிய, (மோடி குஜராத் முதல்வராக இருந்த காலத்தில், குஜராத் மக்கள் மீது நடந்த தாக்குதல்களை விவரிக்கும்) குஜராத் கோப்புகள் (Gujarat Files) என்ற புத்தகம், தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது. அதன் வெளியீட்டு விழா 17.8.2016 அன்று சென்னையில் நடந்தது. இதில் கலந்து கொண்டு பேசிய எழுத்தாளர் ஞாநி, வரும் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றால் நாடு ஆழம் காண முடியாத பாதாள நரகத்தில் தள்ளப்பட்டுவிடும் என்று கூறினார். மேலும் இன்று நாட்டில் நடந்து கொண்டு இருக்கும் கொடுமைகள் அனைத்தும் மேலும் வலிமை பெற்று நிலைத்து விடும் என்றும் அவர் கூறினார். அதாவது மனு அநீதியை வெளிப்படையாக ஆட்சியில் அமர்த்தத் துடிக்கும் கருத்தியலுக்கு எதிராக அவர் குரல் கொடுத்து இருக்கிறார். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை அரவணைத்து அடிமைகளாக்கும் கருத்தியலுக்கு எதிராக அவரும் இவ்விழாவில் கலந்து கொண்ட மற்றவர்களும் எதுவும் பேசவில்லை.

சரி! உயர்சாதிக் கும்பலினரின் நோக்கம் எப்படியாயினும் இருந்து விட்டுப் போகட்டும். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் தங்கள் விடுதலைக்கான கருத்தியலை வளர்த்து எடுக்க வேண்டும் அல்லவா? விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனின் 54வது பிறந்த நாள் விழா 17.8.2016 அன்று சென்னையில் கொண்டாடப்பட்டது. ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் விழாவாகக் கருதப்படும் அவ்விழாவில் அவரும், அக்கட்சியின் செயலாளர் இரவிக் குமாரும், மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் ஜி.இராமகிருஷ்ண னும், ம.தி.மு.க. தலைவர் வைக்கோவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஆர்.முத்தரசனும் கலந்து கொண்டனர். பா.ஜ.க. மத்திய ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து மத வெறியும், சாதி வெறியும் அதிகரித்து உள்ளன என்றும், அவர்கள் பிரித்து ஆளும் சூழ்ச்சியைக் கையாண்டு மக்களிடையே பிளவை ஏற்படுத்துவதாகவும் அவ்விழாவில் கலந்து கெண்டவர்கள் கூறினார்கள். பா.ஜ.க.வை ஆட்சியில் இருந்து இறக்கிவிட்டால் போதும் என்பது பேலவே இவர்களது எண்ணம் இருக்கிறதே ஒழிய, இந்திய நாட்டின் பிரச்சினைகள் அனைத்துக்கும் மூல காரணமான பார்ப்பன ஆதிக்கத்தைப் பற்றி யாரும் பேசவில்லை. மனு அநீதியை வெளிப்படையாக ஆட்சியில் அமர்த்தத் துடிக்கும் கருத்தியலுக்கும், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை அரவணைத்து அடிமைப்படுத்தும் கருத்தி யலுக்கும் இடையே நடக்கும் போரில், அரவணைக்கப்பட்டால் அடிமைகளாக இருக்க ஆயத்தமே என்ற ரீதியில் தான் இவர்களுடைய அணுகுமுறை இருக்கிறது.

இது ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் இன்னும் தங்கள் விடு தலைக்கான விழிப்புணர்வை அடையவில்லை என்பதையே காட்டுகிறது. பா.ஜ.க.வை ஆட்சியில் இருந்து அகற்றுவது மட்டுமே போதாது.

விகிதாச்சாரப் பங்கீட்டு முறையை முழுமையாகச் செயல் படுத்துவது தான், இந்திய நாட்டைப் பீடித்து உள்ள வருணக் கொடுமைகள் ஒழிந்து ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் விடுதலை அடையும் ஒரே வழி ஆகும்.


## நூல் அறிமுகம்

## உதயை மு. வீரையன் கவிதைகள்

"கவிஞர் உதயை மு. வீரையன் வாழ்வியல் நிலைகள் அனைத்திலும் காலூன்றிக் கவிதை படைத்துள்ளார். செய்திகளைப் புதிய புதிய கோணங்களில் சொல்வதில் இவர் வல்லவராயுள்ளார். பகுத்தறிவு நிலைபெற, மூடப்பழக்கவழக் கங்கள் முறிபட, சாதிமத பேதமற்ற சமுதாயம் நிலவிட, எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான சமவுடைமை தோன்றிட, தொழிலாளர் நலம் ஓங்கிட, ஆதிக்கச் சக்திகள் அழிய, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனும் குரல் ஒலித்திட இந்தக் கவிதைகள் வழிவகுத்துள்ளன."

இந்நூலின் அணிந்துரையில் தமிழறிஞர் சிலம் பொலி செல்லப்பனார் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்நூல் தமிழறிந்தோர் ஒவ்வொருவர் கைகளிலும் தவழ்ந்திட வேண்டும். பள்ளி, கல்லூரி மாணவர்கட்கும் பாடநூலாய்த் திகழ்ந்திட வேண்டும் என்பதும் அவரது விருப்பமாகும்.

**நூல் கிடைக்குமிடம் : மணிவாசகர் பதிப்பகம்**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.

தொலைப்பேசி : 044-25361039

**பக்கங்கள் : 432 ★ விலை ரூ.225/-**

**கட்டுரைத் தொடர்-43**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பெண்கள் தீவிர மாகப் பங்கேற்றனர். இனி பெரியாரை கைது செய்தால் தான் போராட்டத்தை ஒடுக்க முடியும் என்று கருதிய முதலமைச்சர் இராசாசி, பெரியாரைக் கைது செய்ய முடிவு செய்தார். 1-1-1938 அன்று பெரியாருக்கு காவல் துறை கைது வாரண்ட் பிறப்பித்தது. "13.11.1938இல் நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் பேசி அவர்களைக் கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டினார். மறு நாள் 14.11.1938இல் பெண்கள் போராட்டக் களத்தில் கலந்துகொள்ள வந்தபோது அவர்களிடையே பேசி அவர்களை மறியலில் ஈடுபடத் தூண்டினார்" என்ற குற்றச்சாட்டுகளின் பேரில் கைது வாரண்ட் பிறப்பிக் கப்பட்டது. வழக்கு விசாரணை 5.12.1938 அன்றும் 6.12.1938 அன்றும் நடைபெற்றது.

**பெரியார் ஈ.வெ.ரா. வழக்கு**
**சர்க்கார் தரப்பு சாட்சியம்**
**பெரியார் வாக்குமூலம்**
**3 வருஷம் கடுங்காவல்-2000 ரூபாய் அபராதம்**

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் 14ஆவது மகாநாட்டின் தலைவரும், சுயமரியாதை இயக்கத் தலைவருமான பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் மீது, சென்னை அரசாங்கத்தாரால் 117ஆவது 7(1)ஏ செக்ஷன் கீழ் கொண்டுவரப்பட்ட வழக்கு, இன்று காலை 11.25 மணிக்கு சென்னை ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட்டு 4ஆவது நீதிபதி தோழர் மாதவராவ் அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் காலை 10.45 மணிக்கே படுக்கையுடன் தயாராகக் கோர்ட்டிற்கு வந்துவிட்டார். வழக்கைக் கவனிக்கத் தோழர்கள் சர்.ஏ.டி. பன்னீர் செல்வம், ஈ.வெ. கிருஷ்ணசாமி, டி. சுந்தரராவ் நாயுடு, பி.ஏ., பி.எல்., கி.ஆ.பெ. விசுவநாதம், எஸ்.வி. ராஜன், பி.ஏ., பி.எல்., தாமோதரம் பிள்ளை, ராவ் சாகிப், தர்ம லிங்கம் பிள்ளை, டி.ஆர். கோதண்டராம முதலியார், பி.ஏ., பி.எல்., டி. நல்லசிவம் பிள்ளை, பி.ஏ., பி.எல்., சி.பாசுதேவ், பி.ஏ., பி.எல்., திருவொற்றியூர் சண்முகம் பிள்ளை, சேலம் எ. சித்தையன், ஒ.எஸ். சதக் தம்பி மரைக்காயர், ஜமான் இப்ராஹிம், டி.எஸ். முகம்மது இப்ராகிம், சாமி சிதம்பரனார், திருப்பத்தூர் சேர்மன் துரைசாமி நாயுடு, ஈரோடு வி. வேணுகோபால், பி.ஏ., பி.எல். ஆகியோர் வந்திருந்தனர்.

கோர்ட்டில் எல்லோரையும் அனுமதிக்காததால் ஏராளமான தமிழ் மக்கள் கோர்ட்டிற்கு வெளியே பீச் ரோட்டில் நின்று வழக்கின் முடிவை ஆவலுடன் எதிர்நோக்கினர். பெரி யார் ஈ.வெ.ரா. வந்திறங்கியதும் மக்கள் ஆரவாரித்து வாழ்த்தொலி செய்தனர்.



**பெரியாருக்குப் பிராசிக்கியூஷன் மரியாதை**

நீதிபதி 11.25 மணிக்கு வந்து வழக்கை ஆரம்பித் தார். கிரவுன் பிராசிகூடர் தோழர் டி.எஸ். அனந்த ராமன் சாட்சிகளை விசாரித்தார். கோர்ட் டார் பெரியாரைக் கூப்பிட்டதும், பெரியார் ஈ.வெ.ரா. எழுந்து நின்றார். உடனே கிரவுன் பிராசிக்கூட்டர் நீதிபதியிடம் தோழர் நாயக்கரவர்கள் உட்கார்ந்து கொள்ள அனுமதிக்க வேண்டு மென்று வேண்டினார். பின்னர் பெரியாரும் உட் கார்ந்து கொண்டார்.

ஆரம்பத்திலேயே ஈ.வெ.ரா. அவர்கள் தான் எதிர் வழக்காடப் போவதில்லை என்றும் தனக்கு யாரும் வக்கீல் இல்லை என்றும் கூறிவிட்டார்.

**முதல் சாட்சி வாக்குமூலம்**

சர்க்கார் தரப்பின் முதல் சாட்சியான சுருக்கெழுத்து சப்-இன்ஸ்பெக்டர் தோழர் கேசவ மேனன் தனது சாட்சியத்தில் கூறியதாவது :-

"நான் சர்க்காரின் இன்டெலிஜென்ஸ் டிபார்ட் மெண்டில் தமிழ் சுருக்கெழுத்து இன்ஸ்பெக்டராக சென்ற 5 வருடங்களாக இருந்து வருகிறேன். எனக்குத் தோழர் ஈ.வெ.ராமசாமியை நன்றாகத் தெரியும். அவரது சொந்த ஊர் ஈரோடு. அவர் 1923ஆம் வருஷம் வரை காங்கி ரசிலிருந்தார்.

பின்னர் சுயமரியாதை இயக்கம் என்ற ஒரு இயக் கத்தை ஆரம்பித்தார். அவ்வியக்கம் பார்ப்பனரல்லா தாரின் சமூக முன்னேற்றத்திற்காக உழைக்கவும் பார்ப்பனரை எதிர்க்கவும் ஆரம்பிக்கப்பட்டது. ஜஸ்டிஸ், சுயமரியாதை இவை இரண்டுமே ஒரே கொள்கை கொண்டுள்ளவை.

21.4.38ந் தேதிய 911 நெ. இந்திக் கட்டாயப்பாட சர்க்கார் உத்தரவிற்குப் பிறகு இந்தி எதிர்ப்பு ஆரம்பிக் கப்பட்டது. அந்த உத்தரவிற்குப் பிறகே ஒரு பகுதி தமி ழர்கள் இந்தி எதிர்ப்பியக்கத்தை ஆரம்பித்து கட்டாயப் பாட உத்தரவை ரத்து செய்யுமாறு முதன் மந்திரியை வற்புறுத்தி வருகின்றனர். பின்னர் சென்னை நகரத்தி லும், சென்னைக்கு வெளியிலும் இந்தியைக் கண்டித் துப் பல கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

**சென்னையில் முதல் கூட்டம்**

சென்னையில் இந்தி எதிர்ப்பு முதல் கூட்டம் 31.5.1938 அன்று தியாகராய நகரில் நடைபெற்றது. இந்தி எதிர்ப்பிற்கென கட்டப்பட்ட புதுக்கட்டடத்தில் (நிலையம் ந.நி.) அக்கூட்டம் நடைபெற்றது. கூட்டம் மாலை 6.30 முதல் 9.30 வரை நடைபெற்றது. சர், கே.வி. ரெட்டி நாயுடு தலைமை வகித்தார். தோழர் எஸ். முத்தையா முதலியார் தமிழ்க்கொடி ஏற்றினார். நான் அக்கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அன்று எதிரியும், முதல் சர்வாதிகாரி-சி.டி. நாயகமும் மற்றும் பல இந்தி எதிர்ப்புத் தலைவர்களும் பேசினர். பல்லடம் பொன்னுசாமியை அவர் நாளை உண்ணாவிரதமிருக்கப் போவதாக, தோழர் சி.டி. நாயகம் கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தினார். அடுத்த நாள் காலை 6.30 மணிக்குப் பல்லடம் பொன்னுசாமி, முதன் மந்திரி வீட்டின் முன் உண்ணாவிரதமிருந்தார். அப்படியே 2 நாள்கள் உண்ணாவிரதமிருந்தார். 3.6.1938 அன்று அவர் கைது செய்யப்பட்டார். அதன் பிறகு முதல் 'பேட்ச்' தொண்டர்கள் மறியலுக்காக வந்தனர். அவர்களும் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். இதேபோல 1.7.1938 அன்று இந்து தியாலாஜிக்கல் பள்ளியின் முன்பும் தொண்டர்கள் மறியல் செய்யத் தொடங்கினர். 3 மாதம் வரை முதன் மந்திரி வீட்டின் முன் மறியல் நடந்து வந்தது. தொண்டர்கள் அவ்வப்போது கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். இரண்டு இடங்களிலுமாக நவம்பர் கடைசி வரை கைது செய்யப்பட்டவர்கள் சுமார் 400. இதில் முதன் மந்திரி வீட்டின் முன்பு கைதியானவர்கள் சுமார் 165. தியாகராய நகரிலிருந்த இந்தி எதிர்ப்பு நிலையம் பிரிக்கப்படும் வரை அங்கேயே மறியல் தொண்டர்கள் தங்கியும், உணவு உண்டும் வந்தனர்.

மே 28ஆம் தேதி திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கமிட்டிக் கூட்டத்தில், எதிரி இந்தி எதிர்ப்புக் கமிட்டியின் ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்நாட்டில் 69 பள்ளிகளிலும், ஆந்திராவில் 54 பள்ளிகளிலும், மலையாளத்தில் 11 பள்ளிகளிலும் இந்தி கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றது. கட்டாய இந்திக்கு மலையாளத்திலும், ஆந்திராவிலும் எதிர்ப்பில்லை. எதிரி முதன்முதல் 31.5.38 அன்று சென்னையில் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தார். பின்னர் இந்தி எதிர்ப்புக் கமிட்டியின் ஆதரவில் நடைபெற்ற பல கூட்டங்களில் பேசியிருக்கிறார். ஈரோட்டிலிருந்து வெளிவரும் 'விடுதலை' தினசரியும், 'குடிஅரசு' வார வெளியீடும் எனக்குத் தெரியும். தோழர் ஈ.வெ. கிருஷ்ணசாமி அவைகளின் வெளியிடுவோரும் ஆசிரியருமாவர், 13.11.38 ஒற்றைவாடைக் கொட்டகையில் நடைபெற்ற தமிழ்நாட்டுப் பெண்கள் மகாநாட்டிற்கு நான் சென்றிருந்தேன்.

**நீதிபதி கேள்விக்குப் பெரியார் பதில்**

நீதிபதி : நீங்கள் ஏதாவது சாட்சியைக் கேட்க வேண்டுமா?

ஈ.வெ.ரா. : அவர் கூறியது என் காதில் சரியாக விழ வில்லை. இருந்தாலும் இந்தக் கோர்ட்டில் நியாயம் கிடைக்குமென்ற நம்பிக்கையில்லை, எனவே சாட்சியை நான் ஒன்றும் கேட்க வேண்டியதில்லை. கேட்பதாலும் ஒன்றும் பயனில்லை.

**2ஆவது சாட்சி வாக்குமூலம்**

பின்னர் 2ஆவது சாட்சியாக தோழர் எ. கிருஷ்ணய்யர் (சுருக்கெழுத்து சப்-இன்ஸ்பெக்டர்) விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :-

நான் சென்ற 20 வருஷங்களாக சுருக்கெழுத்து சப்-இன்ஸ்பெக்டராக இருந்து வருகின்றேன். சென்னையில் 13.11.1938 அன்று நடந்த தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டிற்குச் சென்றிருந்தேன். மாநாடு மாலை 2.45-க்கு ஆரம்பித்து இரவு 8.15-க்கு முடிவுற்றது. நான் கடைசி வரை இருந்தேன். மாநாட்டிற்கு வந்திருந்த 1500 பேரில் 700 பெண்கள் ஆகும். நடவடிக்கைகள் தமிழிலேயே நடைபெற்றன. தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் அம்மாநாட்டிற்கு வந்திருந்தார். அம்மாநாட்டில் எதிரி பேசினார். அவர் பேசும்பொழுதும் நான் அங்கிருந்தேன். நான் தமிழ்ச் சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்து பின்னர் தமிழ் நெட்டெழுத்தில் எழுதினேன். அவர் பேச்சை ஒழுங்காகவே குறிப்பெடுத்தேன். மறுநாள் 14.11.1938 பெத்துநாயக்கன் பேட்டை காசி விசுவநாதர் கோயில் முன் சாமி-அருணகிரிநாதர் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கும் சென்றிருந்தேன். அக்கூட்டம் மாலை 6.15-க்கு ஆரம்பித்து 9.15-க்கு முடிவுற்றது. அங்கு எதிரியும் பேசினார். அவர் பேச்சை சிறிதும் விடாது குறிப்பெடுத்தேன். அவரது பேச்சுகள் பொது மக்களிடையே மிகுந்த உணர்ச்சியை உண்டாக்கின. பின்னர் சாட்சி பெரியார் ஈ.வெ.ரா.வின் 2 பிரசங்கங்களையும் கோர்ட்டில் படித்தார்.

நீதி : இதில் ஏதாவது தவறிருக்கின்றனவா? சாட்சியை ஏதாவது கேட்க வேண்டுமா?

ஈ.வெ.ரா.:பல தவறுகள் காணப்படுகின்றன. ஆனால் அதுபற்றி நான் ஒன்றும் கேட்க விரும்பவில்லை.

**3ஆவது சாட்சி வாக்குமூலம்**

பின்னர் 3ஆவது சாட்சியாகத் தோழர் ரஞ்சித் சிங் (சுருக்கெழுத்து இன்ஸ்பெக்டர்) விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :

நான் சார்க்காரின் இன்டெலிஜென்ஸ் செக்ஷனில் சுருக்கெழுத்தாளனாக இருக்கிறேன். 13.11.1938இல் நடைபெற்ற தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டிற்குச் சென்றிருந்தேன். கடைசிவரை இருந்தேன். அம்மாநாட்டிற்கு மறுநாள் 14ந் தேதியன்று பெண்கள் இந்து தியாலாஜிக்கல் பள்ளி முன் மறியல் செய்தனர். அப்பெண்கள் கைது செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டனர். அவர்கள் அபராதம் செலுத்தவில்லை. இந்தி எதிர்ப்புக் கழக ஆதரவில் அன்று மாலை காசி விசுவநாதர் கோயில் முன்பு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பின்னர் கிரவுன் பிராசிக்கூடர் இந்தப் பிரசங்கங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டியிருப்பதால் வாய்தா கொடுக்க வேண்டுமென்று கேட்டார்.

நீதிபதி : பிரசங்கங்கள் விளக்கமாக இருப்பதால் இதற்கு வாய்தா வேண்டியதில்லை, சில மணிநேரங் களில் மொழிபெயர்த்துவிடலாம் என்று கூறினார்.

பின்னர் சர்க்கார் சாட்சிகள் மீண்டும் கிரவுன் பிராசிகூடரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர்.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணையில் முதல் சாட்சி கேசவ மேனன் கூறியதாவது:- இந்தி உத்தரவை எடுக்குமாறு முதன் மந்திரியை வற்புறுத்தி முதன் மந்திரி வீட்டின் முன்பும் தியாலாஜிக்கல் பள்ளி முன்பும் மறியல் நடந் தன. அப்பள்ளியில் இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டி ருப்பதால் பையன்களைப் படிக்கவிடாது தடுக்கவே மறியல் நடைபெறுகிறது. அப்படி பையன் கள் போகா விட்டால் பள்ளிக்கூடம் மூடப்படும் என்று கருதியே இம்மறியலால் ஏற்படும் கூச்சல் ஆசிரியர்களையும் வகுப்பு நடத்த முடியாமல் தடைசெய்கிறது.

3ஆவது சாட்சி தோழர் ரஞ்சித் சிங் கூறியதாவது :

1411.1938 அன்று 5 பெண்கள் இந்து தியாலாஜிக் கல் பள்ளி முன் நின்று 'இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!' என்று கூறி மறியல் செய்தனர். இதனால் ஆசிரியரும், பையன்களும் உள்ளே புக முடியாமலும், நடத்திக் கொண்டிருக்கும் வகுப்பு மேலும் நடைபெறாமலும் தடைப்படுகின்றது. வேடிக்கைப் பார்க்க ஆசிரியர்கள் வெளியே வந்துவிடுகின்றனர்.

நீதி:நீங்கள் ஏதாவது வாக்குமூலம் கொடுக்கின்றீர்களா?

ஈ.வெ.ரா. : சிறிது அவகாசம் கொடுத்தால் சாட்சியங் களைப் பார்த்து வாக்குமூலம் கொடுக்கின்றேன்.

நீதி : சாட்சிக் காப்பிகள் மாலை தான் கிடைக்கும். எனவே வழக்கை நாளை காலை 11 மணிக்கு ஒத்தி வைக்கிறேன்.

மீண்டும் வழக்கு நாளை நடைபெறும்.

1.30 மணிக்கு வழக்கு முடிந்து பெரியார் கீழே வரும் வரை வெளியில் ஏராளமான மக்கள் காத்துக் கொண்டே நின்றனர். பெரியார் காரில் ஏறியதும் மக்கள் 'பெரியார் ஈ.வெ.ரா. வாழ்க' என ஆரவாரம் செய்த னர். மக்கள் காட்டிய உணர்ச்சி அளவுகடந்ததாயிருந் தது. கோர்ட்டிலும் வெளியிலும் பலமான போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது.

(மறுநாள் நடவடிக்கை)

சென்னை, டிச.6 - சென்னை அரசாங்கத்தாரால் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மீது 117ஆவது செக்ஷன் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கும் வழக்கு, சென்னை ஜார்ஜ் டவுன் 4ஆவது மாகாண நீதிபதி தோழர் மாத வராவ் முன்பு இன்று காலை 11.30 மணிக்கு மீண்டும் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

**பெரியார் வருகை**

சரியாகப் 11 மணிக்குப் பெரியார், சர். ஏ.டி. பன்னீர் செல்வம், ஈ.வெ.கிருஷ்ணசாமி ஆகியவர்களுடன் படுக்கை சகிதமாகக் கோர்ட்டிற்கு வந்து சேர்ந்தார். கோர்ட்டிற்கு வெளியில் நின்றிருந்த பதினாயிரக்கணக் கான மக்கள் கைதட்டி வாழ்த்தொலி செய்தனர். இன்றும் கோர்ட்டுக்கு அருகில் யாரையும் வரவிடாது பலத்த போலீஸ் பந்தோபஸ்து இருந்தது. நேற்று இரவு 10 மணிக் குத்தான் பெரியாருக்கு சர்க்கார் சாட்சியத்தின் நகல் கிடைத்ததாகையால் கோர்ட்டில் வந்தும் விரைவாக வாக்கு மூலத்தின் எஞ்சிய பகுதிகளை எழுதிக் கொண்டிருந்தார்.

**ரசாக்கான் சாட்சியம்**

ஆரம்பத்தில் கிரவுன் பிராசிக்கூட்டர், சப்இன்ஸ் பெக்டர் தோழர் ரசாக்கானை சர்க்கார் சாட்சியாக விசாரிக்க வேண்டும். அவர் இந்து தியாலாஜிகல் பள்ளி இருக்கும் செக்ஷனின் சப்இன்ஸ்பெக்டர் என நீதிபதி யைக் கேட்டார்.

நீதிபதியும் சம்மதிக்க, தோழர் சப்-இன்ஸ்பெக்டர் ரசாக்கான் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :-

நான் யானை கவுனி போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர். இந்து தியாலாஜிக்கல் பள்ளி எனது ஜுரிஸ்டிக்ஷனில் உள்ளது. நாடோறும் நடைபெறும் மறியல் காலத்தில் நேரில் பள்ளி முன் இருந்து வரு கிறேன். 14.11.1938 அன்று 5 பெண்கள் பெரிய ஊர்வல மாக வந்து, பள்ளியின் வாசற்படிக்கு அருகில் நின்று கொண்டு 'தமிழ் வாழ்க', 'இந்தி வீழ்க' எனக் கூச்ச லிட்டு மறியல் செய்தனர். அன்றும் நான் அங்கிருந் தேன். 2000 அல்லது 3000 பேர் ஊர்வலமாக வந்த னர். எதிரியும் ஊர்வலத்துடன் அன்று வந்தார். பெண் கள் மறியலால் ஆசிரியர்களும் மாணவர்களும் உள்ளே போகத் தடங்கலாயிற்று. வகுப்பு நடத்த முடியாமல் ஆசிரியர்கள் வெளியே வந்துவிட்டனர். பெண்களை அங்கிருந்து போய்விடுமாறு நான் எச்சரித்தும், இந்தி ஒழிந்தால் ஒழிய, போகமாட்டோமென்றனர். பின்னர் அவர்களைக் கைது செய்தேன். எதிரியும் நான் கைது செய்யும் வரை அங்கேயே இருந்தார். பின்னர் இரண்டா வது மாகாண நீதிபதி கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு பெண்கள் தண்டனை பெற்றனர்.

பெண்கள் அபராதங் கொடுக்க மறுத்தனர். கோர்ட் டிலும் எதிரி ஆஜராகியிருந்தார். இதன் பிறகு ஒவ்வொரு திங்கட்கிழமையும் பெண்கள் மறியல் செய்து வருகின் றனர். 21.11.1938 அன்று 8 பெண்கள் மறியல் செய்த னர். அன்றும் பெரிய ஊர்வலமாக அவர்கள் வந்தனர். மேலும் அவர்கள் செய்யும் மறியலால் பெருங்கூட்டம் கூடி, போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுகின்றது. அவர்களையும் நான் எச்சரித்தேன். கேட்காததால் கைது செய்தேன். அவர்களும் தண்டனை பெற்றார் கள். அன்று வழக்கு முடிந்த பிறகு வழக்கைப் பார்க்க வந்திருந்த ஏராளமான மக்கள் திரும்பி 2 மணிக்கு வீட்டிற்குச் செல்லும் போது பல இடங்களில் கல் லெறிந்து பலருக்கு நஷ்டம் உண்டாக்கியிருக்கின்ற னர். முதன்முதலில் தினமணி ஆபிஸ் மீது கல் லெறிந்ததாக அறிந்தேன். அதற்குப்பின் மற்றும் சில இடங்களில் குழப்பம் நேரிட்டதாகத் தெரிகிறது. ஆனால், நேரில் நான் பார்க்கவில்லை, அதன் பிறகு ஒவ்வொரு திங்கட்கிழமையும் பெண்கள் தொடர்ந்து மறியல் செய்து வருகின்றனர்.

**(குடிஅரசு 11-12-1938)**

**- தொடரும்**

# தனித்தமிழ் இயக்கத்திற்கு முதன்மை எதிரி

- பொழிலன்

தனித்தமிழ் இயக்கத்தின் நூற்றாண்டுச் சிறப்புக்குப் பெருமைசேர்க்கும் வகையில் உலகத் தமிழர் பேரமைப்பின் சார்பில் தஞ்சையிலும், (தென்மொழி இயக்கம், உலகத் தமிழ்க் கழகம், தமிழியக்கம் ஆகிய மூன்று இயக்கங்களின் ஒருங்கிணைப்பிலான) தனித்தமிழ் இயக்க நூற்றாண்டுக் கூட்டமைப்பின் சார்பில் சென்னையிலும் மாநாடுகள் சிறப்பாக நடந்தன.

தஞ்சை மாநாட்டில் தன்னேரில்லாத தமிழ் எனும் பெயரில் உலகத் தமிழர் பேரமைப்பு வெளியிட்ட நூற்றாண்டு விழா மலர் சிறந்ததோர் ஆவணமாக விளங்குகிறது. நல்ல பதிவுகளோடு அம்மலர் வெளிவந்திருக்கிறது.

அதேபோல் / பல கோணங்களில் தனித்தமிழ் இயக்கங்களின் கடந்த நூறாண்டுக் கால நிகழ்வுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

அவ்வகைச் சிறப்புக்குக் களமாக விளங்கிய தனித்தமிழ் இயக்கங்களின் பணிகள், இன்றைக்கும் தேவைப்படுவனவாக உள்ளன. இன்னுஞ் சொன்னால் இன்னும் கூடுதலாக விரிந்த தளங்களில் செயல்பட வேண்டிய தேவைகளும் இருக்கின்றன.

இந் நிலையில், தனித்தமிழ் இயக்க முயற்சிகள், தேவைகள் குறித்துச் சிலவற்றை அறிய வேண்டியிருக்கிறது.

முதலில், தனித்தமிழ் என்பது சரிதானா?

உலக அளவில் அறிவியலும், அரசியலும், பொருளியலும் விரிந்து எல்லாமே கணிப்பொறிக் காலமாகிக் கொண்டிருக்கிற இந் நேரத்தில் தனித்தமிழ் என்பது எவ்வகையில் சரியாக இருக்கும் என்று கடந்த காலங்களில் கேட்கப்பட்டு நீர்த்துப் போன கேள்விகள் இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருப்பதைப் பற்றித் தெரிந்து கொண்டாக வேண்டும்.

தமிழ் என்றாலே தனித்தமிழ்தான் என்பார் பாவாணர். தமிழில் பிற மொழிச் சொற்களைக் கலந்து பயன்படுத்துவதுதான் பிழையானது.

உலக அளவில் அனைத்து மொழியினருமே துய மொழிக் கொள்கையைக் கொண்டிருந்தனர்; இருக்கின்றனர்.

ஆங்கிலத்தைத் துய்மைப்படுத்த வேண்டும் என பெர்னார்டு சா இயக்கமாக இயங்கினார்.

உருசிய மொழியில் பிற மொழிகளை வலிந்து கலந்தெழுவதை இலெனின் கடுமையாகச் சாடியிருக்கிறார்.

ஆக, துய தமிழ் முயற்சி சரியானது என்பது மட்டுமன்று; அம் முயற்சிகளால்தாம் தமிழ் காக்கப்பட்டு வருகிறது என்றும்கூடச் சொல்லலாம்.

எனவே, கடந்த காலங்களைவிட இப்போது தனித்தமிழ் இயக்கத்தின் பணி பல வகையில் விரிந்திருக்கிறது என்பதில் முதன்மையாக அறியப்பட வேண்டியது என்னவெனில்,

அந்தப்பணி இப்போது இருவேறுபட்ட நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைக்குரியதாகி விட்டது என்பதே.

ஒன்று தனித்தமிழ் இயக்கத்தின் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் தொடர்புடையோர் ஏற்புறவுடையோர் எனும் படியானவர்களிடையே செய்யப்பெறும் பணி.

மற்றது தமிழ் பற்றிய ஆழ்ந்த விரிந்த அறிதல் இல்லாமல் ஈழத்தின் தாக்குதலுக்குப் பின்னர் தமிழ் தமிழன் தமிழகம் தமிழீழம் என்கிற உணர்வேற்பட்ட நிலையிலான புதிய தலைமுறையினரிடையேயான பணி.

இவையன்றி, அந்தக் காலங்களிலும், இப்போதும், தனித் தமிழுக்கு எதிரான கருத்துடையோர் முன் வைக்கும் இடக்கு மடக்கான தருக்கக் கேள்விகளுக்கு என்ன வகையிலெல்லாம் விடைகள் தேவைப்படுகின்றன என்று பொதுப்பட அறிந்து வைத்திருப்பது வேறு.

ஆக, இந்நிலையில் மேற்சொன்ன இரண்டு வகைப் பணிகளையும் எவ்வாறெல்லாம் செய்ய வேண்டும் எனத் தொடர்புடைய தமிழ்த் தேசிய, தமிழிய அமைப்புகள் ஆழ்ந்தும், விரிவாகவும் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

அவைகுறித்துக் கலந்தாய்ந்து திட்டமிட்ட செயல் திட்டங்களை வகுக்க வேண்டும்.

அவை குறித்து விரிவாகப் பிறகு பார்க்கலாம்.

ஆனால் இச்சூழ்நிலையில் அதற்கு முன்பாக அறிந்துகொள்ள வேண்டிய முதன்மையானதொரு செய்தி குறித்தே இக்கட்டுரை எழுத வேண்டி வந்தது.

அதாவது தனித்தமிழியக்கத்தின் முதன்மை எதிரி யார் என்பதே அது.

முதன்மை எதிரி யார் - என்று கடந்த காலங்களில் யார் அறியப் பெற்றிருந்தார்கள், இக்கால் யாராக அறியப்படுகிறார்கள் என்ற பார்வையோடு யாராக அறியப்பட வேண்டும் என்பது குறித்தும் பார்த்தாக வேண்டும்.

அண்மைக்காலமாகத் தமிழ்த் தேசக் கருத்தாளர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கூறிக் கொள்ளும் சிலர் பெரியாரை இழிவுபடுத்திச் செய்து கொண்டிருக்கிற அரம்பச் செயல்கள் எங்கிருந்து தோற்றங் கொண்டன என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

ஆனால் தமிழ்த் தேசக் கருத்தாளர் என்னும் பெயரில் சிலர் மட்டும் ஏன் இப்படிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வது ஏதோ துணிவின் அடையாளமா? என்றால் அப்படி ஏற்க முடியவில்லை.

அது பித்துப் பிடித்தவர்களின் செயல் என்பதாகவே அறிய முடிகிறது.

ஆம்; ஒன்றைப் பற்றிய அறிவுத் தெளிவில்லாமல் உணர்வு வயப்பட்டுச் செய்யப்படும் அரம்பச் செயல்களை பித்துப் பிடித்த செயல் என்று சொல்லாமல் வேறெப்படிச் சொல்ல முடியும்?

இனி நம் கேள்விக்குள் நுழைவோம்.

தமிழ்த்தேசத்தின் முதன்மை எதிரி யார், எது என்று ஏன் பார்க்க வேண்டும்?

எந்த ஒரு குமுகமும் ஒரே ஓர் எதிர்மையரை மட்டுமே கொண்டிருப்பதில்லை.

தமிழகத்திற்கும் அவ்வகையில் பல்வேறுபட்ட எதிரிகள் உண்டென்பதை ஆழ்ந்து அறியமுடியும்.

மொழி அளவில் சமசுக்கிருதத்திணிப்பும், இந்தித் திணிப்பும், ஆங்கிலத் திணிப்பும் இந்திய வல்லாட்சியால் தொடர்ந்து செய்யப்பட்டு வரும் நிலையில், தமிழ்க் குமுகத்தை ஏதோவொரு வகையில் ஆண்ட அரபிய, மராட்டிய, தெலுங்கிய, கன்னடிய எனப் பல இனத்தினரின், மொழிகளின் கலப்பும் தமிழின், தமிழர் வாழ்வியலின் பல கூறுகளை அடிமைப்படுத்தியிருக்கிறது.

மேற்படி இந்தி உள்ளிட்ட அனைத்துத் திணிப்புகளும், கலப்புகளும் முற்றும் முழுமையுமாக எதிர்க்கப்பட வேண்டி யவையே எனினும் அவற்றுள் முதன்மை யாகவும், உடனடி யாகவும் எதிர்க்கப்பட வேண்டியது எது என்கிற பார்வை தேவைக்குரியது.

ஆங்கிலத் திணிப்பும் இந்தித் திணிப்பும், சில நிலைகளில் சமசுக்கிருதத் திணிப்பும் கல்வியில், ஆட்சியில், அலுவல் நடைமுறையில், நயன்மை (நீதி)த் துறையில், வழிபாட்டில், வாழ்வியல் நடைமுறைகளில் எல்லாம் பெருமளவில் திணிக்கப்டுவதோடு அதிகாரமும் செய்து தமிழை அழித்துக் கொண்டிருப்பதை அறிவோம்.

எனவே அதன் அதிகாரங்களையும், திணிப்புகளையும் எதிர்த்துப் போராடித் தமிழே கல்விமொழி, தமிழே ஆட்சிமொழி, தமிழே அலுவல் மொழி, தமிழே நயனக (நீதிமன்ற) மொழி, தமிழே வழிபாட்டு மொழி, தமிழே வாழ்வியல் பண்பியலுக்கான மொழியாக ஆக்கிவிடுகிற பணியே முதன்மைப் பணியாகிறது,

தமிழை ஆட்சிமொழியாகவும், அலுவல் மொழியாகவும், கல்வி மொழியாகவும் முழுமையாக நிலைநாட்டிவிட்டால் அதில் மிகக் குறைவான விழுக்காட்டில் கலந்து போயிருக்கிற பிற மொழிகளை அறவே நாம் புறக்கணித்திடவும், களைந்திடவும் முடியும்.

மாறாகத் தமிழ்நாட்டில் உள்ள இசுலாமியர்கள் தங்களைத் தமிழர்களாகக் கருதுவதில்லை. எனவே தமிழில் கலந்துள்ள அரபுச் சொற்கள்தாம் இன்றைக்கு முதன்மையாக நீக்கப்பெற வேண்டுவது. அதன்பிறகு ஒவ்வொன்றாக நீக்கலாம் என்று யாரும் சொன்னால் அக்கருத்தில் சிறிதளவு உண்மை யிருப்பினும், அதுவும் எடுத்துச் செய்யப் பெற வேண்டியது என ஏற்றுக் கொண்டாலும், அதுதான் முதன்மைப் பணி என்பதாக எண்ண இயலாது. மேலும், மொழி அளவில் மட்டுமல்லாது இன அளவில், அரசியல் அளவில், பண்பாட்டு அளவில், கலை இலக்கிய அளவில், பொருளியல் அளவில், மெய்யியல் அளவில், வரலாற்றியல் அளவில் தமிழும், தமிழரும், தமிழகமும் முழுமையாக அடிமைப்பட்டிருப்பதை நன்கு உணரவேண்டும்.

இவற்றுள் தமிழை, தமிழரை, தமிழகத்தை அடிமைப் படுத்தியுள்ள எல்லா நிலைகளையும் எதிர்த்திடுவதும் அடிப்படைத் தேவையானதும், ஒவ்வொன்றிலும் கருத்துச் செலுத்த வேண்டியதாயினும் எதை முதன்மையாக எதிர்த்திடுவதால் பிற ஆளுமைப் போக்குகளையும் தொடர்ந்து எதிர்த்திடுவதற்கு அது துணையாக இருக்கும் எனக் காணவேண்டும்.

மொழி அளவில் தமிழை விடுதலைக்குட்படுத்திவிட்டால் அதன் பிறகு இன நிலையிலும், பொருளியல் நிலையிலும், பிற நிலைகளிலும் தமிழர்களைத், தமிழ்நாட்டை விடுதலைப் படுத்திவிட முடியும் என்பதாகச் சிலர் கருதுவது சரியா? - இந்தக் கேள்விக்குரிய விடையைச் சற்று கூர்ந்து சிந்தித்திடல் வேண்டும்.

இந்தக் கேள்விக்குரிய விடைக்குள் நுழைவதற்கு முன்னர் இதையொட்டிய இன்னொரு கேள்வியும் பலரிடம் எழுவது இயல்புதான்.

தமிழ்மொழியை விடுதலைக்குட்படுத்துவது என்கிற முனைப்பை எதற்குத் தமிழ்நாட்டின் விடுதலையோடு தொடர்புபடுத்த வேண்டும்-தமிழைக் கல்வி மொழி, ஆட்சி மொழி உள்ளிட்ட எல்லா துறைக்குமான உரிமை நிலைகளில் நிறைவேற்றிட முழுமையாகக் கவனம் செலுத்தினால் போதாதா? - என்பதான கேள்வியே அது.

அதாவது தமிழின் மீது அதிகாரம் செலுத்துகிற சமசுக்கிருத, இந்தி, ஆங்கிலத் திணிப்புகளை எதிர்த்துப் போராடி நீக்கிவிடு வதோடு, தமிழில் கலந்துள்ள பிற மொழிகளின் வழக்குகளையும் நீக்கியதான தமிழை அனைத்துத் துறைகளிலும் கையாண்டால் போதாதா, அதுவே இத் தமிழினத்தின் விடுதலையில் பெரும் பங்காற்றிடுமே என்று பலர் கருதுகின்றனர்.

இக் கருத்தில் இரண்டு செய்திகள் உள்ளன.

ஒன்று, அவ்வாறு செய்து விடுவதால் தமிழினமோ தமிழ்நாடோ விடுதலை பெற்றிட இயலாது என்பது, அதாவது அப்படி ஒருவேளை நடந்தாலும் தமிழ்நாடும். தமிழினமும் அரசியல்வழி, பொருளியல்வழி யெல்லாம் இந்திய, பன்னாட்டு நிறுவனங்களின் ஆட்சிக்கு அடிமைப்பட்டே இருந்திடும்.

மற்றது, தமிழ்நாடு விடுதலையடையாமல் தமிழ்மொழியை சமசுக்கிருத, இந்தி, ஆங்கிலத் திணிப்பதிகாரங்களிலிருந்து விடுதலைப்படுத்திட முடியாது என்பது.

தமிழ்நாட்டை இந்தியாவும், பன்னாட்டு அரசு நிறுவனங் களும் தன் ஆட்சி அதிகாரங்களுக்குக் கீழ்வைத்திருப்பதன் நோக்கம் தமிழகத்தின் பொருளியலைச் (கனிம வளங்கள் இயற்கை வளங்கள் உழைப்பு வளங்கள் என அனைத்தையும்) சுரண்டிக் கொள்ளையடிப்பதற்காகவே. இக் கொள்ளையடிப்புகள் எளிதே மக்களுக்குத் தெரிந்து மக்களின் எதிர்ப்புகளைச் சந்திக் காமல் இருக்க, மக்களைப் பண்பாட்டுச் சீரழிவு, மதவியல் போக்கு உள்ளிட்ட நிலைகளில் மயக்கப்படுத்தி வைக்கிறது இந்திய அரசு.

அவ்வகையில் இந்திய அரசின் இன்னொரு முகமான பார்ப்பனிய / வைதீக வல்லாட்சி முகத்தின் அதிகாரப் போக்குக் கான கூறாகவே சமசுக்கிருத, இந்தித் திணிப்புகள் நடை பெறுகின்றன.

எனவே, தமிழகம், தமிழன், தமிழ் என்கிற அடையாளப் படுத்தங்கள் அழிக்கப்படும் நோக்கில்தான் இந்தியா, இந்தியன், இந்தி-எனும் அதிகாரப் பதிவுகள் அடையாளப்படுத்தப்பட்டு கின்றன.

இந்தியா முழுக்க ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே கல்வி முறை, ஒரே வரலாறு என ஒன்றாக அடையாளப்படுத்தப்படும் முறைகளெல்லாம் ஆரியப் பார்ப்பனியச் சார்புடைய நிலையிலேதான் இருக்க வேண்டுமென இந்திய அரசு கட்டமைத்துக் கொண்டிருக்கிறது.

ஆக, இந்த நிலையில் இந்திய அரசுக்கு இந்தியை, சமசுக்கிருதத்தை, ஆங்கிலத்தைத் திணிக்க வேண்டும் என்பது மட்டுமே நோக்கமன்று.

அதன் இந்திய வயமாக்கம், இந்திய பன்னாட்டுச் சுரண்டல் கொள்ளை, இந்திய அரசாட்சி ஆகிய நோக்கங்களுக்கு இசைவான இணக்கமான திட்டங்களே சமசுக்கிருத, இந்தி, ஆங்கிலத் திணிப்புத் திட்டங்க ளெல்லாம்.

ஆக இந்திய ஆட்சியதிகாரத்திற்காகத்தான், இந்த மொழித் திணிப்புகளெல்லாம் செய்யப்படுகின்றனவே யல்லாமல், மொழித் திணிப்புகளின் நோக்கம் மட்டுமே இந்தியாவுக்கு இல்லை.

எனவே, தமிழகத்தில் இந்திய ஆட்சியதிகாரத்தின் இறுதிப்பிடிப்பு இற்று வீழ்த்தப்படுகிறவரை அதன் இந்திய வயமாக்கம் எனும் எந்த முயற்சிகளையும் அது முற்றாகக் கைவிட்டுவிடாது.

இந்நிலையில் இந்தியக் கட்டமைப்பை அறுத்தெறிகிற அல்லது அவிழ்க்கிற தமிழ்நாட்டின் எவ்வகை உரிமை முயற்சிகளுக்கும் இந்திய அரசு எளிதே செவிசாய்த்து விடாது.

எனவே, தமிழ்நாட்டின் உரிமைக்குரிய ஒவ்வொரு முறையீடுகளையும் போர்க்கள முயற்சியாகச் செய்தே ஓரளவு வெற்றி காண முடியும்.

ஆக, தமிழ்மொழி உரிமை மீட்புக்கான முயற்சிகள் என்பன தமிழ்நாட்டு விடுதலை முயற்சியின் பகுதி முயற்சிகளே அல்லாமல் தனித்த முயற்சியாகிவிடாது.

எனவே,

தமிழ்நாட்டு விடுதலை இலக்கில்லாதவர்களால் தமிழ்மொழி மீட்புக்கான முயற்சிகளைச் செய்ய இயலாது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் தமிழை ஆட்சிமொழியாக்கத் திறனற்றவர்களே-தவறியவர்களே இந்தியாவில் அனைத்து மொழிகளையும் ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று குரல் எழுப்புகின்றனர்.

கூரையேறி கோழி பிடிக்கும் திறனற்றவர்கள் எப்படி வானம் ஏறி வல்லூறைப் பிடிப்பார்கள்?

இந்திய அளவில் அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்குவது என்பது இயலாதது என்பது மட்டுமன்று-அது ஒரு பித்தலாட்டக் கோரிக்கை அல்லது முழக்கம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அது எவ்வாறு ஓர் ஏமாற்று முழக்கம் என்பதைப் பற்றி அது குறித்தான தனிக் கட்டுரையில் பார்க்கலாம்.

இப்போது இந்தச் செய்திக்கு வருவோம்.

அதாவது இந்திய அரசெதிர்ப்புச் செயற்பாடில்லாமல், திட்டமில்லாமல் தமிழைக் கல்வி மொழியாக்கிடவோ, ஆட்சி மொழியாக்கிடவோ, நயனக(நீதி) மொழியாக்கிடவோ பிற வகையில் எல்லாம் ஆளுமைப் படுத்திடவோ முடியாது என்பதே இங்கு விளங்கிக் கொள்ள வேண்டிய செய்தி.

இங்குக் கல்வித்துறை என்று வந்தால் அது தமிழக அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாக மட்டுமே இல்லை. இந்திய அரசுக்குட்பட்ட சி.பி.எசு.இ. பள்ளிக்கூடங்களிலும், பன்னாட்டு அரசுச் சார்பு நிறுவனங்களான இன்டர்நேசனல் பள்ளிக் கூடங்களிலும் தமிழக அரசதிகாரம் எந்தச் சிறு மாற்றத்தையும் கொண்டு வர முடியாது.

மருத்துவம், ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில் தமிழக அரசு தலையிட முடியாது. பாரதீய சனதா அரசின் புதிய கல்விக் கொள்கையோ, இன்னும் மேலதிகமான அதிகாரங்களைத் தமிழகத்திடமிருந்து இந்தியாவுக்குப் பறித்துக் கொள்வதால், தமிழக அரசு கல்வித் தொடர்பான பெருமளவு அதிகாரங்களையும் இழந்து விடுகிறது.

இந் நிலையில், கல்வித்துறை சாதி அமைப்பு போல் ஏற்றத் தாழ்வுகளோடு அமைந்திருக்கிறது என்பதோடு, இந்திய அரசின் பெரும் அதிகாரத்திற்குட்பட்டதாகவே அடங்கிப் போய்விடுகிறது.

இந்நிலையில், ஒருவன் தமிழே தெரியாமல், தமிழ்நாட்டில் உள்ள இந்திய, பன்னாட்டு நிறுவனங்களின் அதிகாரங்களுக் குட்பட்ட பள்ளிகளில் படித்து உயர் வேலைகளில் அமர முடியும்.

ஆக, கல்வித்துறை முழுமையையும் தமிழக அரசதிகாரத்தின் கீழ் வரச் செய்யாமல், இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனப் பள்ளிக்கூடங்கள் தமிழகத்தில் இயங்கத் தடை செய்யாமல் தமிழே கல்விமொழி என்பதை நிறைவேற்ற முடியாது.

இதே நிலைதான் தமிழே ஆட்சிமொழி என்பதிலும் தமிழே நயனக (நீதிமன்ற) மொழி என்பதிலும் இருக்கிறது.

ஆக, தமிழ்நாட்டில் தமிழைக் கல்விமொழியாக்குவது, தொடங்கி தமிழ் மொழிக்கான எவ்வகை உரிமை முழக்கமானாலும் அதற்கு முழுத் தடையாக இருப்பது இந்திய அரசே என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

தனித்தமிழ் இயக்கத்தின் கொள்கை தமிழ்க் காப்பு என்கிற அடிப்படை கொண்டது எனில், அந்தத் தமிழை இந்தியிலிருந்தும், சமசுக்கிருதத் திலிருந்தும், ஆங்கிலத்திலிருந்துமான அதிகாரத் திணிப்பிலிருந்தும் மீட்டுத் தற்காத்துக் கொள்வதே ஆகும்.

அம் முன்றின் அதிகாரத் திணிப்பு என்பது ஏதோ மொழி சார்ந்ததாக மட்டுமல்லாமல் இந்திய அரசு சார்ந்தது என்பதும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இந்தி வேண்டாம் என்பது, இந்திய ஆட்சி வேண்டாம் என்கிற நிலையுடையது. சமசுக்கிருதம் கூடாது என்பது ஆரியப் பார்ப் பனியம் கூடாது என்கிற பொருளுடையது. ஆங்கில எதிர்ப்பு என்பது பன்னாட்டு நிறுவன எதிர்ப்பின் சாரத்தைக் கொண்டது.

ஆக-அம் மூன்று மொழித் திணிப்பு எதிர்ப்பு என்பதும் இந்திய அரசெதிர்ப்பும், ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பும், பன்னாட்டு நிறுவன எதிர்ப்பும் ஆகிய மூல எதிர்ப்புகளைக் கொண்டது.

அது, அவ் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்து வீழ்த்துதல் வேண்டு மான முதன்மைப் பணியோடு இணைந்தது.

ஏறத்தாழ இதே தன்மை நிலை கொண்டவர்களாகவே காசுமீரிகளும், நாகர்களும், அசாமிகளும், வங்காளிகளும், மிசோரம் மக்களும்-அவ்வளவு ஏன் மராட்டியர்களும், தெலுங் கர்களும், கன்னடர்களும், மலையாளிகளும் உள்ளனர். இந் நிலையில் தமிழ்க் காப்புக்கு முதன்மை எதிர்மை நிலைக் குரியதான இந்திய அரசெதிர்ப்பைச் செய்யாமல், தெலுங்கர் களையும், கன்னடர்களையும், மலையாளிகளையும் முதன்மை

எதிரிகளாகச் சிலர் காட்டிப் பேசுவது அறியாமை வழிப்பட்டது என்பதைவிட அழிவு வழிப்பட்டது என்றே கூறவேண்டியுள்ளது.

அப்படியாக அவர்கள் கருதுவதற்கு அல்லது கருத்தறி விப்பதற்கும் காரணங்கள் இல்லாமல் இல்லை.

கடந்த காலங்களில் திராவிடக் கட்சிகள் குறிப்பாக தி.மு.க. செய்த இரண்டகங்களையே முதன்மைக் காரணமாக அறியலாம்.

தேர்தல் நலனுக்காக தி.மு.க., இந்திய அரசின் பிரிவினைத் தடைச் சட்டத்திற்கு அடங்கிப் போய், திராவிட நாட்டு விடுதலைக் கொள்கையைக் கைவிட்டது.

- தமிழைக் கல்வி மொழியாக்கிடாமல் இருந்தது,
- கல்வித்துறையை இந்திய அரசிடம் கையளித்தது
- தமிழ்நிலப் பரப்புகளில் (குறிப்பாக தேவிகுளம், பீர்மேடு தொடங்கி கட்சத் தீவு வரை) கவனமின்றித் தமிழகம் இழந்திடக் காரணமாக இருந்தது.
- தமிழக ஆற்று உரிமைகளில் அக்கறையின்றி இந்திய அரசுக்கு அடிபணிந்தது.
- தமிழகத் தொழில்வளங்களை இந்திய அரசுக்கும், வெளிநாட்டுக் கொள்ளை நிறுவனங்களுக்கும் தாரை வார்த்தது.
- இந்தியக் கல்விக் கூடங்கள், பன்னாட்டுக் கல்விக்கூடங்கள் தமிழகத்தில் நுழைய இசைந்தது.
- கட்சி தொடங்கியபோது இந்திப் பெயர்ப்பலகை அழிப்பு உள்ளிட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்பைச் செய்துவிட்டுப், பின்னாள்களில் நெடுஞ்சாலைகளிலேயே இந்தியை எழுதியது
- 2009 தமிழீழச் சிக்கலின் உயிர்நிலைப் போரில் மிகப் பெரும் இரண்டகம் செய்தது
- உள்ளிட்ட தமிழ்நாட்டு உரிமைகளுக்கு மாறாகவும், இந்தியத் தோடு இணங்கிக் கொண்டும் தி. மு. கழகம் செய்த இரண்டகங்களின் பட்டியல் மிக நீளமானது.

அத்தகைய இரண்டகப் போக்கிற்குத் தி.மு.க.வின் தலைமைகளே காரணம் என்பதை எவரும் மறுத்திட இயலாது.

அண்ணாத்துரை தொடங்கி கருணாநிதி வரை அவர்கள் செய்த இரண்டகச் செயல்களைப் பட்டியலிட முடியும்.

ஆனால் அவர்கள் செய்த இரண்டகங்களுக்கு அவர்கள் திராவிடக் கருத்துடையவர்கள் என்பதல்ல காரணம்.

ஒருவேளை அவர்கள் திராவிடக் கருத்துடையவர்களாக அல்லாமல் தமிழர் தமிழ்நாடு என்ற கருத்துடையவர்களாக இருந்திருந்தாலும்கூட அத்தகைய இரண்டகப் போக்கையே அவர்கள் செய்திருப்பார்கள்

அது மேலும் சிறப்பாக விளங்க வேண்டும் என்றால், இந்த இடத்தில் இன்னொன்றையும் இணைத்துப் பார்க்க வேண்டும்.

ஒருவர் தமிழுக்கு இரண்டகம் செய்வதற்கு அவர் தமிழரல்லாதவராக இருந்தார் என்பது மட்டுமே காரணமாகிட முடியாது, அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம், ஆனால் அதைவிட அவர் எத்தகைய கொள்கை மற்றும் நடைமுறையைக் கொண்டவர் என்பதே முகாமையானது. கொள்கை நடைமுறையால் இந்திய அரசோடும், பன்னாட்டு நிறுவனங்களோடும் இயைந்து போகிற, அண்டிப் பிழைக்கிற ஒருவர் எப்படித் தமிழர்க்கு, தமிழுக்குத், தமிழ்நாட்டிற் கானவராக இருக்க முடியும்?

பொதுவாக எண்ணுவோமானால் பிறப்பைப் பேசி அதனடிப்படையில் சிறப்பும், இழிவும் கற்பிக்கிற கண்ணோட்டமே ஆரியப் பார்ப்பனியக் கண்ணோட்டம் என்பதை அத்தகைய இயக்கப் போக்கினர் தெரிந்துகொள்ள வேண்டும்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனும் அறவியல் உணர்வு கொண்டவர்களின் மூளையில் பிறப்பைக் குறிப்பிட்டு, சாதியைக் கணக்கிட்டுப் பேசுகிற வைதீக மனுதர்மக் கண்ணோட்டங்களும் புகுந்துகொண்டு செய்கிற பிழைப் போக்குகளை எப்படி ஏற்க இயலும்?

**அவ்வகையில் தி.மு.க. செய்த பிழைகள் அவர்கள் கொண்டிருந்த திராவிடக் கருத்தால் வந்த பிழைகளன்று; அவர்களின் இந்திய உறவால் அதனோடு இணங்கி அண்டிப் பிழைத்ததால், பிழைத்து வருவதால் ஏற்பட்ட பிழைகள்.**

அதாவது எவை எதிர்க்கப்பட வேண்டியவையோ அவற்றோடே கூடிக் குலாவிய பிழை.

திராவிடம் என்ற கருத்துடன் அவர்கள் இந்தியத்தை எதிர்த்துத் திராவிட நாட்டை உருவாக்க எண்ணிய காலம் ஒன்று இருந்தது. ஆனால், அது பிரித்தானிய ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த சென்னைத் தலை மாநிலம் (மெட்ராசு பிரசிடென்சி) எனும் ஆட்சி அமைப்புக்குள் இப்போதைய தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகியவை உள்ளடங்கியிருந்த காலம். ஆரியப் பார்ப்பனியக் கருத்துருவாக்கத்தில் அன்றைய பிரித்தானிய இந்தியாவை அவர்கள் இந்துசுத்தான் என்று அடையாளப்படுத்தி அழைத்துக் கொண்டிருந்ததற்கு மாறாக, அதை மறுத்துத் திராவிடம், திராவிட நாடு எனும் கருத்து தோன்றியிருந்த காலம்.

1956-க்குப் பின்னர் அதாவது மொழிவழி மாநிலப் பகுப்புக்குப் பின்னர் திராவிட நாட்டுக் கருத்தைக் கொண்டிருந்தோர் பலர்; குறிப்பாகப் பெரியார், தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் இவற்றையெல்லாம் இணைத்த பெருநிலத்தை திராவிட நாடு என நம்புவதை விட்டுவிட்டுத் தமிழ்நாட்டு விடுதலையையே முன்வைத்துப் பேசலானார்.

ஆனால் தேர்தல் நலனுக்காகத் திராவிட நாடு என்று 1949 முதல் பேசிவந்த தி.மு.க.வோ, 1963 வரை, "அடைந்தால் திராவிட நாடு-இல்லையேல் சுடுகாடு" என்று வீர முழக்கமிட்டுவிட்டு, 1963இல் இந்திய அரசிடம் இருந்து சட்ட நெருக்கடி வந்தவுடன், நாங்கள் விடுதலைக் கருத்தைக் கைவிட்டுவிட்டோம் எனத் தடாலடியாகத் தலைக்குப்புற வீழ்ந்தனர்.

ஆக, இங்குத் தமிழக வரலாற்றின் வளர்ச்சியில் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பில், இந்திய எதிர்ப்பில், வல்லரசிய எதிர்ப்பில் எந்த அளவு காலூன்றி உறுதியாய் இருந்தார்கள், இருக்கிறார்கள் என்பதிலிருந்தே அவர்களின் அரசியலும் செயல்களும் கணிக்கப்பட வேண்டுமே அல்லாமல், பிற வகையில் அதாவது பிறப்பின் அடிப்படையில், சாதியின் அடிப்படையிலன்று.

அவ்வாறு அரசியல்வழியாகத் தெளிவாகக் கணிக்காத வகையிலான செயல்பாடுகளின் பிறழ்ச்சிகளாகவே பன்னூற்றுக் கணக்கான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டமுடியும்.

அண்மையில் தருண்விசய் திருவள்ளுவரைத் தூக்கிக் கொண்டு நாடகமாடிய போது, அவரோடு உறவாடி மகிழ்ந்த தமிழ் அமைப்புகள் தமிழ் அடியார்கள் சிலரின் இழிநிலையைக் குறிப்பிடவேண்டும்.

இந்துவியத்தைப் பரப்புவதற்கும், ஆரியப் பார்ப்பனியத்தைக் காலூன்ற வைத்திடுவதற்குமான நோக்கங் கொண்டதே ஆர்.எசு.எசு.

அந்த ஆர்.எசு.எசு. இயக்கத்தின் வழிநெறியில் செயல்படுகிறவரே தருண் விசய் போன்றவர்கள்.

அவர்கள் திருவள்ளுவரை ஏற்றிப் பேசுவதிலும், திருவள்ளுவத்தை ஏற்றுக் கொள்வதாய்ப் பொய்யுரைப்பதிலும் உண்மையில்லை என்பதை உணர வேண்டும்.

திருவள்ளுவத்தின் அறக்கொள்கையை ஏற்றுக் கொள்ப வரானால் ஒருவர் மனு நீதியையோ. வேதப் புளுகுகளையோ ஏற்றிட இயலாது.

தருண்விசயால் மனுதர்மத்தையோ, வேத புராணங் களையோ மறுத்திட முடியுமா?

அதேபோல் சென்னையில் அண்மையில் ஆர்.எசு.எசு.வின் அடிதாங்கி குருமூர்த்தி நடத்திய 8 ஆம் இந்துப் பண்பாட்டுக் கண்காட்சிக்குள் மயங்கிப் போய் கலந்துகொண்டு மகிழ்ந்த தமிழ்ச் சிவனியர்களையும், மாலியர்களையும் என்னென்று மதிப்பிடுவது?

ஆனால் மறைமலையடிகளும், பாவாணரும், பாவலரேறு வும் மனுதர்மத்தைக் கடுமையாக மறுத்தவர்கள்; வேத புராணங்களை மறுத்தவர்கள்; எதிர்த்தவர்கள்.

அவ்வகையில் ஆரியத்தை வலுவாக மறுத்துத் தமிழி யத்தைக் காக்க எண்ணியவர்கள்; செயல்பட்டவர்கள்.

மறைமலையடிகளாரின் சிவனியக் கருத்தாடல்களில் நம்மால் ஒன்ற இயலாமல் போனாலும், வைதீகத்தையும், ஆரியப் பார்ப்பனியத்தையும், அவை இந்துவியம் என்னும் பெயரில் முகமூடியிட்டுச் சுற்றித் திரிந்ததையும் அவர் கடுமையாக எதிர்த்ததை நாம் வரவேற்க வேண்டும்.

ஆரியப் பார்ப்பனியத்தின் இந்துவியம் என்பதும் இந்தியம் என்பதும் வெவ்வேறானவையன்று என்ற நிலையில் அவற்றை எதிர்த்துக் களம் கண்டவர்களே மறைமலையடிகள், பாவாணர், பாவலரேறு எல்லாரும்.

அதனால்தான் இறையியல் கருத்தில் முற்றிலும் மாறுபட்ட நிலையினராக இருந்தபோதிலும், தமிழ் மீட்பு, தமிழ்க் காப்புக் கருத்தில் மறைமலையடிகளாரைத் தலைவராக ஏற்றுக் கொள்வதாகப் பெரியார் எழுதவும் பேசவும் செய்தார்.

அன்றைய தனித்தமிழ் இயக்கத்திற்கு ஆரியமே முதன்மை எதிரி, சமசுக்கிருதமும் இந்தியுமே எதிரிகள், இந்தியமே எதிரி அவற்றையெல்லாம் அவர்கள் எதிர்த்து எந்த அளவு திட்டமிட்டுச் செயற்பட்டார்கள் பேராடினார்கள் என்பது வேறு.

ஆனால் எதிரியை இனங்கண்டிருந்தார்கள்; எவ்வகை இணக்கப் போக்கும் இல்லாமல் எதிரியை எதிர்த்தார்கள்.

இன்றைக்குள்ள தனித் தமிழ் இயக்கத்தினர் பலர் ஆரியத்தை வலுவாக மறுப்பவர்களாக இல்லாததால்தான் தருண்விசயைப் பாராட்டுகின்றனர்; வலுவான ஆரிய எதிர்ப்பாளர்களாக இல்லாததால் தான் இந்தியத்தோடு உறவு கொண்டாடுகின்றனர்.

இந்தியத்தை எதிர்த்துத் தமிழியத்தைக் காக்கவோ, தமிழ்நிலத்தை மீட்கவோ ஆன எந்த அரசியல் இலக்கோ, செயல்திட்டமோ இக்கால் உள்ள தமிழ் இயக்கங்களிடையே இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நிலையில், இந்திய அரசெதிர்ப்பை வலுவாகக் கடந்த காலங்களில் செய்யத் தவறியதோடு, இந்திய ஆட்சியர்களோடு குழைந்துகொண்டு தமிழுக்கும், தமிழினத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் கேடுகள் செய்த திராவிடத் தேர்தல் கட்சிகளை மனத்தில் வைத்துக்கெண்டு, திராவிடம் பேசுகிறவர்ளையே பகைவர்களாகவும் எதிரிகளாகவும் சில தமிழ் இயக்கத்தினரும், தமிழன்பர்களும் எதிர்த்து வருவதை அறியலாம்.

அவ்வகையில் திராவிடக் கருத்துடையவர்களையே முதன்மைப் பகைவர்களாகக் கருதிடும் அவர்களின் அரசியல் தெளிவின்மை குறித்து வருந்தவே வேண்டியுள்ளது.

**தமிழ் உணர்வாளர்களுக்கும், தமிழ்த் தேசக் கருத்தாளர்களுக்கும் இந்தியமே முதன்மை எதிரியாக இருக்க முடியுமே அல்லாமல் வேறன்று.**

மற்றபடி இந்தியத்தோடு கூடிக் குலாவித் திரியும் எவரா னாலும் அதாவது திராவிடக் கருத்துடையவர் களானாலும் சரி, தமிழர் கருத்துடையவர்களானாலும் சரி; அவர்களையும் இந்தியம் எனும் எதிர்மை நேர்க் கோட்டில் வைத்தே எதிர்த்திட வேண்டும்.

**ஆக, தமிழ் இயக்கங்களுக்கும், தமிழ்த்தேச இயக்கங்களுக்கும் முதன்மை எதிரி இந்தியமும், பன்னாட்டு நிறுவனங்களுமே எனத் தெளிதல் வேண்டும்.**

அவ்வகையிலேயே அவர்களின் கருத்துகளும் செயல் பாடுகளும் இருந்திடல் வேண்டும் என்பதையே வலியுறுத்து கிறோம்.

இந்திய எதிர்ப்பும், பன்னாட்டு வல்லாட்சிகளை எதிர்த்திடுவ தும் சாதி ஒழிப்பு இலக்கைத் தம் கருத்தோடு இணைத்துக் கொண்டு இயங்குவதுமே தனித்தமிழ் இயக்கங்களின் முதன்மை எதிர்மை இலக்காக இருந்திடல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

மற்றபடி இந்தியத்தை. பன்னாட்டு வல்லரசியங்களை. சாதியத்தை எதிர்க்கிற அனைவரையும் நட்பாக்கிக் கொள்கிற நடைமுறையே தனித்தமிழை மட்டுமன்று, தமிழ்த் தேசத்தை வென்றெடுப்பதற்குமான சிறந்த உத்தியாக இருக்க முடியும்

அவ்வகையில் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிற தனித்தமிழ் இயக்கங்களும், தமிழ்த்தேச இயக்கங்களும் எதிரி யைச் சரியாக இனங்கண்டு செயல்படவேண்டும் என்பதே நம் விழைவு.

# தந்தை பெரியார் 138ஆம் பிறந்தநாள் விழா

## 17-09-2916 சனி முதல் 19-09-2016 மற்றும் 24-09-2016 முதல் 30-10-2016 முடிய

### தமிழகம் தழுவிய பரப்புரைக் கூட்டம்
### மா.பெ.பொ.க. தோழர்கள் குழுவாகப் பயணம்

| | | |
|---|---|---|
| 17.09.2016 | சனி | அம்பத்தூர் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை வளாகத்தில், காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை தந்தை பெரியார் 138ஆம் பிறந்த நாள் விழா மற்றும் ''சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி'' வகுப்பில் தேர்ச்சி பெற்றோருக்குச் சான்றிதழ் வழங்கும் விழா. |
| 18.09.2016 | ஞாயிறு | சென்னையில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 19.09.2016 | திங்கள் | சென்னையில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 24.09.2016 | சனி | புதுச்சேரியில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 25.09.2016 | ஞாயிறு | புதுச்சேரி மாநில மா.பெ.பொ.க. - சிந்தனையாளன் வாசகர் கலந்துரையாடல் கூட்டம். |
| 26.09.2016 | திங்கள் | புதுச்சேரியில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 27.09.2016 | செவ்வாய் | விழுப்புரத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 28.09.2016 | புதன் | விழுப்புரம் மாவட்ட மா.பெ.பொ.க. - சிந்தனையாளன் வாசகர் கலந்துரையாடல் கூட்டம். |
| 29.09.2016 | வியாழன் | விழுப்புரம் மாவட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 30.09.2016 | வெள்ளி | சீர்காழி நகரில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 01.10.2016 | சனி | சீர்காழி வட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 02.10.2016 | ஞாயிறு | குடந்தை மாநகரில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 03.10.2016 | திங்கள் | கடலூர் மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 04.10.2016 | செவ்வாய் | கடலூர் மாவட்ட மா.பெ.பொ.க.<br>சிந்தனையாளன் வாசகர் கலந்துரையாடல் கூட்டம். |
| 05.10.2016 | புதன் | கடலூர் மாவட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 06.10.2016 | வியாழன் | அரியலூர் மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 07.10.2016 | வெள்ளி | அரியலூர் மாவட்ட மா.பெ.பொ.க. - சிந்தனையாளன் வாசகர் கலந்துரையாடல் கூட்டம். |
| 08.10.2016 | சனி | அரியலூர் மாவட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 09.10.2016 | ஞாயிறு | பெரம்பலூர் மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 10.10.2016 | திங்கள் | பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |

| | | |
|---|---|---|
| 11.10.2016 | செவ்வாய் | சேலம் மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 12.10.2016 | புதன் | சேலம் மாவட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 13.10.2016 | வியாழன் | திருவண்ணாமலை மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 14.10.2016 | வெள்ளி | திருவண்ணாமலை மாவட்ட மா.பெ.பொ.க. - சிந்தனையாளன் வாசகர் கலந்துரையாடல் கூட்டம். |
| 15.10.2016 | சனி | திருவண்ணாமலை மாவட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 16.10.2016 | ஞாயிறு | வேலூர் மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 17.10.2016 | திங்கள் | வேலூர் மாவட்ட மா.பெ.பொ.க.-சிந்தனையாளன் வாசகர் கலந்துரையாடல் கூட்டம். |
| 18.10.2016 | செவ்வாய் | வேலூர் மாவட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளைப் பணி. |
| 19.10.2016 | புதன் | திருச்சி மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம். |
| 20.10.2016 | வியாழன் | திருச்சி மாவட்ட மா.பெ.பொ.க. - சிந்தனையாளன் வாசகர் கலந்துரையாடல் கூட்டம். |
| 21.10.2016 | வெள்ளி | திருச்சியிலிருந்து தூத்துக்குடியை அடைதல் |
| 22.10.2016 | சனி | தூத்துக்குடி மாநகரில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா அரங்கக் கூட்டம். |
| 23.10.2016 | ஞாயிறு | கன்னியாகுமரியில், முற்பகலில் விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு மற்றும் உள்ஒதுக்கீடு விளக்கக் கூட்டம். |
| | | மாலையில் வள்ளியூரில் விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு மற்றும் உள்ஒதுக்கீடு விளக்கக் கூட்டம். |
| 24.10.2016 | திங்கள் | வள்ளியூரிலிருந்து மதுரை வழியாக சேலம் அடைதல். |
| 25.10.2016 | செவ்வாய் | உடுமலைப்பேட்டையில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாக் கூட்டம் |
| 26.10.2016 | புதன் | உடுமலைப்பேட்டையில் பெரியார்-நாகம்மை அறக்கட்டளைப் பணி |
| 27.10.2016 | வியாழன் | உடுமலைப்பேட்டையிலிருந்து காஞ்சிபுரம் அடைதல் |
| 28.10.2016 | வெள்ளி | காஞ்சிபுரத்தில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழாக்கூட்டம் |
| 29.10.2016 | சனி | காஞ்சிபுரத்தில் பெரியார்-நாகம்மை அறக்கட்டளைப் பணி |
| 30.10.2016 | ஞாயிறு | சென்னையில் வகுப்புவாரி உரிமைக் கல்வி பயிலரங்கம்-முழுநேரம் |

**02.07.2016 அன்று சென்னையில் நடைபெற்ற மா.பெ.பொ.க. பொதுக்குழுவில், பரப்புரைப் பயணத்துக்கு வர ஒப்புதல் அளித்த தோழர்கள் பயணத்துக்கு ஆயத்தமாக இருக்க வேண்டுகிறேன். ஆங்காங்கே என்னுடன் இணைந்துகொள்ளுமாறு கோருகிறேன்.**

**அன்புகூர்ந்து, மாவட்டச் செயலாளர்களும், மற்ற பொறுப்பாளர்களும் கட்சித்தோழர் களுடனும் ஆதரவாளர்களுடனும் கலந்துபேசி, நல்ல முறையில் ஆதரவு திரட்டி, இப்பரப்புரைப் பயணத்தையும், பெரியார்-நாகம்மை அறக்கட்டளைப் பணியையும் வெற்றியாக நடத்தி முடிக்க ஆயத்தப்படுத்திக் கொள்ளும்படி பணிவன்புடன் வேண்டுகிறேன்.**

தோழமையுடன்

**வே. ஆனைமுத்து**

பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

அம்பத்தூர்
01.09.2016

# ஆவணப்படத்தின் நாயகனாக இருக்கும் தகுதி எனக்கு உள்ளதா?

**- எஸ்.வி. ராஜதுரை,** கோத்தகிரி

அன்புள்ள தோழர்களே!

எட்டாண்டு காலமாக எனது இரண்டு கண்களிலும் அரைகுறைப் பார்வைதான். அதைக்கொண்டே தொடர்ந்து எழுதவும், படிக்கவும் ஓரிரு சந்தர்ப்பங்களில் பொது நிகழ்ச்சி யில் கலந்துகொள்ளவும் தோழர்களின் ஊக்குவிப்புடன் நவீன தொழில்நுட்ப சாதனங்களும் உதவின. சென்ற ஆண்டு எனது உடல்நிலையில் பெரும் சரிவு ஏற்பட்டு, சில மாதங்கள் படுத்தப் படுக் கையாகவே இருந்ததோடு, எனது இடது கண் பார் வையையும் முற்றிலுமாக இழந்தேன். இந்தச் சூழலில் தான் எனது வாழ்நாளில் எனக்கு அறிவொளியூட்டிய - அது கடுகளவானதாகவோ, மலையளவானதாகவோ இருக்கலாம்- கிட்டத்தட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து எனது கட்டுரை களிலும் நூல்களிலும் அவர் களது பெயர்களைப் பதிவுசெய்யத் தொடங்கினேன். விட்டுப்போன பெயர்கள் விரைவில் வெளிவரும் மூன்று நூல்களில் இடம்பெறும்.

என்மீது மிகுந்த அன்பும் மதிப்பும் காட்டுகிற, எனது நீண்டகால நண்பர்களும் தோழர்களும் என்னைப் பற்றிய ஓர் ஆவணப் படத்தைத் தயாரிக்கும் முயற்சி யில் இறங்கிய போது, எனக்கு அது மகிழ்ச்சியை அல்ல; வெட்க உணர்வையே தந்தது. இந்த ஆவணப்படத்தில் இறுதி செய்யப்படாத வடிவம் எனக்குப் பல மாதங்களுக்கு முன்பே அனுப்பப்பட்டிருந்தது என் றாலும் அதை நான் இதுவரை பார்க்கவில்லை; என் குடும்பத்தினருக்கும்கூட அதைக் காட்டவில்லை. எனது சொந்த வாழ்க்கைக் குறிப்புகளை அனுப்புமாறு எனது அருமைத் தோழர் குறிஞ்சி எண்ணற்ற முறை என்னிடம் தொலைப்பேசி வழியாகவும் மின்னஞ்சல் ஊடாகவும் விடுத்து வந்த வேண்டு கோளுக்கு ஏதேதோ சாக்குப் போக்குகள் கூறி, உடனடியாக செவிமடுக்காவண்ணம் எனது வெட்க உணர்வு தடுத்து வந்தது. ஓர் ஆவணப்படத்தின் நாயகனாக இருக்கும் தகுதி எனக்கு உள்ளதா?

எனது அரசியல் வாழ்க்கை 13ஆம் வயதிலேயே தொடங்கி யது-தி.மு.க. ஆதரவாளனாக, உறுப்பினனாக 21ஆம் வயதில்தான் மார்க்சியம் என்னை ஈர்க்கத் தொடங்கியது. பொதுவுடைமை இயக்க அரசி யல் வாழ்க்கையைத் தொடங்க மேலும் நான்காண்டு கள் தேவைப்பட்டன. ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலம் அந்த இயக்கத்தில் கட்சி உறுப்பின னாகவோ, சக பயணியாகவோ, ஆதுரவாளனாகவோ, ஏன், அந்த இயக்கத்தைச் சேர்ந்த ஓரிரு குழுவினரின் கருத்துப்படி 'கம்யூனிஸ்ட் விரோதி'யாகவும், 'ஏகாதிபத்திய அடி வருடியாக வும்' கூட இருந்திருக்கிறேன். என்னைப் பற்றிய இத்தகைய சித்தரிப்புகளை வலதுசாரி இந்துத்துவச் சக்திகளும் பரப்பி வரு வதைப் பார்த்திருக்கிறேன். சிலவேளை என் மனம் புண்படுவ துண்டு. ஆனால், துவண்டு போய் முற்றிலும் செயலற்றவனாக ஆகிவிடாமல் தடுத்தவை, மானுட குலத்தின் விடுதலைக்கான தத்துவங்களையும் செயல்பாட்டு முறைகளையும் நமக்கு வழங்கிச் சென்றுள்ள மாபெரும் புரட்சியாளர்களின் வாழ்க்கை யும் அவர்களது பணி களும்தான்.

எனது எழுத்து வாழ்க்கைக்கும் இப்போது வயது 50. எனது ஆக்கங்கள் நமது சமுதாயத்தின்மீது எத்தகைய தாக் கத்தை ஏற்படுத்தின? எனது வாசகர்கள் யார்? நமது இலட்சி யங்கள் அடுத்தடுத்துத் தோல்வி களை மட்டுமே தழுவிக் கொண்டிருக்கையில், தொடர்ந்து எழுதுவதில் என்ன பயன்? என்ற கேள்விகள் என் மனதைக் குடைந்து கொண்டிருக் கின்றன.

சோசலிச சமுதாயத்தை உருவாக்கப் பல்வேறு நாடு களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்துக்கும் ஏற்பட்டுள்ள தோல்விகள், பொதுவுடைமை இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவுகள், இந்தியப் பொதுவுடைமை இயக்க வாழ்வில் எனக்கேற்பட்ட கசப்பான அனுபவங்கள், மனித உரிமை இயக்கத்தில் இயன்ற அளவு செயலாற்றுவதற் கான வாய்ப்புகள், அம்பேத்கரும் பெரியாரும் கற்றுக்கொடுத்த பாடங்கள் ஆகியவை என்னிடம் சகிப்புணர்வை வளர்த்தன. தனிப்பட்ட முறையிலோ, அரசியல் வகையிலோ வன்மமும் வெறுப்புணர்வும் என் உள்ளத்தில் வளர்வதைத் தடுத்தன. ஒரு குறிப்பிட்ட செயல் திட்டத்தின், குறிக்கோளின் அடிப்படை யில் பல்வேறு கருத்து நிலைகளைக் கொண்டிருப்பவர் களுடன் இணைந்து செயலாற்றுவதால் சமுதாயத்திற்கு ஏற்படும் நற்பயன்களை என்னால் உணர முடிந்திருக்கிறது. இந்த அணுகு முறைக்கு அற்புதமான எடுத்துக்காட்டாக இருந்தவர் பெருஞ்சித்திரனார். இது எனக்கு நிறமாலை போன்ற நட்பு வட்டத்தை உருவாக்கியிருக்கின்றது.

மிகுந்த மனசோர்வு ஏற்படும்போது இலக்கியத்திலும் இசையிலும் புகலிடம் தேடுவேன். நல்ல படைப்பிலக்கிய வாதியாகவோ, இலக்கியத் திறனாய் வாளனாகவோ வளர வேண்டும் என்பதே எனது இளமைக்காலக் கனவாக இருந்தது. ஆனால், எனது இரத்தத் திலேயே கலந்திருந்த அரசியல் என்னை வேறு பாதையில் செலுத்தியது. முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என என்னால் விரும்பப்பட்ட பல செயல்பாடுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. ஆனால், இதில் எனக்குக் கடுகள வேனும் வருத்தம் இல்லை. இது தான் வாழ்க்கை.

எனினும், தற்போதைய இந்திய, தமிழகச் சூழல் என் உள்ளத்தில் பெரும் பீதியை ஏற்படுத்துகிறது. முதலாளியச் சமுதாயத்தில் ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்களின் உரிமைக் குரலை மிகவும் வரம்புக்குட்பட்ட வகையில் மட்டுமே எதிரொலிப்பதற்கான அரங்குகளில், அரசியல் களங்களில் ஒன்று என்பதற்கு மேல் சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத் துக்கும் நான் எவ்வித முக்கியத்துவமும் தருவதில்லை. எனினும், அண்மைய தேர்தல் முடிவுகள், ஒட்டுமொத்த தலித் மக்களுக்கு எதிராகத் தமிழகத்தின் மிகப் பெரும்பான் மை மக்கள் வாக்களித்திருக்கின்றனர் என்னும் உணர்வை எனக்கு ஏற்படுத்துகின்றன. தமிழக மக்களின் உளவியலில் ஆதிக்கம் செலுத்தும் சாதிய உணர்வை எவ்வாறு எதிர்த்துப் போராடுவது? இந்திய அளவில் பா.ச.க., காங்கிரஸ்; தமிழக அளவில் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகள் மட்டுமே இருந்தால் போதும் என்று கார்ப்பரேட், வணிக, ரியல் எஸ்டேட், சாராயச் சக்திகள் விரும்புகின்றன.

இந்தியாவில் அரசியல் மேலாண்மையைப் பெற்றுள்ள பாசிச சக்திகளைப் பற்றிப் பேசுகின்றோம். பண்பாட்டுத் தளத்தில் அவை தொடர்ந்து மேற்கொண்டு வரும் பிற்போக் குத்தனமான நடவடிக்கைகளுக்கு மட்டுமே நாம் கூடுதல் கவனம் செலுத்துவதாகத் தோன்றுகிறது. இந்திய பாசிசம், அமெரிக்காவின் தலைமையிலுள்ள உலக ஏகாதிபத்தியத்தின் கைகளை வலுப்படுத்துவதில், மன்மோகன் வகுத்த பாதைக்குக் காங்கிரீட் போட்டு வருகின்றது. மன்மோகன்சிங் காலத்தில் செய்துகொள்ளப்பட்ட அணுஉலை ஒப்பந்தத்தை வலுப்படுத்து வதில் தொடங்கி, உலக அளவிலான ஏகாதிபத்திய இராணுவத் தொலைநோக்குத் திட்டத்தில் இந்தியா முக்கியப் பாத்திரம் வகிக்கும் வகையில் அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகியவற்றுடன் இருதரப்பு, முத்தரப்பு இராணுவ ஒப்பந்தங்களைச் செய்து கொள் வதிலும், அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனுடன் மிக நவீன, வலுவான ஆயுத உற்பத்தி யை மேற்கொள்வதிலும் இன்றைய பாசிச அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. சீனாவைத் தனிமைப்படுத்தி, அதன் கடல் மார்க்கங்களை அடைத்து, கடல், வான், தரை வழியாக அதன் மீதான ஆக்கிரமிப்பை நடத்துவதற்கும், தேவைப்பட்டால் அதன்மீது அணு ஆயுதங்களை ஏவவும் அமெரிக்கா உரு வாக்கியுள்ள திட்டத்தில் இந்திய பாசிச அரசாங்கம் மிகுந்த விருப்பத் துடன் தன்னை இணைத்துக் கொண்டு வருகிறது.

சீனா மீதான போர் வெடிக்குமானால், அந்த நாட்டில் மட்டுமின்றி உலகின் பிற பகுதிகளிலும் ஏற்படும் கொடூரமான பின்விளைவுகளை, அதிலும் குறிப்பாக உழைக்கும் மக்களுக்கு ஏற்படும் பாரதூரமான பாதிப்புகளை எண்ணிப் பாருங்கள்.

**எனவேதான், தமிழகத்திலும் இந்திய அளவிலும் பரந்து பட்ட பாசிச-ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியைக் கட்ட வேண்டிய உடனடித் தேவை எழுந்துள்ளது. இந்த இரண்டு சக்திகளையும் எதிர்ப்பவர்கள் யாரோ அவர்க ளுடன் மட்டுமே நாம் அரசியல், சமூக, பண்பாட்டுக் கூட்டணி கள் அமைக்க வேண்டும். இது தேர்தல் கூட்டணி அல்ல; அரசியல் கூட்டணி.**

தோழர்களே, இடதுசாரிக் கண்ணோட்டமும், பாசிச எதிர்ப்புணர்வும் கொண்டிருந்த காலஞ்சென்ற பிரெஞ்சுத் திரையுலக மேதை ழான் ரெனுவா (Jean Renior), மிகுந்த தயக்கத்துடனேயே தன் - வரலாற்றை எழுதினார். அதில் அவர் 'நான் யார்?' என்ற கேள்விக்குப் பதில் தருகிறார்; ''நாம் மிகவும் பெருமைப்பட்டுக் கொள்ளும் இந்தத் தனி நபருக்குள் இருப்பவர்கள் மழலையர் பள்ளியில் படிக்கும் போது அவனுக்குக் கிடைத்த நண்பர்கள்; அவன் வாசித்த முதல் கதையின் நாயகன்; ஏன், அவனது ஒன்றுவிட்ட சகோதரன் யூஜி யின் நாயும்தான். நாம் நம் ஊடாக மட்டுமே வாழ்வ தில்லை; நமது சூழல் நம்மை வடிவமைக்கிறது. நான் இப்போது யாராக இருக்கின்றேனோ, அவனை உருவாக்கு வதில் ஒரு பாத்திரம் வகித்த மனிதர்களையும் நிகழ்வுகளை யும் நினைவுகூர முயன்றுள்ளேன்.''

நினைவுகூரும் செயலை, எனக்குப் பதிலாக, இந்த ஆவணப்படம் மேற்கொண்டுள்ளதாகக் கருதி, உங்கள் அனைவரையும் தலைசாய்த்து வணங்குகிறேன்.


**திருக்கோவிலூர், மணம்பூண்டியில்,**
**27.9.2016 செவ்வாய் மாலை 4.00 மணிக்கு**

❖ ஞானியார் அடிகள்
❖ தந்தை பெரியார் ❖ ம.ரா. குமாரசாமி

ஆகிய முப்பெருந்தலைவர்களின் சிலைகள் **திறப்பு விழாவும்**
**பெரியார் 138ஆம் பிறந்த நாள் விழாவும்** நடைபெறும்.
**தமிழ்ப் பெருமக்கள் திரளாக வாருங்கள்!**

மணம்பூண்டி **கார்த்திகேயன்**
மணம்பூண்டி **கலைமணி**
அரகண்டநல்லூர் **குணசேகரன்**

**விழா ஏற்பாட்டாளர்கள்**

## தூக்கிலிருந்து மீண்ட மக்கள் பேராளி - ஏ.ஜி.கே. விடைபெற்றார்

தன் வாழ்நாள் முழுவதும் மக்கள் தலைவராக வாழ்ந்த அந்தணப்பேட்டை கோபாலசாமி கஸ்தூரிரங்கன் புதன்கிழமை (10.8.2016) மாலை முடிவெய்தினார். 60-களில் இன்றைய நாகப்பட்டினமான அன்றைய கீழத்தஞ்சையில் ஏ.ஜி.கே. அசலான மக்கள் தலைவராக இருந்தார். முதலில் திராவிடர் கழகம், பின்பு இடதுசாரி இயக்கம் என இரண்டின் சாரத்தையும் தன்னுள் ஏந்திய அவர், வெற்றிகரமான மக்கள் திரள் பேராட்டத்தை முன்னெடுத்தார்.

அன்றைய கீழத் தஞ்சை முதலாளிகளுக்கு, நிலவுடைமையாளர்களுக்கு அவர் சிம்ம சொப்பனம். ஒடுக்கப்பட்ட மக்களின் கூலி உயர்வுக்காகவும், சுயமரியாதைக்காகவும் அவர் நடத்திய போராட்டங்கள் நிறைய. ஒரு முறை, ஏ.ஜி.கே. தாக்கப்பட்டார் என்ற செய்தி அறிந்து மக்கள் கொந்தளித்தனர். அவரைத் தாக்கியதாகச் சொல்லப்பட்ட முதலாளியின் வீட்டுக்குள் புகுந்து வீட்டை உடைத்து நொறுக்கினர். அந்த வீட்டிலிருந்த மூன்று ஆண்கள் கொல்லப்பட்டனர்.

வீட்டில் இருந்த குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் பாதிப்பு இல்லை. சம்பவம் நிகழ்ந்தபேது, ஏ.ஜி.கே. மருத்துவமனையில் இருந்தார். காயமடைந்திருந்த அவர் சாகட்டும் என பேலீஸார் காத்திருக்க, அதற்குள் அந்தணப்பேட்டையில் அந்தக் கொலைச் சம்பவம் நடந்திருந்தது. இந்த வழக்கில் முதல் குற்றவாளியாக ஏ.ஜி.கே. சேர்க்கப்பட்டார். அவருக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. சீர்காழி கிளை நீதிமன்றத்தில் அவர் சரணடைந்த சம்பவம், புனைகதைகளை மிஞ்சக்கூடிய பரபரப்புமிக்கது. கிளைச் சிறைக்கு அவரை அழைத்துச் சென்ற பேலீஸார் அவரை அவமானப்படுத்த வேண்டும் என்றே காலிலும் கையிலும் விலங்கு மாட்டித் தெருவில் நடத்திச் சென்றனர். இதையும் தனக்குச் சாதகமாக மாற்றிக்கெண்ட அவர், வழியெங்கும் நின்ற மக்களிடம் பேசத்தெடங்கினார். மதியம் ஒரு மணிக்குக் கிளம்பிய ஊர்வலம் மாலை 4.30-க்கு கிளைச் சிறையை அடைந்தது. இத்தனைக்கும் நீதிமன்றத்துக்கும் கிளைச் சிறைக்கும் இடையிலான தூரம் வெறும் ஒன்றேகால் கி.மீ. மாத்திரமே. சிறையின் இரும்புக் கம்பிகளால் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை.

தமிழகச் சிறை வரலாற்றிலேயே சுதந்திர இந்தியாவில் சிறைப்பட்டோர் நலஉரிமைச் சங்கம் என்ற இரகசிய அமைப்பை நிறுவிய அவர், தியாகு, லெனின் போன்றோரின் துணையுடன் கட்டுக்கோப்புமிக்க சிறைப் போராட்டத்தை திருச்சி மத்திய சிறையில் தெடங்கினார். தமிழகச் சிறை வரலாற்றில் அதற்கு முன்னும் பின்னும் அப்படியான ஒரு சிறைப் போராட்டம் இல்லை என தியாகு குறிப்பிடுவார். அந்தப் போராட்டத்தையே 1983இல் மற்ற சிறைகளுக்கு தியாகு போன்றோர் விரிவாக எடுத்துச் சென்றனர். ஏ.ஜி.கே.வை எப்படியாவது தூக்குமரத்தில் ஏற்றிவிட வேண்டும் என்று ஆட்சியாளர்கள் மிகஆர்வமாக இருக்க, 1973இன் இறுதிவாக்கில் அப்பேதைய குடியரசுத் தலைவர் வி.வி.கிரி, அவரது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார். அவரது தண்டனைக் குறைப்புக்காக பெரியார், ஈ.வி.கே.சம்பத் போன்றவர்கள் குரல் கொடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. எளிய வாழ்க்கை; 1984இல் முழு ஆயுள் தண்டனையும் கழிந்து விடுதலையானார் ஏ.ஜி.கே. 52 வயதுக்குப் பின்புதான் திருமணம், குழந்தைகள் என்று எளிய சந்தோஷங்கள் நிகழ்ந்தன. பெரியாரியத்தையும் மார்க்ஸியத்தையும் மிகச்சரியான புள்ளியில் இணைத்தவர் அவர். சமரசமற்ற எளிய வாழ்க்கை அவருடையது. இது போன்ற அரிதான மனிதர்களின் வாழ்வை ஆவணப்படுத்தும் எந்த ஏற்பாடும் நம்மிடம் கிடையாது. அவரைப் பற்றி நம்மிடமிருக்கும் சிறந்த சித்திரங்கள் தியாகுவின் எழுத்து வழி உருவாகும் சித்திரமும், பசு.கவுதமன் அவரிடமே உரையாடித் தொகுத்த ஏ.ஜி.கஸ்தூரிரங்கனின் நினைவுகளும் நிகழ்வுகளும் எனும் புத்தகமும்தான். அவரது எதிரிகளால்கூடப் பறிக்க முடியாத உயிரை, அவரது 84ஆவது வயதில் இயற்கை பறித்துக் கொண்டது.

## புதிய ருஷியா

1929ஆம் வருடம், முடிய பொது ஜனத் தீர்மானப்படி, 1149 மாதா கோவில்கள், 126 மடங்கள், 124 மசூதிகளுட்பட்ட கிராமப் பிரதேசத்தில் 2000 பிரார்த்தனை ஸ்தலங்களையும், நகரப் பிரதேசங்களில் 5000 பிரார்த்தனை ஸ்தலங்களையும் உடைத்திருக்கின்றனர். இவற்றில் அநேக கட்டடங்களில் கல்விச்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மற்றவைகளைச் சிசுபரிபாலன விடுதிகளுக்கும், நெருப்பணைக்கும் இயந்திர ஸ்தாபனத்திற்கும், ஆஸ்பத்திரிகளுக்கும், ஹோட்டல்களுக்கும் உபயோகப்படுத்திக் கொண்டனர். ஸெயின்ட் ஐசக் ஆலயத்தில் பொருட்காட்சிச்சாலையை ஸ்தாபித்திருக்கின்றனர். மேலும் அந்த ஆலயத்தில் தேச மக்கள் விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிச் சோதனைகளை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். பூமியின் ஓட்டத்தை விளக்கிக் காட்டும் பிரஞ்சு விஞ்ஞான நிபுணர் பௌகால்ட் செய்து காட்டிய பெண்டுலம் ஆட்ட சம்பந்தமான சோதனைகளை நடத்தக்கூடுமெனத் தெரிகிறது.

- **“குடிஅரசு”. 17-3-1930**

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

### சூலூர் சூ.செ. குமரவேல் இல்லத் திருமணம் சூ.கு. வருண் - இர. இரம்யா இல்லறம் ஏற்றனர் மணமகள் - ஈ.வெ.ரா. நாகம்மையாரின் கொள்ளுப்பேத்தி



சாதி மறுப்புத் திருமணமாக நிகழ்ந்த சூ.கு. வருண் - இர. இரம்யா திருமணத்தைத் தோழர் வே. ஆனைமுத்து நடத்தி வைத்தார்.

கோவை (சிங்காநல்லூர்) வெங்கடலட்சுமி திருமண மண்டபத்தில், 17.8.2016 புதன் காலை நிகழ்ந்த திருமண விழாவிற்குத் தோழர் கோவை. கு. இராம கிருட்டிணன் தலைமை தாங்கினார், பாடலாசிரியர் அறிவுமதி, புலவர் செந்தலை ந. கவுதமன் வாழ்த்துரை வழங்கினர்.

சூலூர் சூ.செ.குமரவேல்-உமாமகேசுவரி இணையரின் மகன் மணமகன். ஈரோடு (திண்டல்) கோ. இரவி - நா. நாகலட்சுமி இணையரின் மகள் மணமகள்.

சண்முகதேவி கருப்பண்ணன், இந்திராதேவி செல்வராசு, தனலட்சுமி கோபாலகிருட்டிணன், சாந்தி நடராசு, மரகதவள்ளி நாகப்பன் முதலிய மூத்த மகளிர் - மங்கல நாண் எடுத்து வழங்கினர்.

வெ.ஆறுச்சாமி, வெ.க.சண்முகவேல் முன்னிலை வகித்தனர். இருவரும் மணமக்களை அறிமுகம் செய்து உரையாற்றினர்.

திரு.சூ.செ.சுப்பிரமணியம் வரவேற்புடன் தொடங்கிய நிகழ்ச்சி, திரு. நா.இர. விவேக் நன்றியுரையுடன் இனிதே நிறைவுற்றது.

கொள்கை மாநாடு போல் பல்லாயிரக்கணக்கில் உறவினர்களும், நண்பர்களும் இயக்கத் தோழர்களும் திரண்டிருந்தனர். சைவ, அசைவ இருவகை விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது,

மணமக்கள் சார்பில் பெரியார் - நாகம்மை அறக்கட்டளைக்கு முதல் தவணையாகப் பத்தாயிரம் உருபா தோழர் வே. ஆனைமுத்து அவர்களிடம் மகிழ்வுடன் வழங்கப் பெற்றது.

### மே. பிரபு - தி. குறளழகி

பெரம்பலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளரும், 1950 முதல் தி.க.வில் பணியாற்றி தந்தை பெரியாரின் பாராட்டைப் பெற்றவரும், வரகூர் ஊராட்சித் தலைவராக 15 ஆண்டுகள் விளங்கியவருமான மா. நாராயணசாமி-அலமேலு ஆகியோரின் மகன்வழிப் பெயரனும், மூத்தமகன் மேகநாதன்-பூங்கொடி ஆகியோரின் மகனுமான **பிரபு,** இலந்தங்குழி தி.க. பெரிய தங்கவேலு மகன் சிவநேசன் - சரோஜா ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், தில்லை நாயகம் - முத்தமிழ்ச்செல்வி மகளுமான **குறளழகி** ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா, பெரம்பலூர் - எளம்பலூர் சாலையிலுள்ள கர்ணம் சுப்பிரமணியம் சகுந்தலா திருமண மண்டபத்தில், 21.8.2016 ஞாயிறு காலை 7.30 மணிக்கு வே. ஆனைமுத்து தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

பா.அசோக்குமார் வரவேற்பு உரைத்தார். மா. நாராயணசாமி அறிமுக உரையாற்றினார். தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் ஓவியர் கி. முகுந்தன், அரியலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலர் இரா. கலியமூர்த்தி, இலந்தங்குழி இரா.இராமசாமி, மருத்துவர் கோசியா, வெ.சமரசம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். த. செயபாலன் நன்றி உரைத்தார்.

மணமக்கள் "சிந்தனையாளன்" பத்தாண்டுக் கட்டணமாக உருவா 1,500; வளர்ச்சி நிதியாக உருவா 1,000 வழங்கி மகிழ்ந்தனர். விழா 9.30 மணிக்கு முடிவுற்றது.

### ச.வெ. கமலி - ச.வெ. பாலாஜி பிறந்த நாள் வளர்ச்சி நிதி

தொழுதூர் - இராமநத்தம் மா.பெ.பொ.க. செயல் வீரர் க. முத்துசாமி-மணிமேகலை இணையர் வே. ஆனைமுத்து தலைமையில் திருமணம் செய்து கொண்டனர். அவர்களின் மகள் சமரசம் - மருமகன் வெங்கடேசன் ஆகியோரின் மகள் கமலியின் 14ஆம் பிறந்த நாள் 17.8.2016இல் வந்ததை முன்னிட்டும், மகன் பாலாஜியின் 12ஆவது பிறந்த நாள் 6.8.2016 இல் வந்ததை முன்னிட்டும் மகிழ்ச்சி மீதூர, 'சிந்தனையாளன்' வளர்ச்சி நிதியாக, 21.8.2016இல் உருவா 2000 வழங்கினர், பெற்றோர். வாழ்க கமலியும் பாலாஜியும்!

**- ஆசிரியர் குழு**

### சூலூர் மென்மொழி பிறந்த நாள் வளர்ச்சி நிதி

சூலூர் பாவேந்தர் பேரவைத் தலைவர் வெ.க. சண்முகவேல், தம் பெயர்த்தி மென்மொழியின் பிறந்த நாள் 23.2.2016இல் வந்ததை நினைவு கூரும் வகையில், 'சிந்தனையாளன்' வளர்ச்சிக்கு உருவா 1,000/- 19.8.2016இல் வழங்கினார்.

வாழ்க மென்மொழி!

**- ஆசிரியர் குழு**

# அனைவரும் பகுத்தறிவாளர்களே!

**த**ந்தை பெரியார் காலத்திலிருந்து தமிழகத்தில் பகுத்தறிவாளர் என்றால் கடவுள் நம்பிக்கையற்றவர் என்று பலரும் குறிப்பிட்டுப் பேசுவார்கள், பகுத்தறிவாளர் என்றால் நாத்திகர்; மதக்கொள்கைக்கு விரோதி; சாதி பார்க்காதவர்; பெண்களுக்குச் சம உரிமை கொடுப்பவர்கள்; அரசியலில் அனை வர்க்கும் நன்மை கிடைக்கும் கொள்கை கொண்டவர்கள்; அனைத்துச் சாதியினருக்கும் பொதுவான கல்விக்கூடம்; வழிபாட்டுத் தலங்கள், இடுகாடுகள் இருக்க வேண்டும் என்ற சமஉரிமைக் கொள்கை உடையவர்கள்; ஒரு நாடு என்றால் மதத்திற்காக சட்டம் கூடாது; தனி மதச்சட்டத்தை ஒழிக்க வேண்டும்; அனைவருக்கும் பொதுச் சட்டம் வேண்டும்; அனைத்திலும் அனைவருக்கும் சம உரிமை வேண்டும் முன்னேறாத சமுதாயத்திற்கு முன்னுரிமைக் கொடுக்க வேண்டும் என்று கேட்பவர்கள் பகுத்தறிவாளர்களே. இவர்கள் மட்டும் பகுத்தறிவாதிகள் என்றால், மற்றவர்கள் யார்?

பகுத்தறியும் எண்ணம் மனிதனுக்கு மிகச்சிறந்த அறிவு. ஆண்-பெண், தாய்-தந்தை, உழைப்பு-உயர்வு, ஏற்ற பருவ காலம், திறமைசாலி, பொய்மை - உண்மை, பணம் - பேப்பர் போன்ற பல சிந்தனைகளைப் பகுத்தறிந்து சிந்திக்கக் கூடியவர் அனைவரும் பகுத்தறிவாளர்களே. கடவுள் என்று ஒன்றுமில்லை; இயற்கை வளங்களைக் காக்க வேண்டும்; கல்லால் செய்யப்பட்ட பொம்மைகளினால் ஒரு நன்மையும் இல்லை. மனம் அமைதியானாலே நல்ல சிந்தனையும் நன்மையும் கிடைக்கும் என்ற எண்ணம் கொண்டவர்கள் அனைவரும் பகுத்தறிவாளர்களே. உழைத்தால்தான் உயர முடியும். பலர் உழைப்பை ஒரு முதலாளி பறித்துக் கொண்டால் உழைப்பவர்க்கும் உயர்வு கிடைக்காது. ஒருவர் மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டினால் நிறுவனமோ அமைப்புகளோ நீண்டநாள் நீடிக்காது.

அனைத்தையும் பகுத்தறிந்து சிந்தித்துச் செயல்படுவதுதான் பகுத்தறிவு. இப்பொழுது மாநிலக் கட்சிகளிலும் தேசியக் கட்சிகளிலும் உள்ள அனைத்து அரசியல் முன்னோடிகள் அய்யா, அம்மா, தலைவா என்று தூபம் போட்டால்தான் கட்சியில் நீடிக்க முடியும் என்று கருதி முழக்கமிடுதல், கைதட்டுதல், காலில் விழுதல் போன்ற இழிவான எண்ணமென்று அறிந்தும் பதவி சுகத்திற்காகவும் சுகவாழ்க்கைக்காகவும் செயல்படுவதும் ஒருவகை பகுத்தறிவே. அனைத்தையும் பகுத்தறிந்துதான் அனைவரும் நல்லதையும், கெட்டதையும் செய்கின்றனர்.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி செப்டம்பர்-2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்ப்பென்னத்தூர் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இளவரசன்** தமிழ்க்களம் | அரியலூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - செப்டம்பர் - 2016

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் .... | 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்ப்பென்னாத்தூர் .... | 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் .... | 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119